# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 128 பங்குனி 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 03 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## இன்று நள்ளிரவு வரை ரணிலுக்கு மைத்திரி கெடு

### பதவி விலகா விட்டால் நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவளிக்கவும் முடிவு

கொழும்பு, ஏப்ரல் 3
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துவிட்டது. நாளை (இன்று) நள்ளிரவுக்குள் முடிவொன்றை எடுக்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணிலிடம் கூறுங்கள். இறுதிநேரத்தில் எம் மீது விமர்ச னங்களைத் தொடுக்க வேண்டாம்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்களிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகக் கூறியுள்ளார் என >> 06

## கோட்டையில் மலர்ந்தது மொட்டு

கொழும்பு. ஏப். 3
இலங்கையின் தலைநகரான சிறிஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் மேயராக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சியின் மதுர வித்தானகே தெரிவு செய்யப்பட்டார்.
சிறிஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கான மேயர் தெரிவு நேற்று நடைபெற்றது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் பரிந்துரைக்கப்பட்டிருந்த மருத வித்தானகே 23 வாக்குகளைப் பெற்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் சந்திம நயனஜித்துக்கு 11 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.
12 மேலதிக வாக்குகளால் சிறி ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபையை பொதுமக்கள் முன்னணி கைப்பற்றியது.
பிரதி மேயராக >> 06

## தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3
யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் நேற்று மாலை நடந்த தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். >> 06

### பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகிறது மன்று

### ரணிலின் தலைவிதி நாளை தெரியும்

கொழும்பு. ஏப். 3
பரபரப்பான அரசியல் சூழ்நிலைகளுக்கு மத்தியில் நாடாளுமன்றம் இன்று சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூட வுள்ளது. >> 08

### நாவற்குழியில் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு

## பிரதிவாதிகளின் சார்பாக சட்டமா அதிபர் முற்படலாம்

### யாழ். மேல் நீதிமன்று கட்டளை

>> 03

## ஈ.பி.டி.பி., சு.கா., ஐ.தே.க. ஆதரவுடன் வலி. வடக்குச் சபை கூட்டமைப்பிடம்

### மீண்டும் தவிசாளரானார் சுகிர்தன்

யாழ்ப்பாணம், ஏப். 3
வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆட்சிநிர்வாகத்தை ஈ.பி.டி.பி. சிறிலங்கா சுதந்திரக் கட்சி. ஐக்கிய தேசியக் கட்சிக ளின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் >> 06



## பிரபாகரன் வாழ்க்கை திரைப்படம் ஆகின்றது

சென்னை. ஏப்.3
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்று திரைப்படமாக எடுக்கப்படவுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள் >> 06



## நீர்ப்பாசனக் குளங்கள் சீரமைப்பு திட்ட ஆரம்ப நிகழ்வு அராலியில்

### ஆரம்பித்து வைத்தார் சந்திரிகா

யாழ்ப்பாணம், ஏப்.3
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களைச் சீரமைக்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம், அராலி பெரியகுளத்தில் நடைபெற்றது.
முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிகழ்வில் கலந்து கொண்டு திட் >> 06

## வலி. தென்மேற்குச் சபை தமிழ்க் கூட்டமைப்புக்கு

### ஏகமனதாக ஜெபநேசன் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.
வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் ஆட்சியை போட்டியின்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றியது. அந்தப் பிரதேச சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிசாளராக முன்மொழிந்த >> 06

## டெங்கை ஒழிக்க உரஞ்சிக் கழுவுக

யாழ்ப்பாணம், ஏப். 3
பாடசாலைகளில், வீடுகளிலுள்ள தண்ணீர்த் தொட்டிகளில் டெங்குக் குடம்பி பரவி வருகின்றமை சிக்கலுக்குரியதாகிவிட்டது. 3 நாள்களுக்கு ஒருதடவை கட்டாயம், தொட்டியிலுள்ள தண்ணீரைத் திறந்து விட்டு, தொட்டியின் சுவர்ப் பகுதியை தென்னம் மட்டை போன்றவற்றால் உரஞ்சிக் கழுவுதல் வேண்டும். சுவர்ப் பகுதியை உரஞ்சாது விடில் குடம்பிகள் சுவரில் ஒட்டியிருந்து தண்ணீர் நிரப்பும் போது மீண்டும் உயிர்த்துவிடும். நுளம்பு பெருகும் என்று தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

(விரிவு பக். 11)



## யாழ். பல்கலையில் கொடும்பாவி எரிப்பு

### ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பறை அடித்து ஒப்பாரி வைத்து நேற்றுக் கொடும்பாவி எரிக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரி >> 06

## மூர்க்கத்தனமான தாக்குதலில் மகள் சாவு: தாய் படுகாயம்

### வடமராட்சி, அம்பனில் கோரம்

வடமராட்சி, ஏப்.3
வீட்டில் தனித்திருந்த தாயும், மகளும் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான மகள் உயிரிழந்தார். தாய் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு, அம்பன் கிராமத் >> 06

## 10 வீத அதிகரிப்புக்கு ஊழியர்கள் இணக்கம்

### இன்று முடிவு தெரியவரும்

யாழ்ப்பாணம், ஏப். 3
பல்கலைக்கழக ஊழியர்களுக்கு முதற்கட்டமாக 10 வீத சம்பள அதிகரிப்பு வழங்க நேற்று இணக்கம் காணப்பட்டது. அதனுடன் தொடர்புடைய கொள்கைகள் உரிய முறையில் இன்று தீர்மானிக்கப்பட்ட பின்னரே போராட்டத்தை முடிவுறுத்துவது தொடர்பில் கூறமுடியும் என்றும் தெரிவிக் >> 06

## அரசியல் கைதிகள் பலருக்கு அறிக்கை வந்ததும் விடுதலை

### தலைமை அமைச்சர் உறுதி என ஈ.பி. ஆர். எல்.எவ். தெரிவிப்பு

வவுனியா, ஏப்ரல் 3
சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் தயாரிக்கப்பட்ட அறிக்கை கிடைத்ததும் தற் போது சிறையில் உள்ள பலருக்கு விடுதலை வழங்கப்படும் என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க உறுதியளித்துள்ளார். >> 06

# தீர்மானத்தைத் தோற்கடித்து தேர்தலையும் நடத்துவோம்

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு,ஏப் 3

**தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோல்வியடையச் செய்வதோடு 2020 ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலை நடத்தவும் தயார்.**

இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாளையதினம் நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதோடு, பெயர் கூவி வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது. அந்தத் தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோல்வி காணச் செய்வோம்.

யாராலும் எதிர்பார்க்கப்படாத சக்திகள், பொது எதிரணியால் நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக ஒன்றிணைந்துள்ளன.

2015ஆம் ஆண்டு கிடைத்த மக்கள் ஆணையைப் பாதுகாக்கும் கடமை அனைவருக்கும் உள்ளது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வருவதற்கு எதிர்ப்பு வெளியிட்டவர்கள், தேசியப் பட்டியலில் நாடாளுமன்றுக்கு வந்து பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். என்றார்.

மகிந்த அணியினரால் 55 பேரின் கையெழுத்துடன் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. (ந.ரி4)

# சட்டவிரோத சம்பவங்களை தடுக்கக் கோரி போராட்டம்

திருகோணமலை,ஏப் 3

திருகோணமலை உப்புவெளியில் பொதுமக்கள் அனுராதபுரசந்தை கண்டி பிரதான வீதியில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டம் நேற்று முன்தினர் இரவு இடம்பெற்றது.

உப்புவெளி அன்புவழிபுரம் கிராமத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத சம்பவங்களை உடனடியாகக் கட்டுப் படுத்துமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த உப்புவெளி பொலிஸார் உடனடியாக தாம் சம்பந்தபட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட குற்றவாளி களை உடனடியாகக் கைது செய்யாது விடத்து தாம் மீண்டும் பெரிய அளவிலான ஒரு போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளேம் என்று போராட்டக்காரர் தெரிவித்தனர். (ந-ரி4,40)

# கல்விசாரா ஊழியர்கள் நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டம்

மட்டக்களப்பு,ஏப் 3



கிழக்குப் பல்கலைக் கழக கல்விசாரா உழியர்கள் இன்று அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மாதாந்த நிலுவைக் கொடுபனவு உட்பட ஆறு அம்ச கோரிக்கைகளை முன் வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக முன்றிலில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 34 நாட்களாக பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போதிலும் உயர்கல்வி அமைச்சோ, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ எந்தவித நடவடிக்கைளையும் மேற்கொள்ளாத நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (ந.ரி4)

# தம்புள்ளையில் வாகன விபத்து

## ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் உயிரிழப்பு

தம்புள்ளை கொழும்பு பிரதான வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்துள்ளனர்.

கலேவெல, யட்டிகல் பொத்த பகுதியில் ஓட்டோவும், லொறியும் நேருக்கு நேர் மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், மகன் மற்றும் மகள் ஆகியோரே இதில் உயிரிழந்துள்ளனர்.

கந்தளாய் பிரதேசத்தில் இருந்து அத்தனகல்ல பகுதிக்குச் சென்ற ஓட்டோ மற்றும் மீகொடை பொருளாதார மத்திய நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த லொறி என்பன நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

# குடும்ப தகராறில் ஒருவர் உயிரிழப்பு

நுவரெலியா,ஏப் 3

திம்புள்ள பத்தனை யதன்சைட் தோட்டப் பகுதியில் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவர் மண் வெட்டியால் தாக்கி கொலை செய்யபட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

# யானை தாக்குதலில் பெண்ணொருவர் உயிரிழப்பு

பொலன்னறுவை,ஏப் 3

பொலன்னறுவை வெலி கந்தயில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

நீர்எடுப்பதற்காக கிணற்றுக்குச் சென்ற போதே இந்த யானைத் தாக்குதல் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அசேலபுரத்தைச் சேர்ந்த 49 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். (ந.ரி4)

சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி

# மனுவில் கையொப்பமிட்டனர் மாணவர்களும் ஆசிரியர்களும்

கிளிநொச்சி,ஏப் 3

ஆனந்தசுதாகரின் விடுதலையை வலியுறுத்தி மாணவர்கள், ஆசிரியர்களால் கருணை மனுவில் கையொப்பம் இடும் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப் பட்டது.

ஆனந்த சுதாகரின் பிள்ளைகள் இருவரும் கல்வி பயிலும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இந்தக் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மனு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

இதில் 2500 மேற்பட்ட கையொப்பங்கள் திரட்டப்பட்டது.



ஆனந்த சுதாகரின் பிள்ளைகள் இருவரினதும் செயற்பாடுகள் கடந்தகாலத்தை விட தற்போது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. கல்வி கற்க விருப்பமற்றவர்களாக, அதிக யோசனையில் உள்ளவர்களாகவும், தனிமையை விரும்புபவர்களாகவும் இவர்கள் இருப்பதை கண்டு பாடசாலை சமூகமாகிய நாம் மிகவும் கவலை அடைகின்றோம். இவர்களின் இந்த நிலையை மாற்றுவதற்கு ஆனந்த சுதாகரை விடுதலை செய்ய சம்மந்தப்பட்டவர்களை பாடசாலை சமூகமாக வேண்டுகின்றோம் இவ்வாறு பாடசாலை முதல்வர் தெரிவித்தார். (ந.ரி4)

# கடவுளை சத்தமாக வழிபட வேண்டிய தேவை இல்லை

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப் 3

கடவுளுக்கு காது நல்ல கூர்மை. அதனால் சத்தமாக வழிபட வேண்டிய தேவை இல்லை இவ்வாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவித்தார்.

மத வழிபாட்டுத் தலங்களில் வழிபாடுகளில் ஈடுபடுவோர் அதிக சத்தத்தை எழுப்பி வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் அதனால் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது என்றும் நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஒருவர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அதிகாலையில் மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் மத வழிபாட்டு இடத்தில் கூடுவோர்கள் அதிக சத்தம் எழுப்பி வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். இதயநோய் உள்ள நான் அதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றேன் என்று தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன் போதே யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது;

எங்கள் உரிமை மத வழிபாட்டு உரிமை என்பது மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்ககூடாது.

தற்போது ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனைகள் கணிசமான அளவு குறைந்து உள்ளது. கடவுளை அமைதியாக மற்றவர்களுக்கு, மற்ற மதத்தினருக்கு இடையூறு விளைவிக்காத வகையில் வணங்குங்கள்.என்றார்.

விசாரணைகளின் பின் வழக்கு அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-ரி4,37)

## நீதிமன்றத்துக்கு ஹெரோயின் கொண்டு சென்ற பெண் கைது

கொழும்பு,ஏப்.3

கொழும்பு நீதிமன்றக்கட்டடத் தொகுதிக்கு ஹெரோயின் எடுத்துச் சென்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவரே நேற்றுக் கைது செய்யப்பட்டார் சந்தேகநபரிடமிருந்து. 4 கிராம் ஹெரொயின் மீட்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. தந்தையின் வழக்கு விசாரணைகளைக் காண நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தந்திருந்தபோதே இவர் கைது செய்யப்பட்டார்எனவிசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந.ரி2)

## காணி சுவீகரிப்பு விசாரணைகள் ஆரம்பம்

ஹற்றன்.ஏப்.3

காசல்ரீ நீர்தேக்க கரையோர பகுதியில் காணி அபகரிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். வனராஜா பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு இந்த காணி சுவீரிப்பு இடம்பெற்றது. காசல்ரீ நீர்தேக்கத்திற்கும். நோட்டன் ஹற்றன் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட 30 ஏக்கர் வரையிலான காட்டுப்பகுதியிலேயே 20 இற்கும் மேற்பட்ட தனியார்களால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.
காணி சுவீகரிப்பு தொடர்பில் வனராஜா தோட்ட நிர்வாகமும் ஹற்றன் பொலிஸாரும் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (ந.ரி2)

## நாவற்குழியில் 24 இளைஞர்கள் கைது

# பிரதிவாதிகள் சார்பாக வழக்கில் சட்டமா அதிபர் முற்பட முடியும்

### யாழ். மேல் நீதிமன்று கட்டளை

யாழ்ப்பாணம், ஏப்.3

**யாழ்ப்பாணம், நாவற்குழியில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணைகளில் பிரதிவாதிகள் சார்பாக சட்டமா அதிபர் முன்னிலையாக முடியும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.**

இந்த மனு மீதான விசாரணை நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது மேல்நீதிமன்ற நீதிபதி இவ்வாறு கட்டளை வழங்கினார்.
இந்த வழக்கில் முதலாவது பிரதிவாதிகயாகக் குறிப்பிடப்பட்டுள்ள வர் அந்தக் காலப் பகுதியில் நாவற்குழி இராணுவ முகாமுக்குப் பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் துமிந்த கொப்பட்டிவெலான அரச கடமையில் இருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
அரச அதிகாரிகளுக்கு எதிரான வழக்குகளில் சட்டமா அதிபர் முன்னிலையாக வேண்டிய கடப்பாடு உள்ளது. விரும்பினால் மாத்திரமே அவர் அதிலிருந்து விலகிக் கொள்ளமுடியும்.
மன்றில் முன்வைக்கப்பட்டுள்ள ஆள்கொணர்வு மனு அரசமைப்புக்கு உட்பட்டே முன்வைக்கப்பட்டுள்ளது. உரிமை மீறப்பட்டுள்ளதா? இல்லையா? என ஆராய்ந்து உரிமை மீறப்பட்டுள்ளது என்பதை மன்று கண்டறியும் பட்சத்தில் முதலாவது பிரதிவாதியான மேஜனர் ஜெனரல் துமிந்த கொப்பட்டிவேலானவுக்கு எதிராகக் குற்றவியல் வழக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் தாக்கல் செய்யப்படும். அதை சட்டமா திணைக்களம் கொண்டு நடத்தும். ஆள்கொணர்வு மனு மீதான கட்டளை மன்று வழங்கும் வரையில் முதலாவது பிரதிவாதியான மேஜர் ஜெனரல் சார்ப்பில் சட்டமா அதிபர் முன்னிலையாகலாம் என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி தனது கட்டளையில் தெரிவித்தார்.
அதேவேளை, நேற்று பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர ஆள்கொணர்வு மனு மீதான விசாரணைக்கு ஆட்சேபனை தெரிவித்து மன்றில் விண்ணப்பம் செய்தார்.
1996ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் 1998ஆம் ஆண்டே சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகால தாமதத்தின் பின்னரே முறைப்பாடு செய்யப்பட்டது. அதுபோன்று 21 ஆண்டுகளின் பின்னர் கடந்த ஆண்டே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில ஆவணங்கள் தெளிவில்லாதுள்ளன. அதன் உண்மைப் பிரதிகள் இணைக்கப்படவில்லை. இணைக்கப்பட்ட சில ஆவணங்களில் இடைவெளிகள் நிரப்பப்பட்டன போன்றுள்ளது என்று அவர் மனு மீதான விசாரணைக்கு ஆட்சேபனை தெரிவித்தார். அதை மேல்நீதிபதி நிராகரித்தார்.
மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கே.சுபாசினி எழுத்துமூலமான விண்ணப்பத்தை மன்றில் சமர்ப்பித்தார். விசாரணை அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
பிரதிவாதிகள் சார்பில் பிரதி சொலிஸ்டர் ஜெனரல் செய்த்திய குணசேகரவுடன் அரச சட்டவாதி நாகரத்தினம் நிசாந்த் ஆகியோர் முன்னிலையாகினர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் வி.திருக்குமரனும், கே.சுபாசினியும் முன்னிலையாகினர்.

**பின்னணி**

1996ஆம் ஆண்டு நாவற்குழி படைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவெலான தலைமையிலான படையினர் 24 இளைஞர்களைக் கைது செய்தனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை மீட்டுத் தர வேண்டும் என்று அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த நவம்பர் 9ஆம் திகதி 12 ஆள்கொணர்வு மனுக்கள் தனித்தனியாகத் தாக்கல் செய்தனர்.
அவற்றில் 3 மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றின் மீதான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்பாக நடைபெற்று வருகின்றன. (ந-37)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.3

பாதையை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் வாயில் கதவுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். தங்கொட்டுவ பன்னல வீதியின் கெரன்வத்த பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த கயான் சமரக்கொடி (வயது38) என்பவரே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதாலேயே விபத்து சம்பவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். என்று தெரிவிக்கப்பட்டது. விபத்து தொடர்பில் தங்கொட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந.ரி2)

## பயிற்சிப் பட்டறைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.3

ஜ.எஸ்.சோ நிறுவனமும் , யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனமும், கூட்டுறவுத் திணைக்களமும் இணைந்து நடத்தும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பயற்சிப்பட்டறையும், தலைமைத்துவத்தை உயர்த்தும் பயிற்சிப் பட்டறையும் இரு நாள்கள் நடைபெறவுள்ளன. இன்று 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யூ.எஸ் விடுதியில் மு.ப 9.30 மணிக்குப் பயிற்சிப் பட்டறை ஆரம்பமாகவுள்ளது என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத்தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்துள்ளார். (ந-113)

## சிவாஜி, ரவிகரன் மீதான வழக்கை ஒத்திவைத்தது முல்லை. நீதிமன்று

முல்லைத்தீவு, ஏப். 3

வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்தின் போது அரச சொத்துக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் வடமாகாணசபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன் உட்படநால்வருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.
வழக்கு மீதான விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எஸ்.லெனின்குமார் தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஏழு சந்தேக நபர்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார் ஏனைய மூவரையும் கைதுசெய்ய கால அவகாசம் கோரினர்.
கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணி சுவீக
ரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்தின் போது அரச சொத்துக்குச் சேதம் விளைவித்தமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன் உட்படநால்வருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இவர்கள் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.
மாதத்தில் இறுதி வெள்ளிக்கிழமைகளில் இவர்கள் நீதிமன்றில் கையெழுத்து இட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் மாதம் தோறும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் இவர்கள் கையெழுத்து இட்டுவருகின்றார்கள். (ந-ரி5,ரி3)

## விடுவித்த காணியை ராணுவம் மீளக் கையகப்படுத்த முயற்சி

### கிளி. அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப்.3

மக்களின் பாவனைக்கு விடுவிக்கப் பட்ட காணிகளை மீளவும் கைப்பற்றும் முயற்சிகளில் இராணுவம் இறங்கியுள்ளது என்று சமூக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள் ளன.
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் பிரஸ்தா பிக்கப்பட்டது.
கிளிநொச்சி மகா வித்தியாலயத் துக்குச் சொந்தமான 4 ஏக்கர் காணியை இராணுவம் விடுவித்திருந்தது. 2017ஆம் ஆண்டு இந்தக் காணி விடுவிக்கப்பட்ட போதும், அந்தக் காணியில் துடுப்பாட்டப் பயிற்சிகளை மேற்கொள்ள முயன்ற போது இராணுவம் தடை விதித்தது. அந்தக் காணிக்குள் செல்ல முடியாதவாறு வாயில் அடைக்கப்பட்டுள்ளதால் பாடசாலைச் சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியை இராணுவம் மீளவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது என்று இணைத்தலைவர்களுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.
இந்த விடயம் தொடர்பான விரிவான தகவல்களைத் தர வேண்டும் என்று முதலமைச்சர் கோரினார். அண்மையில் இராணுவ அதிகாரி ஒருவர் தன்னைச் சந்தித்தபோது வடக்கில் இராணுவத்தால் காணி தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டதால் தன்னிடம் தெரிவிக்க வேண்டும் என்று கூறினார். அதைத் தான் தீர்த்து வைப்பேன் என்றும் குறிப்பிட்டார். அதனால் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார். (ந-6)

## தனிநபர்களின் ஆக்கிரமிப்பால் இரணைமடுக் குளம் ஆபத்தில்

*அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு*

கிளிநொச்சி, ஏப்.3

இரணைமடுக் குளத்தின் கீழ் தனிநபர்கள் அத்துமீறி செய்கை செய்வதால் குளம் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது. கிளிநொச்சிக் குளத்தையும் ஆழப்படுத்திப் பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.
இரணைமடுக் குளத்தின் கீழ்ப் பகுதியில் தனிநபர்கள் அத்துமீறி செய்கையில் ஈடுபடுகின்றனர் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் குளம் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
அடுத்த செய்கையின் போது தனிநபர் ஆக்கிரமிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார்.
அதேவேளை, கிளிநொச்சிக் குளத்தை ஆழப்படுத்தி அதைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பில் திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தர வேண்டும் என்று இணைத்தலைவரான வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.
முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க திட்ட வரைவுகளைக் கோரியுள்ளார். இந்தத் திட்டத்தை அவரிடம் கூறினால் நடைமுறைப்படுத்த முடியும் என்று தெரிவத்த வடக்கு முதலமைச்சர் இன்று கிளிநொச்சி வரும் அவரிடம் இது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடுங்கள் என்றும் கூறினார். (ந-6)

# பணிநீக்கப்பட்டிருந்த நடத்துநர்களையும் மீண்டும் சேவையில் இணைய கட்டளை

## யாழ்ப்பாண மேல் நீதிமன்று நேற்று வழங்கியது

யாழ்ப்பாணம், ஏப். 3
வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையின் போது முறைகேடாகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்ட நடத்துநர்கள் ஐவரையும் உடனடியாக சேவையில் மீள இணைக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் பணி நீக்கம் செய்யப்பட்ட நடத்துநர்கள் தமக்கான பணியை மீளப் பெற்றுத்தரவேண்டும் என்பதை வலியுறுத்தி தொழில் நியாய சபையில் செய்த முறைப்பாட்டை அடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் 5 நடத்துனர்களது விண்ணப்பங்களையும் ஏற்ற தொழில் நியாய சபை அவர்களுக்குச் சார்பான தீர்ப்பொன்றை வழங்கியது.

தொழில் நியாய சபையின் தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து பிரதிவாதியான வடபிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 5 பேரையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு மேன்முறையீட்டு மனு தனித்தனியே தாக்கல் செய்தது. அதில் 5 பேருக்கு எதிரான மேன்முறையீட்டு மனுக்களும் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன இதன் போதே நடத்துநர்கள் ஐவரையும் உடனடியாக சேவையில் மீள இணைக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

"உயர் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், அரச பணியில் உள்ள ஒருவர் முறைகேடு செய்கின்றாராயின், அது பாரதூரமானதாகக் காணப்படுவது அவசியமாகும். எனினும் இந்த 5 பேரும் மேற்கொண்ட முறைகேட்டை இந்த நீதிமன்று பாரதூரமான முறைகேடாக எடுத்துக்கொள்ளவில்லை. எனினும் 5 பேரும் மேற்கொண்ட செயற்பாடானது அரச பணத்துக்கு அல்லது சொத்துக்கு இழப்பு விளைவிப்பதாகும். எனவே வடபிராந்திய போக்குவரத்துச் சபை எச்சரிக்கை செய்து நடத்துநர்கள் 5 பேரையும் மீள சேவையில் இணைக்குமாறு இந்த நீதிமன்று கட்டளையிடுகின்றது. பணி நீக்கம் செய்யப்பட்ட காலப்பகுதியையும் சேவைக்காலமாக இணைக்குமாறும் மன்று கட்டளையிடுகின்றது. எனினும் 5 பேராலும் கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகையையும் பணி நீக்க காலப்பகுதிக்கான சம்பளத்தையும் வழங்கவேண்டிய கட்டாய தேவை காணப்படவில்லை என்பதால் அதனை வடபிராந்திய போக்குவரத்துச் சபை வழங்கத் தேவையில்லை. தொழில் நியாய சபையால் வழங்கப்பட்ட தீர்ப்பை திருத்தங்களுடன் இந்த மன்று உறுதி செய்கிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

"பயணிகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு கட்டணச் சீட்டு வழங்கவில்லை, நியம கட்டணத் தொகைக்குக் குறைவான கட்டணத் தொகையைப் பயணியிடம் அறவீடு செய்தமை, வழங்கப்பட்ட கட்டணச் சீட்டுகளுக்கும் நடத்துநர்கள் வசமிருந்த பணத்தொகைக்கு இடையே பெருமளவு குறை மற்றும் அதிகம் மீதி காணப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் நடத்துநர்கள் 5 பேர் மீதும் சுமத்தப்பட்டிருந்தன. அதனைடிப்படையில் பணியில் முறைகேடு செய்த குற்றத்துக்கு அவர்கள் 5 பேரும் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (21,37)

# சைவப்புலவர்களுக்கு சமய தீட்சை வழங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப். 3
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் 2018 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சை எழுதுபவர்களுக்கான சமய தீட்சை வழங்கல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் மட்டக்களப்பில் நாவற்குடா இந்துசமய கலாசார மண்டபத்திலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே சமயதீட்சை பெற்றுக் கொள்ளதா பரீட்சார்திகள் சமயதீட்சையினை பெற்றுக்கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. இதுவரை சமயதீட்சை பெறாது பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்திகள் பரீட்சை எழுதுவதற்கு முன் வசதியாக சமய தீட்சை வழங்கும் கிரியைகளில் கலந்து சமயதீட்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தங்களுக்கு வசதியான இடத்திற்கு சென்று சமயதீட்சை பெற்றுக்கொள்ளலாம். சமயதீட்சை பெறுபவர்கள் ஆசாரசீலராக சமய கலாசார உடையுடன் தூய செம்பு ஒன்று கொண்டு வரவேண்டும். அத்துடன் தங்களால் இயன்ற குருதட்சனை கொண்டு வருக.

சமய தீட்சை பெற்றுக் கொண்டதற்கான மாதிரிப் ப்டிவத்தினை நிரப்பி தீட்சா குரு தீட்சைக்கு பொறுப்பானவர் ஆகியோரின் ஒப்பமிடப்பட்ட உறுதிப்படுத்தலுடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்பிக்க வேண்டுழ். சமயதீட்சை பெற்றவர்களே பரீட்சை எழுதும் தகுதியைப் பெற்றவர்களாக கருதப்படுவார். தேர்வுகள் 19, 20, 21, 22 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது என்றார்

# 777 இலக்கப் பேருந்து சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.3
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை 777 இலக்க பேருந்து சேவை நேரம் மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி தனியார் மற்றும் இ.போ.ச போக்குவரத்துச் சேவைகள் இரண்டினதும் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புறப்படும் இ.போ.ச பேருந்து சேவை நேரம் பின்வருமாறு

காலை 5.25, 6.20, 7.05, 8.40, 9.00, 10.00, 10.25, 10.50, மதியம் 11.30, 12.30, 1.25, 1.55, 3.00, பி.ப 3.40, மாலை 4.35, 5.20, 5.45, 6.40, இரவு 7.30 க்கும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை புறப்படும் இ.போ.ச பேருந்து சேவை நேரம் பின்வருமாறு :

காலை 6.10, 6.45, 7.30, 8.00, 8.15 (778), காலை 8.30, 9.15, 10.00, 11.00, 11.45, மதியம் 12.30, 1.00, 1.45, 2.45, 3.35, மாலை 4.15, 5.05, 5.45, 6.35, இரவு 7.15, 8.40 க்கும் இடம்பெறவுள்ளது.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புறப்படும் நேரம் பின்வருமாறு:

காலை 6.00, 6.50, 8.00, 9.45, மதியம் 12.00, 1.00, 2.30, மாலை 4.10, 5.00 க்கும் யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை புறப்படும் நேரம்: காலை 6.50, 9.00, 10.30, 11.30, மதியம் 2.15, மாலை 3.10, 4.45, 6.10, 7.00 க்கும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நன்றி மறக்காத உத்தமரென்றால் ஆனந்த சுதாகரனை விடுவிக்கவும்

## அரச தலைவர் மைத்திரிக்கு சமாசங்களின் சம்மேளனம் கடிதம்

**யாழ்ப்பாணம், ஏப். 3**
**தமிழர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரச தலைவர், உண்மையிலேயே நன்றி மறக்காத உத்தமனாக இருந்தால் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்தார்.**

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக அவர் விடுதலை செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் போர் காரணமாக பல பாதிப்புக்களை தமிழினம் சந்தித்துள்ளது. தமிழினத்தைத் தொடர்ந்து நலிவடைய செய்ய முடியாத நிலமை காணப்படுகிறது.

அரச தலைவர் தான் நன்றி மறக்காதவர் என்று யாழ்ப்பாணத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அவர் நன்றி மறக்காத உத்தமனாக இருந்தால், நிச்சயமாக இவரை பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்ய வேண்டும். அரசியல் கைதி என்று இருப்பவர்கள் அன்று இடம் பெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்புச் செய்திருந்தாலும் இன்று போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ளன. அதனால் அவர்களுடைய விடுதலை என்பது நிச்சயமாக தேவையான ஒன்றாக இருக்கிறது. அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். குறிப்பாக ஆனந்த சுதாகரனுடைய நிலைமை மிக மோசமான நிலமையாக காணப்படுகிறது. மனித உரிமை ஆணைக்குழுவுக்கு இந்த விடயம் ஆச்சரியப்பட வைக்கின்ற அளவுக்கு அந்த பிள்ளைகளி னுடைய பரிதாப நிலை காணப்படுகிறது.

எனவே அதனடிப்படையில் ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்பு அரச தலைவர் வழங்க வேண்டும். இதைவிட ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் அரச தலைவர் கருணையோடு மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும். இந்த அரச தலைவரை ஆட்சிக்கு அமர்த்துவதற்கு தமிழ் மக்கள் பல்வேறு பங்களிப்புக்களை வழங்கியிருக்கிறோம். அந்த பங்களிப்பாலேயே தற்போது மைத்திரிபால சிறிசேன அரச தலைவராக உள்ளார். தமிழ் மக்களுக்கு பல நன்றிகள் இவர் செய்ய வேண்டும். அந்த வகையிலே அரசியல் கைதிகளை விடுதலை செய்வது ஒரு சிறிய நன்றிக் கடன்.

அரசியல் கைதிகள் போரிலே ஒரு பங்களிப்பை நல்கியிருந்தாலும் இன்று சமூகத்தோடு இணைக்கப்படவேண்டும். போர் முடிந்த பின்னர் தாங்களும் சமூகத்தோடு இணைக்கப்படுவோம் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் இன்றுவரை நடைபெறவில்லை. இது மிகுந்த வேதனையை அளிக்கிறது. அவர்கள் சிறைகளிலே வாடுகின்றபோது பல உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொண்டுள்ளார்கள். நீங்கள் நாடாளுமன்றிலே இது தொடர்பாகக் கடுமையான அழுத்தமொன்றைக் கொடுங்கள். அரசுக்கு ஏற்கனவே எங்களுடைய தமிழ் அரசியல்வாதிகள் ஆதரவு வழங்கி வருகின்றார்கள். நல்லாட்சி நீடிக்க வேண்டுமாக இருந்தால் அரசுக்குத் தமிழ் அரசியல் கைதிகளினுடைய விடுதலை விவகாரத்தில் நீங்கள் கூடுதலான அழுத்தங்களை கொடுங்கள் என்று மேலும் தெரிவித்தார். (4,112,113)

# ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 2017

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

சா.வேணுஜா - 9ஏ, ஈ. சௌமியா - 9ஏ, து.கவிதா - 9ஏ, க.கயஸ்வினி - 8ஏ பி, க.பவதாரணி - 8ஏ பி, பி.கலைமதி - 8ஏ பி, தா.எடிவா - 8ஏ பி, க.ஜெனரூபி - 8ஏ பி, கி.கிருசிகா - 8ஏ பி, ஜெ.லயன்சிகா - 7ஏ 2பி, செ.பிருந்தினி - 7ஏ 2பீ, ர.மதீசனா - 7ஏ 2பீ, ச.புகழினி - 7ஏ 2பி, ந.தர்சனா -7ஏ 2பி, ரா.கோபிஸ்சா - 6ஏ 3பி, ர.யாழினி - 6ஏ 2பி சீ, ஐ.தேனுஜா - 6ஏ பி 2சீ, பி.கவீனா - 6ஏ பி2சீ, ஜே.லேனுஜா - 6ஏ பி 2சீ, க.சதுர்சனா - 5ஏபி 3சீ, றெ.விதுசா - 5ஏ பி 3சீ, ரா.ஐந்துஜா - 5ஏ பி 3சீ, ஜீ. ஜெனிபர் - 5ஏ பி 2சீ எஸ், சு.விதுர்சனா - 5ஏ பி 2சீ எஸ், ஜெ. ரிஷாலினி - 5ஏபி 2சீ எஸ்.

**யா/ அத்தியார் இந்துக் கல்லூரி**

எம். பிரணவன் - 8ஏ சீ, வீ. கவிதாசன் - 8ஏ எஸ், கே. நிறேஜன் - 8ஏ, கே. மதுரா - 5ஏ 2பி சீ எஸ், ரி.சுமிர்தன் - 5ஏ பி 3சீ, கே.திருமரன் - 5ஏ பீ சீ எஸ், ரி. கோபிராம் - 4ஏ 4பீ சீ, எஸ். லயன்சிகா - 3ஏ 3பி 2சீ, பி.கிருசாயினி - 3ஏ 3பீ 2சீ, கே. கஜீனா - 3ஏ பி 3சீ 2எஸ், ஆர். கஜானி - 3ஏ 4சீ 2எஸ், எஸ். மதுசனா - 2ஏ பி 4சீ 2எஸ், ஆர். சங்கவி - 2ஏ 2பி 2சீ 2எஸ், ஜெ. ஜதுர்சன் - 2ஏ 3பி 2சீ 2எஸ், ஈ. லவன் - 2ஏ 3பி 2சீ 2எஸ், வை.சுகந்தன் - 2ஏ 3பி 3சீ.

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

ஜே. தினேஷ்காந் - 9ஏ, ரி.சஜீவன் - 9ஏ, எ.ருக்சன் - 9ஏ, பி.அபிஷேக் - 9ஏ, யு. அன்ரன்ராஜ்குமார் - 9ஏ, ஜே. றொபின்சன் ஹபேட் - 8ஏ, பி, எல். பற்றிக் நிலக்சன் - 8ஏபி, ஆர். அறொன் - 7ஏ2பி, ஜே.ஜெரக்சன் - 7ஏ2பி, ஆர்.இன்வென்ஸ்ரன் - 7ஏ2பி, எம்.அன்ரன் யூட் - 7ஏ, பி.சி, ஏ.சகீனன் - 7ஏபிசி, ஜே.. ஜொய் மிதுனன் - 6ஏ3பி, எஸ். துலக்சன் - 6ஏ3பி, எவ்.அன்ரன் அஜித்குமார் - 6ஏ2பிசி, எஸ். விவ்யன் - 6ஏ2பி, சி., யு.அரனன் - 6ஏ2பிசி, பி.சாருசன் - 5ஏ4பி, சி.அபிசன் - 5ஏ 4பி, ஆர். தனோசிகன் - 5ஏ2பி2சி, கே.கிசன் - 5ஏ2பி2சி, ஆர். சதுஜன் -5ஏ2பிசிஎஸ், சி.குகேந்திரன் - 5ஏபி2சிஎஸ், வி.திஷாகன் - 5ஏ2சிஎஸ்.

# ஆங்கில இலக்கிய போட்டியில் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப். 3
கலாசார அமைச்சினால் நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்ற ஆங்கில இலக்கிய போட்டியில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் முதுநிலை ஆங்கில ஆசிரியராக தேசிய இடத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
ஆங்கில இலக்கியப் போட்டியில் தேசிய இடத்தில் முதலாம் இடம் பெற்ற வெற்றி வேல் சக்திவேல் அவர்களை கல்லூரி முதல்வர் கலாநிதி டி.எஸ். சொலமன் பாராட்டியுள்ளார். (50)

# கல்விப் பணிப்பாளர்களின் தெரிவு காலம் தாழ்த்தியே நடைபெறுகிறது

## கல்வியியலாளர்கள் விசனம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 3**
**வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி , தீவகம் ஆகிய வலயங்களில் கல்விப் பணிப்பாளர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் காலம் தெரிந்தும் குறித்த காலத்துக்குள் உரிய நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை என கல்வியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

இலங்கையின் ஏனைய மாகாணத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஓய்வு பெறும் காலத்திற்கு 3 மாதங்களிற்கு முன்பே விளம்பரப்படுத்தி அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகளும் இடம்பெற்று ஓய்வு பெற்றுச் செல்லும் அதிகாரியிடம் இருந்து புதிய அதிகாரி பொறுப்பெடுப்பதாகவே பணிகள் இடம்பெறுகின்றன.
இருப்பினும் இந்த நடைமுறையானது வடக்கு மாகாணத்தில் மட்டும் இன்றுவரை காலம் கடந்த பணியாகவே காணப்படுகின்றது.
இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபை உரிய கவனம் செலுத்துவதன் மூலம் மட்டுமே கல்வியில் ஏற்படும் தொய்வு நிலைமையை சீர் செய்ய முடியும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.
இதேநேரம் இனிவரும் காலங்களில் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள அதிகாரிகள் தொடர்பிலாவது கல்வி அமைச்சு கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய நிலைமையை சீர் செய்ய முடியும்.
நடப்பாண்டின் யூன் மாதத்துடன் மடுக் கல்வி வலயப் பணிப்பாளரும், நவம்பர் மாதத்தில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரும் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளதோடு டிசம்பர் மாதம் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர்.
இதேநேரம் அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வெற்றிடத்திற்கான நேர்முகப் பரீட்சை இன்றைய தினமே இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (105)

# பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3
நீர்வேலி மேற்கு வைரவப் பெருமான் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

# மஹோற்சவம்

சாவகச்சேரி, ஏப். 3
சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.
எதிர்வரும் புதுவருட தினத்தன்று தேர்த் திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமெனவும் பெருந்திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திகரக்குருக்கள் தலைமையில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# சமய வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 3
செலான் வங்கியின் 30 வருடகால வங்கிச் சேவையினை கொண்டாடும் முகமாக யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சிறப்பு சமய வழிபாடுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் வங்கியின் பணிப்பாளரும் முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணல் கல் பகிரங்க ஏல விற்பனை இன்று

யாழ்ப்பாணம், ஏப் 3
யாழ் நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் மற்றும் கற்கள் இன்று காலை 8.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யுப்பவுள்ளது.
குறித்த பகிரங்க மணல் மற்றும் கற்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாக செலுத்த வேண்டும். காசோலை எற்றுக்கொள்ளபடமாட்டாது ஏலத்தில் மணல் மற்றும் கற்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்கவும். அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுகொள்ளும் மணல் மற்றும் கற்களை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# ஞாயிறு,விடுமுறை நாள்களிலும் யாழில் கடைகள் திறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 3
எதிர்வரும் தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு வருடப் பிறப்பை முன்னிட்டு பொது மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் இன்று முதல் 15ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் உள்ள விடுமுறை நாள்கள் மற்றும் ஞாயிறு தினங்களில் வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற வகையில் வர்த்தக நிலையங் களைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபட வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (21)

# பயிற்சி பட்டறைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.3
ஐ.எஸ்.ஓ (I.S.O) நிறுவனமும், யாழ் மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனமும், கூட்டுறவுத்திணைக்களமும் இணைந்து நடத்தும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் மற்றும் தலைமைத்துவத்தை உயர்த்தும் பயிற்சிப்பட்டறையும் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளையும் யூ.எஸ் விடுதியில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்துள்ளார். (113)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், ஏப். 3
இலங்கை நூலக சங்கத் தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற பொது நூலகங்களில் கடமையாற்றும் முதலாவது தொகுதி நூலகர்களுக்கான நூலக கணிணிமயமாக்கல் தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ். பல்கலைக்கழக கணிணி ஆய்வுகூடத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடத்தப்படவுள்ளன.
இந்தப் பயிற்சிப் பட்டறையில் 80 நூலகர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ். பிராந்திய உதவி உள்ளு ராட்சி ஆணையாளர் ந.திருலிங்க நாதன் அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)



# காற்றுடன் கூடிய மழை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3
யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பலமான காற்றுடன் கூடிய மழையினால் சுதுமலை பிரதேசம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பலமான காற்று வீசியதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இதனால் வளவுகளில் இருந்த மரங்கள் சில முறிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

# நிறுவுனர் தினமும், பரிசில் நாளும்

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும், பரிசில் நாளும் கல்லூரி நூற்றாண்டு மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு முதல்வர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும், பழைய மாணவருமான பேராசிரியர் துரைமனோகரன் மற்றும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (112)



காரைநகர் ஆயிலியைச் சேர்ந்த மாணிக்கம் வரதராஜா என்பவருக்கு புலம்பெயர் அன்பர் ஒருவரால் புதிய துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. அவர் 2000ஆம் ஆண்டு முதல் பனை மட்டைகளைத் தனது துவிச்சக் கர வண்டியில் கட்டிச் சென்று விற்பனை செய்வது அவரது தொழில். அவரது தொழில் நிமித்தம் வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா, வெண்கரம் செயற்பாட்டாளர் மு. கோமகன் உள்ளிட்ட செயற்பாட்டாளர்களும் இணைந்து மூளாயில் கையளித்தனர்

# மூன்று தசாப்தங்களின் பின்னர் பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவன்

தென்மராட்சி ஏப்ரல் 3
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் 31 வருடங்களின் பின்னர் இம்முறை வெளியான ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் மாணவன் ஒருவர் 9 பாடங்களிலும் அதிசிறப்பு தர (ஏ) சித்தி பெற்று சாதனை படைத்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
நடேசலிங்கம் விஷாகன் என்ற மாணவனே 9 பாடங்களிலும் அதிசிறப்பு சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இந்த பாடசாலையில் மேலும் சி.கோவர்த்தனி 6ஏ பி 2சி, யோ.வைஷ்ணவி 5ஏ 4பி, போல்டிசான் 4 ஏ 2பி 3சி சித்தி பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## கோட்டையில்...

ஐக்கிய தேசியக் கட்சியின் சந்திம நயனஜித் தெரிவுசெய்யப்பட்டார். வாக்களிப்பின்போது சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவு, மகிந்தவின் பொதுமக்கள் முன்னணி கட்சிக்கு வழங்கப்பட்டிருந்தது. (ற-5)

## இன்று...

அறிய முடிகின்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் நேற்றிரவு கூடியது.

முன்னதாக நேற்றுக் காலை அரச தலைவரை, ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சந்தித்தனர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு ஏதுவானதொரு முடிவை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். அப்போதே அரச தலைவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று அறிய முடிகிறது.

"கடந்த மூன்றாண்டுகளில் பொருளாதாரம் சீரழிந்துவிட்டது. மத்திய வங்கிக் கொள்ளையால்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இனியும் நாம் விழித்துக்கொள்ளாவிட்டால் பெரும் நெருக்கடியாகிவிடும்.

கட்சி உறுப்பினர்கள் பொறுமை காக்க வேண்டும் என்று பல தடவைகள் கூறியிருந்தேன். இனியும் அதைச் செய்யமுடியாது. தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான உறுப்பினர்கள் உள்ளனர்.

நாளை (இன்று) நள்ளிரவரை நேரம் இருக்கின்றது. தலைமை அமைச்சர் முடிவொன்றை எடுக்க வேண்டும் என்று சொல்லுங்கள். இறுதி நேரத்தில் நான் காப்பாற்றவில்லை, கைகொடுக்கவில்லை, நிறைவேற்று அதிகாரத்தைப் பாவிக்கவில்லை எனக் கூற வேண்டாம்" என்றும் மைத்திரி கூறியுள்ளார் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

எனினும், இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர், பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா, மைத்திரியுடனான சந்திப்பு வெற்றிகரமாக இடம்பெற்றது என்று கூறியுள்ளார்.

அதேவேளை ரணில் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நேற்று நள்ளிரவு எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக கூட்டரசின் பங்காளிக் கட்சிகளை இன்று காலை 09 மணிக்கு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன சந்திக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

## மூர்க்கத்தனமான...

தில் நடந்துள்ளது. நல்லதம்பி ரேவதி (வயது -57) என்பவரே உயிரிழந்துள்ளார். நல்லதம்பி இராசம்மா (வயது -75) என்பவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொல்லு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கான காரணம் சரிவரத் தெரியாத நிலையில் கொள்ளை நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-26,67,6)

## 10 வீத...

கப்பட்டது. அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கங்களின் சம்மேளனத்துக்கும் உயர் கல்வி அமைச்சர் கபீர் காசிம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுப் பேச்சு இடம்பெற்றது.

முதற்கட்டமாக 10 வீத சம்பள அதிகரிப்புக்கு இணக்கம் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டுவரையான காலத்தில் 100 வீத சம்பள அதிகரிப்பு வழங்குவதாக முன்னர் கூறப்பட்டபோதும் அது வழங்கப்படவில்லை. அது உள்ளிட்ட விடயங்களைக் கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

10 வீத அதிகரிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும் மிகுதித் தொகையை மிகுதி வருடங்களில் என்ன அடிப்படையில் அல்லது எவ்வாறான கொள்கை அடிப்படையில் வழங்குவது என்பது பற்றி இன்று உயர் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் பேசப்படவுள்ளது. அதன் பின்னர் போராட்டத்தைத் தொடர்வதா நிறுத்துவதா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## யாழ்...

கள், உயர் கல்வி அமைச்சின் அதிகாரிகளைக் கண்டித்தே கொடும்பாவி எரிக்கப்பட்டது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகத்துக்குள் உள்ள வீதிகளில் கொடும்பாவி இழுத்துச் செல்லப்பட்டு இறுதியாக பல்கலைக்கழக வளாகத்துக்கு வெளியே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்வி சாரா ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று ஊழியர் சங்கம் குறிப்பிடுகிறது. ஊழியர்கள் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமது பிரச்சினைகளைத தீர்க்க வேண்டும் என்று அவர்கள் உயர் கல்வி அமைச்சுடனும் முன்னர் பேசியிருந்தனர். தீர்வு கிடைக்காத நிலையில் அவர்கள் நேற்றுக் கொடும்பாவி எரித்து எதிர்ப்பை வெளிக்காடடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## பரபரப்புக்கு...

சபை அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது விவாதம், வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

சபையில் இன்று சிறப்பு வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பதற்கான விவாதம் நடைபெறும்.

நாளை 4ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் இரவு 9.30 மணிவரை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலத்திரனியல் முறைமையில் அல்லாது பெயர்கூவியே வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. (ற-5)

## அரசியல்...

இவ்வாறு ஈ.பி. ஆர். எல்.எவ். தெரிவித்தது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை ஈ.பி. ஆர் எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அந்தக் கட்சியின் செயலாளரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் நேற்று அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினர். அது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு சுமார் அரைமணிநேரம் நடைபெற்றது. சந்திப்பில் சில முக்கிய விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நாம் பேசியபோது அவர்களின் விடுதலை தொடர்பில் ஏற்கனவே சிறைச்சாலைகள் அமைச்சரால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அது உடனடியாக என்னிடம் கையளிக்கப்படும். தற்பொழுது சிறையில் உள்ள பலருக்கு விடுதலை வழங்கப்படும். ஏனையோர் ஒரு குறுகிய புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்படுவர் என்று எமக்கு ரணில் உத்தரவாதம் அளித்தார்.

403நாள்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவற்றை அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது மனவருத்தத்தைத் தரக்கூடிய செயல். இது அரசின் பொறுப்பின்மையை வெளிப்படுத்துகின்றது என்பதையும் நாம் சுட்டிக்காட்டினோம். காலம் தாழ்த்தாமல் இவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு வருடம் ஆகியும் அதற்கான பணியாளர்களை நியமித்து ஒரு மாதம் ஆகியும் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. மக்கள் அந்த அலுவலகத்தின் மீது நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள். இது தொடர்பாக திட்டவட்டமான துரித நடவடிக்கை தேவை என்பதையும் குறிப்பிட்டிருக்கின்றோம்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மகாவலி அபிவிருத்தி என்ற பெயரிலும், தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரிலும் வன வளப் பாதுகாப்பு என்ற பெயரிலும் பறவைகள் சரணாலயம் என்ற பெயரிலும் தமிழ் மக்கள் பயிர்ச்செய்கை செய்துவரும் காணிகளும், அவர்களது வீட்டுக் காணிகளும் சுவீகரிப்பு என்ற பெயரில் பறிமுதல் செய்யப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் 2ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளைச் சுவீகரிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதை உடனடியாக நிறுத்தவேண்டும். இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படும்வரை காணி சுவீகரிப்பு போன்ற சகல நடவடிக்கைகளும் மாகாண சபையின் ஒப்புதலுடன் நடைபெற வேண்டும் என்று நாம் வலியுறுத்தியுள்ளோம்.

அது தொடர்பான ஒரு அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்யும்படி புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் பணிக்கப்பட்டிருக்கின்றார். இவை தவிர பட்டதாரிகளின் வேலை வாய்ப்புக்கள் தொடர்பாகவும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்களுக்கு சிற்றூழியர்களாக சிங்களவர்களை நியமிப்பது நிறுத்தப்பட வேண்டுமென்றும் ஏற்கனவே அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு அந்த இடங்களுக்கு தமிழ் இளையோர் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளோம். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ற-21,5,110)

## ஈ.பி.டி.பி...

கைப்பற்றியது. முன்னாள் தவிசாளர் சோ. சுகிர்தன் மீண்டும் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வலி. வடக்குப் பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவுக்காகச் சபை நேற்றுக் காலை கூடியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தவிசாளராக சோ.சுகிர்தன் க.மயூரனால் முன்மொழியப்பட்டார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் நா.நிகேதன், க.சுந்தரேசனால் முன்மொழியப்பட்டார்.

தெரிவுக்கான வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பா, பகிரங்க வாக்கெடுப்பா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்புக்கு சபையின் 32 பேரும், இரகசிய வாக்கெடுப்புக்கு 6 பேரும் வாக்களித்தனர். அதையடுத்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பிரேரிக்கப்பட்ட சோ.சுகிர்தன் 30 வாக்குகளைப் பெற்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் முன்மொழியப்பட்ட நா.நிகேதன் 6 வாக்குகளைப் பெற்றார். உபதவிசாளர் தெரிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பொ.இராசேந்திரம் முன்மொழியப்பட்டார். உபதவிசாளர் தெரிவுக்கு வேறு கட்சிகள் எவரையும் முன்மொழியாததால் பொ.இராசேந்திரம் உபதவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். 39 உறுப்பினர்களைக் கொண்ட வலி. வடக்குப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 17 பேரும், ஈ.பி.பி.டி. உறுப்பினர்கள் 8 பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 4 பேரும், ஐ.தே.க. உறுப்பினர்கள் 2 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் 2 பேரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேரும் அங்கம் வகிக்கின்றனர். அதேவேளை நேற்றைய அமர்வுக்கு ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த ஒருவர் சமுகமளிக்கவில்லை.

அதே போன்று வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் பதவிகளையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஆட்சியமைத்துள்ளது.

தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட சோ.சுகிர்தன் சபை நிறைவில் கருத்துத் தெரிவித்தபோது, "ஏனைய சபைகளை விட இந்தச் சபை வித்தியாசமானது. நாம் மக்களின் காணி விடுவிப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய இரு விடயங்களைக் கையாள வேண்டியுள்ளது. இந்த இரு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சபை நடவடிக்கைகளை முன்னெடுப்போம்."- என்றார். (21,5)

## வலி தென்மேற்கு...

அ.ஜெபநேசன் தவிசாளராக சபை உறுப்பினர்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மானிப்பாய் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் உப தவிசாளர் தெரிவுக்கான சபை அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் பிரதேசபை மண்டபத்தில் நேற்றுக் கூடியது. தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும், ,ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இருவருமாக 28 பேர் நேற்றைய அமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

தவிசாளர் தெரிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அந்தோனிப்பிள்ளை ஜெபநேசனை.அதே கட்சியின் உறுப்பினர் பே. சுபாகர் முன்மொழிந்தார். ஐக்கிய தேசிய கட்சியின் லோ.ரமணன் வழி மொழிந்தார். முன்மொழியப்பட்டவருக்கு எதிராகப் போட்டியிட வேறு நபர்களின் பெயர்கள் முன்மொழியப்படாததால் அ.ஜெபநேசன் தவிசாளராகத் தெரிவானார்.

உபதவிசாளர் தெரிவுக்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சின்னையா கணேசவேலை கட்சியின் சி.மகேந்திரன் முன்மொழிந்தார். அதே கட்சியின் நா.பகீரதன் வழிமொழிந்தார். முன்மொழியப்பட்டவருக்கு எதிராக போட்டியிட வேறு நபர்களின் பெயர்கள் முன்மொழியப்படாமையினால் சின்னையா கணேசவேல் உப தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

சபை அமர்வை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோர் பார்வையிட்டனர். (ற-217)

## பிரபாகரன்...

என.தென்னிந்தியாவைச் சேர்ந்த ஸ்டுடியோ 18 நிறுவனம் தயாரித்த 'நீலம்', 'உனக்குள் நான்', 'லைட் மேன்' ஆகிய படங்களை இயக்கிய ஜி.வெங்கடேஷ் குமார் இந்தத் திரைப்படத்தை இயக்குகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ற -21)

## நீர்ப்பாசன...

டத்தை ஆரம்பித்தார். இந்தத் திட்டம் 500 மில்லியன் ரூபா நிதியொதுக் கீட்டில் முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீர்வளம் குன்றியுள்ளது. நீர்ப்பா சனத் தேவை அதிகரித்துள்ளது. அதை நிறைவு செய்யும் வகையில் 121 குளங்கள் சீரமைக்கப்பட வுள்ளன. வடக்கில் 61 குளங்கள் சீரமைக்கப்பட வுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தின் செலவினங்கள் குறையும்போது மேலும் சில செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்." என்று நிகழ்வில் உரையாற்றிய சந்திரிக்கா தெரிவித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அதேவேளை, சங்கானையில் உள்ள மண்டிகைக்குளமும் சீரமைக்கப்பட்டு நேற்று முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வால் திறக்கப்பட்டது.

அதன்பின்னர் காரைநகர் ஊரிக் கிராமத்தில் அமைக்கப்பட்ட மீனவர் இளைப்பாற்று மண்டபத்தையும் முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க திறந்தார்.

காரைநகர் பிரதேச செயலகத்தின் ஊடாக தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலணியின் நிதி உதவியுடன் 2 மில்லியன் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. (ற-114)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெருட்டுகிறது சுதந்திரக் கட்சி

## ரணிலைக் காப்பாற்ற முனைந்தால் பெரிய விளைவுகளைச் சந்திக்கவேண்டிவருமாம்



கொழும்பு, ஏப். 3

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து ரணிலைக் காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் அது கூட்டமைப்புக்கே பாதகமாக அமையும். தலைமை அமைச்சர் ரணிலுடன் இணைந்து ஒரு போதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. கூட்டமைப்பு இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு சிறிலங்கா சுந்திரக் கட்சியின் அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பு நாட்டின் எதிர்க்கட்சி என்ற வகையில் தனது வகிபாகத்தையும் அரசியல் கதாபாத்திரத்தையும் உரிய முறையில் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் கூட்டமைப்பு தனது அரசியல் வகிபாகத்தை உரிய முறையில்முன்னெடுக்கவில்லை. நாங்கள் கூட கவலையடைகின்றோம்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ரணிலுக்கு எதிராக வாக்களிக்கவே சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. நாம் ரணிலை எதிர்க்கும் போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து ரணிலைக் காப்பாற்றத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் அது கூட்டமைப்புக்கே பாதகமாக அமையும். இதனை அந்தக்கட்சி மனதில் நிலைநிறுத்த வேண்டும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து ரணிலைக் காப்பாற்றக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் நாங்கள் எதிர்க்கட்சியாகிவிடுவோம். எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவியையும் பெற்று நாம் எதிர்க்கட்சிப் பக்கம் சென்றுவிடுவோம்.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைவதுடன் அவர்கள் அரசே உருவாகும். ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து அமைக்கும் அரசினால் ஒருபோதும் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதைக் கூட்டமைப்பு மறந்துவிடக் கூடாது.

இவர்களால் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கும் புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாது. ஏற்கனவே ஏக்கிய, ஒருமித்த என்ற வசனங்களைப் போட்டுக் கடந்த தேர்தலில் பாடம் கற்பிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து அமைக்கும் அரசில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. இது கூட்டமைப்புக்கு வடக்கிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

கூட்டமைப்பால் வடக்கு- கிழக்கு மக்களுக்குத் தேவையானதைச் சிறிதளவும் வழங்க முடியாமல் போய்விடும்.

சிங்கள பௌத்த மக்கள் எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் கூட்டமைப்புக்கு எதிராகவே இருப்பார்கள். இந்த அனைத்து விடயங்களையும் மனதில் கொண்டு அரசியல் ரீதியில் சிந்தித்து கூட்டமைப்புத் தீர்மானம் எடுக்கவேண்டும்.

இதேவேளை கரு ஜயசூரிய அல்லது ரஞ்சித் ழத்தும பண்டார போன்ற ஒருவரைத் தலைமை அமைச்சராக நியமித்துக் கூட்டு அரசைத் தொடர்ந்து, விரைவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியும் என்பதையும் கூட்டமைப்புக்குக் கூற விரும்புகின்றோம் - என்றார். (5)

---

# எமது அரசியல் தீர்வுக்கான தடத்தில் இருக்கும் பலம் பன்னாட்டுச் சமூகமே

## கம்பன் விழாவில் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

தீர்வுக்கான எமது கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை. அது அங்கீகரிக்கப்பட வேண்டிய, தகுதியான கோரிக்கை என்ற நிலைப்பாடு பன்னாட்டுச் சமூகத்திடம் உள்ளது. அந்த ஆதரவை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் இறுதி நிகழ்வுகள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் என்ற வகையில் எமக்குத் தீர்வுகள் அவசியமாக உள்ளன. நான் விரும்பி அரசியலுக்கு வந்தவனல்ல. எனது தொழிலை நேசித்தேன். எனினும் அரசியலுக்கு வந்தவுடன் எனது தொழிலை நான் விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு அரசியல்வாதியாக நாம் சில நகர்வுகளைக் கருத வேண்டும்.

நாடு சுதந்திரமடைய முன்பாகவே எமது பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைத்திருக்க வேண்டும். 1935ஆம் ஆண்டு இலங்கைக்கு டொனமூர் ஆணைக்குழு வந்தது. பிரேரணைகள் அடிப்படையில் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தால், முறைப்படி ஆட்சியமைக்கப்பட்டிருந்தால், சுயாட்சியில் இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு அதுவும் நாடு சுதந்திரம் அடையமுன்னர் இடம்பெற்றிருக்க வேண்டும். 1935ஆம் ஆண்டு இந்திய சட்டத்தின் மூலமாக மாகாணங்கள் உருவாக்கப்பட்டு மாகாணங்களுக்கு சுய அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

### சுயாட்சி கேட்டோம்

அந்தச் சந்தர்ப்பத்தை நாம் இழந்தோம். டொனமூர் ஆணைக்குழுவுக்கு முன்பு முழுமையான சுதந்திரம் வேண்டும் என்று கேட்டோம். தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் கூட்டாட்சி வழங்கப்பட வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. முழுமையான சுயாட்சியையே கேட்டோம். கண்டிய சிங்களவர்கள் தங்களுக்குச் சுயாட்சி வேண்டும் எனக் கேட்டார்கள். ஆனால் அவர்களுக்கு ஆதரவாக நாம் இருக்கவில்லை. சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வந்தபோது நாம் 50க்கு 50 அதிகாரம் கேட்டோம். அது தவறானது என்று நான் கூறவில்லை. ஆனால் அது எந்த எளவுக்குப் யதார்த்தமானது என்பது கேள்விக்குரிய விடயமாகும். இவ்விதமான கோரிக்கைகள் மூலமாக நாடு சுதந்திரம் அடைய முன்னர் தீர்வுகள் கிடைக்கவிருந்த சந்தர்ப்பங்களை நாம் இழந்தோம்.

### சுதந்திரத்தின் பின்னர் சிக்கல்

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பது மிகவும் சிக்கலான விடயமாக இருந்தது. சாதாரணமான மாவட்ட சபைகளைக் கூட உருவாக்க முடியாத நிலைமையில் நாம் இருந்தோம். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 1983ஆம் ஆண்டு இந்திராகாந்தி மற்றும் ராஜீவ்காந்தி ஆகியோரின் தலையீட்டின் காரணமாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ஓரளவு சுயாட்சி உருவாக்கப்பட்டது. அது போதாது. அது ஒரு தீர்வு அல்ல.

ஆனால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வைப் பெற நாம் யதார்த்தமாக நடந்து கொள்ள வேண்டும். இந்தத் தீர்வை நாட்டில் வாழும் சகல மக்களும் குறிப்பாகப் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் என அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்விதமான ஒரு தீர்வே ஏற்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

### தடைகள்

பிரச்சினையான விடயம் என்னவெனில் பலவிதமான தடைகள், பல எதிர்ப்புகள் எழுந்துள்ளன. எனினும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஒருமித்த நாட்டுக்குள் ஒரு தீர்வை எதிர்ப்பார்கள் என்று நாம் நினைக்கவில்லை. அவர்களுக்கு உண்மைகளைத் தெளிவுபடுத்தி அனைவரது ஒத்துழைப்புடனும் ஒரு தீர்வை ஏற்படுத்தச் சிங்கள தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். அதன் மூலமாக ஒரு தீர்வு கிடைக்கப்பெற வேண்டும்.

இது மட்டுமே எமக்குள்ள ஒரே வழிமுறை. இன்று பன்னாட்டுச் சமூகத்தின் முழுமையான ஆதரவைப் பெற்றுள்ளோம். எமது கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை. அது அனுமதிக்கப்பட வேண்டிய, தகுதியான கோரிக்கை என்ற நிலைப்பாடு பன்னாட்டுச் சமூகத்திடம் உள்ளது. அந்த ஆதரவை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (5)

---

# ரணில் மீதான தீர்மானத்தால் சம்பந்தனின் பதவிக்கும் சிக்கல்



தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் இரா.சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குச் சவால் விடுக்கப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த அணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்து ரணிலைத் தோற்கடித்தால் ஆட்சி மாற்றம் இடம்பெறும். அதன்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனிடமிருந்து பறிபோகும்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்யும் வகையில் சம்பந்தன் தரப்பினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சம்பந்தன் நீடிக்க முடியாது. கூட்;டு அரசிலிருந்து சுதந்திரக் கட்சி விலகிவிடும். நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சியே எதிர்க்கட்சியாகச் செயற்படும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அரசு வெற்றியீட்டினாலும், தோல்வியடைந்தாலும் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பதால் சிக்கல் நிலைமை நீடித்து வருகிறது. (5)

---

# ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை மீள பெற்றால் ரணிலுக்கு ஆதரவாம்

## அஜித் பி பெரேரா புதுத் தகவல்

அரசு நாடாளுமன்றில் நிறைவேற்றியுள்ள ஊழல் எதிப்புச் சட்டத்தை மீளப் பெற்றுக் கொள்வதாயின் தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக குழுவொன்று தம்மிடம் குறிப்பிட்டதாக பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அந்தக் குழு யார் என்பதை வெளியிட முடியாது. ஆனால் அந்தக் குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சியினர் அல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அரசிலுள்ள யாராவது ஆதரவு தெரிவித்து வாக்களிப்பதாயின் அவர் அரசில் இருக்க முடியாது - என்றார். (5)

# சினிமாப்பாணியில் கொழும்பில் யாசகம்

கொழும்பு, ஏப். 3

கொழும்புக் கோட்டைப் பிரதேசம் மற்றும் தொடருந்து நிலையத்தை அண்மித்துள்ள பிரதேசங்களில் யாசகம் கேட்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது என்று கொழும்பைப் பாதுகாக்கும் அமைப்பின் இணைப்புச் செயலர் சிரோன் பர்னாந்து தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப் பொருள் விற்பனை முகவர்களாகப் பெரும்பாலான யாசகர்கள் ஈடுபட்டு வருவது தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில யாசகர்கள், கைக்குழந்தைகளை இரவல் வாங்கி யாசகத்தில் ஈடுபட்டு வருவதாகவும், இவ்வாறான யாசகர்கள் இருவர் கடந்த வாரம் கோட்டைப் பகுதியில் யாசகம் கேட்டுக்கொண்டிருக்கும்போது, கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில், எமது அமைப்புப் பொலிஸ் மா அதிபரினதும், போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரதும் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (5)

# சவாலை சந்திக்க கண்விழித்து காய் நகர்த்தும் ரணில்

கொழும்பு, ஏப். 3

கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிக்க ஆதரவு கோரிக் கடந்த இரு நாள்களாகத் தொடர் பேச்சுகளில் ஈடுபட்டுவந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இன்றைய தினமும் இறுதிக்கட்டச் சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

அலரிமாளிகையிலும், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள தலைமை அமைச்சரின் அலுவலகத்திலும் இடம்பெறவுள்ள மேற்படிச் சந்திப்புக்களின் போது சாதகமான முடிவுகள் எட்டப்படாத பட்சத்தில் முக்கிய அரசியற் தீர்மானம் ஒன்றை ரணில் எடுக்கக்கூடும் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.


ஈ.பி.டி.பியின் செயலர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொள்ளுப்பிட்டியவிலுள்ள தனது இல்லத்தில் சந்தித்த ரணில், நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைஎதிர்த்து வாக்களிக்குமாறு கோரியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் சிவில்அமைப்புகளின்பிரதிநிதிகள் சிலருடனும், அதன் பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்களுடனும் மந்திராலோசனை நடத்தினார். கட்சிக்குள் தமக்கான ஆதரவை உறுதிப்படுத்தும் வகையிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐக்கியதேசியக்கட்சித்தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ரணில் நேற்றும் பேச்சு நடத்தினார். இதர அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் கலந்துரையாடி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிக்க ஆதரவுதருமாறுகோரிக்கை விடுத்தார்.

இன்றைய தினமும் முக்கியத்துவம் மிக்க சந்திப்புகளில் ரணில் ஈடுபடவுள்ளார். ஈ.பி.டி.பி.டி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய பின்னர், ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடனும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்களுடனும் சிறப்புக் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளார். இவ்வாறு பலசுற்றுச் சந்திப்புக்கள் முடிவடைந்த பின்னர் அவை கைகூடாத பட்சத்தில் நாளைக் காலை முக்கிய தீர்மானமொன்றை அவர் எடுக்கவுள்ளார். (5)

கேலிச்சித்திரம்



நன்றி:ஒப்சேவர்.

# அரசால் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுகின்றோம்

## சுமந்திரன் எம்.பியின் சுடலைஞானம்



கொழும்பு, ஏப். 3

பெரிய எதிர்பார்ப்புகளோடு 2015ஆம் ஆண்டு அனைவரும் இணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம். ஆனால் நாம் எதிர்பார்த்தவற்றை அடையமுடியாமற் போயுள்ளது. நல்லாட்சி அரசு எனக் கூறப்படும் இந்த அரசால் நாம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கம்பன் விழா, கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுக் கூட்டு அரசு அமைக்கப்பட்டது. அது நல்லாட்சி அரசு எனக் கூறப்பட்ட போதும் இது நல்லாட்சி அல்ல என்பதே உண்மை. நாம் பெரிய ஏமாற்றத்தையே சந்தித்துள்ளோம். தொடர்ச்சியாக ஏமாற்றப்படுபவர்கள்அடுத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று சிந்திக்கும் போது. அதனை எவ்வாறு ஏற்படுத்துவது. அதற்காக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த முடியுமா? அது எவ்வாறு அமையும் முன்னைய ஆட்சி எப்படியானது என்று யோசிக்கவைக்கின்றது.

தற்போது உள்நாட்டின் அரசியல் நிலவரத்தை நோக்கும் போது ஆட்சி அமைத்திருப்பவர்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருப்பார்களா? அல்லதுவீழ்ச்சியைச் சந்திப்பார்களா, வீழ்ச்சி காணும் சந்தர்ப்பத்தில் அடுத்து ஆட்சி அமைக்கப் போவது யார் என்ற பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

தற்போது எமது நாட்டில் பெரிய அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. யார் ஆட்சி அமைப்பது என்ற போட்டியும் பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

கொழும்பு அரசில்தான் இவ்வாறு பிரச்சினை என்றால் உள்ளூராட்சி சபைகளிலும் அதே போன்ற நிலமை தான் காணப்படுகின்றது. உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் இழுபறிநிலைநிலவுகின்றது. அதே வேளை பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பணக்கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சாதாரண ஆசனத்துக்காக ஏன் இத்தகைய போட்டி என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இம்முறை உள்ளூராட்சி சபை நியமனங்களை வழங்கும் போது அதற்கு ஏற்பட்ட போட்டிநிலை எம்மை வியப்படையவைத்துள்ளது. பதவிகள் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் பல்வேறு வகையானசம்பவங்கள்நடந்தேறியுள்ளன. மலையகத்தில் அந்த நிலை கைகலப்பு வரை சென்றிருந்தது.

உரிமைக்காக உயிர்கொடுத்துப் போராடிய இனம் எனப் பெருமையாகப் பேசும் வேளையில் உண்மையில் களத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் இதுதான்.

எதற்கெடுத்தாலும் அவர் துரோகி நான் தியாகி என பரவலாக எம்மக்கள் மத்தியில் மாறி மாறி கூறப்படுகின்ற கூற்றுக்கள், அவ்வார்த்தைகளின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல் சில்லறைத்தனமாக உபயோகிப்பது, எம் இனத்துக்கு ஏற்பட்ட கேவலம்.

இலங்கையில் அந்தச் சொல்லை எவருக்கும் பொருத்த முடியாது. பொருத்தவும் கூடாது. ஆனால் எங்கள் மத்தியில் அவர்களின் இப்படியான போக்குக்கு மாறாக வித்தியாசமாகச் சொல்லிவிட்டால் துரோகி என்றபட்டம் உடனடியாகப் பொருத்தப்படுகின்றது - என்றார். (5.31)

# தமிழர் உரிமைக்காக லண்டனில் போராட்டம்

கொழும்பு, ஏப். 3

அரசியற் கைதிகளை விடுதலை செய்யுமாறும், காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே எனக் கோரியும் பிரிட்டன் தலைமை அமைச்சர் அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரிட்டன் தலைமை அமைச்சர் அலுவகத்தின் முன்பாக, நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் பலர் கலந்து கொண்டனர். (5)



# வானூர்தியில் பறவை மோதியது

## மத்தளவில் சம்பவம்

கொழும்பு, ஏப்.3

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திலிருந்து மத்தள ஊடாக டுபாய் நோக்கிப் புறப்பட்டுச் செல்ல மத்தள வந்த வானூர்தியின் இடது பக்க இயந்திரத்தில் பறவை மோதியதால், அந்த வானூர்தி நேற்றுக் காலை 7.11 மணி முதல் மத்தள வானூர்தி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வானூர்தியைத் தரையிறக்கியபோது பறவை இயந்திரத்தில் மோதியுள்ளது.

வானூர்தி நிறுத்தப்பட்டுள்ளதால், கட்டுநாயக்கவில் இருந்து புறப்பட்ட 113 பயணிகளும் மத்தள வானூர்தி நிலையத்தில் இருந்து புறப்படவிருந்த 55 பயணிகளும் வானூர்தி நிலையத்திலேயே தங்கியுள்ளனர். (5)

# நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடுவதாயின் அரசு தேவையில்லை

## முன்னாள் நிதி அமைச்சர் ரவி பாய்ச்சல்

கொழும்பு,ஏப். 3

பன்னாட்டு நாணய நிதியத் தின் நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படுவதாயின் நாட்டுக்கு அரசு அவசியமில்லை. பன்னாட்டு நாணய நிதியத்தின் பிரகாரம் வரி அறவிட இடமளிக்க முடியாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை ஐக்கிய தேசியக்கட்சிப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் நிதி அமைச்சராக இருக்கும் போதே வரிக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது. தற்போதைய வரிக்கொள்கை முற்றிலும் வேறுபட்டது. இந்த வரி அறவீடு அனைத்துத் துறையின் மீதும் பாதிப்புச் செலுத்தும். வரிக்கொள்கை பன்னாட்டு நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வெளிநாட்டவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அவசியமில்லை. அப்படியாயின் நாட்டுக்கு அரசு அவசியமில்லை. இதற்கு மத்திய வங்கியே பொறுப்புக் கூற வேண்டும். பன்னாட்டு நாணய நிதியத்தில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கி அதிகாரிகள் பொறுப்புகளை மறந்து செயற்படுகின்றனர். ஆட்சி மாறினாலும் அதிகாரிகள் மாறுவதில்லை. மத்திய வங்கியில் அதிகாரிப் பூதங்கள் தொடர்ந்தும் உள்ளன. மத்திய வங்கிக்குத் தகுதியானவர்களை நியமிக்க வேண்டும். தற்போது நாட்டின் கடன் 1 வீதமாக அதிகரிப்பது என்பது 6000 கோடி பெறுமதியாகும். அது பொருளாதாரத்தை முழுமையாகப் பாதிக்கும் - என்றார். (5)



# இலாபத்துக்காகப் பயணிகளின் உயிரை பணயம் வைக்கும் தனியார் பேருந்துகள்

## டீசலுடன், மண்ணெண்ணெய் கலப்பதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 3

தனியார் பேருந்து உரிமையாளர்கள் செலவினங்களைக் குறைப்பதற்காக, டீசலுடன் மண்ணெண்ணெயைக் கலந்து பயன்படுத்துகின்றனர். டீசலைவிட எரிபற்றுக் கூடிய மண்ணெண்ணெயைப் பயன்படுத்துவது ஆபத்தானது. இவ்வாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்பிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் பேருந்து உரிமையாளர்களின் இந்தச் செயற்பாடு எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்குப்பெரும்இழப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏழை மக்களின் அன்றாடத் தேவைக்கு மண்ணெண்ணெய் அவசியமானது. அதன் காரணமாகவே மண்ணெண்ணெயை அரசு மானிய விலையில் விற்பனை செய்கின்றது. தனியார் பேருந்துகளில் மாத்திரம் அல்ல, லொறி உள்ளிட்ட ஏனைய கனரக வாகன்ங்களிலும் இந்தக் கலப்பு வேலை நடக்கின்றது.

மீனவர்கள், விவசாயிகளுக்காக மண்ணெண்ணெயின் விலையை அரசு குறைத்து வழங்குவதால், அதை இவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்றார்கள். டீசல் வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் நிரப்புபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் 0115455130 என்ற தொலைபேசி எண்ணுக்குத் தகவல் தெரிவித்தால், அத்தகைய எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இல்லாமல் செய்ய முடியும் - என்றார்.

இது தொடர்பில் தனியார் பேருந்துச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்ததாவது. இலங்கையில் உள்ள தனியார் பேருந்துகளில் 50 சதவீதமான இப்படியான கலப்பு எரிபொருளையே பயன்படுத்துகின்றனர். இந்தப் பேருந்துகள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விடும். தற்போது பயணிகளுக்கு முழுமையான காப்புறுதியைப் பெற்றுக் கொடுக்கும் காப்புறுதி நிறுவனங்கள் சரியான முறையைப் பின்பற்றி னால் பயணிகளுக்கு இழப்பீடுகிடைக்காமல் போகக்கூடும்.

மண்ணெண்ணெய் இலகுவில் தீப்பற்றக் கூடியதென்பதால் அதனால் ஏற்படக்கூடிய இடர்களும் அதிகம்.

அத்துடன் டீசல் வாகனம் என்றுதான் பேருந்துகள் பதிவாகியுள்ள படியால் அவற்றில் மண்ணெண்ணெயைப் பாவிக்கும் போது இடர் ஏற்படுமாயின் காப்புறுதி நிறுவனங்கள் மறுப்புத் தெரிவிக்கக் கூடும். இந்த அரசு தான் இதற்கான ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

இலங்கை அரச சக்தி முகாமையாளர் சங்க இயக்குநர் நிமல் பெரேரா தெரிவித்ததாவது:

இந்தக் கலப்பு எரிபொருளில் வாகனங்கள் செலுத்தப்படும்போது அளவுக்கு மீறிய சக்தியை இயந்திரத்தின் மீது பிரயோகிப்பதால் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்களும் அதிகம். அந்த வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையானது சுற்றாடலை மோசமாக மாசடையச் செய்யும்.

அந்த இயந்திரங்களும் மண்ணெண்ணையிலிருந்தும் குறைவான கெந்தகத்தினை (சல்பர்) பெறுவதால் பாவனைக்குதவாதவைகளாக மாறிவிடும். நாட்டில் ஏற்கனவே இருக்கும் இயந்திரக் குப்பைகளின் அளவையும் அதிகமாக்கிவிடும் - என்றார்.

"இப்படிக் கலவை எரிபொருளைப் பாவிப்பது சட்டத்துக்கு முரணானது என்று" மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (5)

## பழங்களைப் பழுக்கவைப்பதற்கு மருந்து தெளித்தவருக்குச் சிறை

கொழும்பு, ஏப். 3

வாழைக்குலையைப் பழுக்க வைப்பதற்காக மருந்து தெளித்த ஒருவருக்குக் கண்டி நீதிமன்றத்தால் 6 மாத காலச் சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கண்டி நகரிலுள்ள வர்த்தகர், கடையிலிருந்து வாழைக்குலை மீது எதிரியல் எனப்படும் இரசாயனத்தைத் தெளித்துக் கொண்டிருக்கும்போது, சுகாதாரப் பரிசோதகரிடம் கையும் மெய்யுமாகச் சிக்கியுள்ளார். இதனையடுத்து அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது கண்டி மேலதிக நீதிவான் சானக, அவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துள்ளார். தண்டப் பணம் செலுத்தத் தவறினால், மேலும் ஒன்றரை மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளார்.

அனுமதிக்கப்பட்ட அளவில் இரசாயனக் கலவையுடன் மூடப்பட்ட நிலையில் பழங்களைச் சேமித்து வைப்பதற்கு சட்ட அனுமதியுண்டு. பழங்கள் மீது நேரடியாக இரசாயனங்களைத் தெளிப்பதென்பது தடை செய்யப்பட்டுள்ளது. (5)

## சிறுபான்மைக் கட்சிகளை வளைத்துப்போட கோத்தா முயற்சி

கொழும்பு, ஏப். 3

2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவது தொடர்பான அறிவிப்பை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் வெளியிடவுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் பலரிடம் இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தூது அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அரசதலைவர் தேர்தல் தொடர்பில் தனித்தனியாகச் சந்தித்து கலந்துரையாட விரும்புவதாகக் கோத்தபாய ராஜபக்சவின் சார்பில் சில தலைவர்களுக்குத் தூது அனுப்பப்பட்டுள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையால் தூய்மையான நாட்டை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே அந்தப் பணியைத் தன்னால் முன்னெடுக்க முடியுமென்றும் அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க முன்வருமாறும் கோத்தபாய ராஜபக்ச கோருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விரைவில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

## மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்படக் கூடாது

### கபே அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3



கூட்டு அரசில் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மையே கலப்புத் தேர்தல்முறை தவறானது என்று விமர்சனத்துக்குள்ளாகக் காரணமாகும். இதனைக் காரணங்காட்டி மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படக் கூடாது.

இவ்வாறு கபே அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தலின் மூலம் கொழும்பு அரசிலும், பொருளாதாரத்திலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் கூட்டு அரசு மாற்றங்களைச் சந்தித்து வருகின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை அடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது.

இதுவரையில் மூன்று மாகாண சபைகளுக்கான கால எல்லை முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் அரசு இது தொடர்பில் எவ்விதமான முடிவு களையும் முன்வைக்காதுள்ளது.

2017ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்துக்கு அமையக் கலப்புத் தேர்தல் முறைமையின் கீழ்த் தேர்தல்களை நடத்து வதற்கு அரசால் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலும் இடம்பெற்றது.

கூட்டு அரசில் காணப்பட்ட சில உறுதியற்ற தன்மைகளே இந்தத் தேர்தல் முறைமையைப் பிழையானதாக விமர்சிக்க ஏதுவாய் அமைந்துள்ளது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலையும் இந்தப் புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்த முடியும் - என்றார். (5)

## வெலிக்கடை களேபரம்:

### சிறைச்சாலை உயர் அதிகாரி வெளிநாட்டுக்குத் தப்பியோட்டம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற களேபரத்தின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய சிறைச்சாலை உயர் அதிகாரி வெளிநாட்டில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (5)

## நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வெற்றிபெற்றாலும் பொதுத்தேர்தலில் தோற்பார்கள்

### அடித்துக் கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஏப். 3

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு ரணில் வெற்றி பெற்றாலும் அடுத்தடுத்த தேர்தல்களில் எதிர்கொள்ளவிருக்கும் தோல்வியை எவராலும் தடுக்க முடியாது. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலரின் நிலைப்பாடு அதுவாகவே உள்ளது. சுதந்திரக் கட்சி இது தொடர்பில் இன்னமும் தீர்க்கமான முடிவை எடுக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணியினர் ஆரம்பத்தில் தாம் ஆதரவு வழங்கமாட்டோம் என்று தெரிவித்த போதிலும் தற்போது ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பினர் தங்களுடைய நிலைப்பாட்டை வெளியிடாத போதும் ரணிலுக்கு ஆதரவளிக்கக் கூடாது என்பதே எமது கோரிக்கையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க் கட்சி. அதன் தலைவர் எதிர்க் கட்சி ஆசனத்தில் இருந்து கொண்டு மூன்று ஆண்டுகள் காலத்தை வீணடித்துள்ளார். தொடர்ச்சியாக இந்த அரசால் ஏமாற்றப்பட்டுக் கொண்டும் இருக்கின்றார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை 6 மாத காலத்தில் பெற்றுக் கொடுப்பதாக ரணில் வாக்களித்திருந்தார். கூட்டரசு ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகாலம் நிறைவடைந்துள்ள நிலையில் இன்னும் அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனை எதிர்க்கட்சித் தலைவரும் நன்றாக அறிவார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னும் இந்த அரசால் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வியடைந்தாலும் நாம் பின்வாங்கப் போவதில்லை. நல்லாட்சி அரசுக்கு எதிரான எமது நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதன் மூலம் நல்லாட்சி அரசோ அல்லது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவோ தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கலாம் என்று அவர் கனவு காணக் கூடாது. தற்போதைய அரசை தாம் எதிர்ப்பதாக நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் உணர்த்தியுள்ளனர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு ரணில் தற்போது வெற்றி பெற்றாலும் அடுத்தடுத்த தேர்தல்களில் எதிர்கொள்ளவிருக்கும் தோல்வியை எவராலும் தடுக்க முடியாது - என்றார். (5)

# Baby Diapers & Wipes



உங்கள் குழந்தை செல்வங்களின் மெதுமையான சருமத்துக்கு ஏற்ப அதி உயர் உறிஞ்சும் திறனுடன் **Baby Diapers - MUM & ME, ISO** தராதர சான்றிதழ் பெற்றது. **4,10,20,30, 40,60** போட்ட அழகிய பொதிகளில். ஒரு **Diaper** ரூபா **26.00** மட்டுமே.

விற்றமின் E மற்றும் Aloe சார் அடங்கிய இலங்கையின் பிரசித்தி பெற்ற முதற்தர **Baby wipes cuteBaby wipes** மற்றும் **Natural + aloe & Chamomile** அடங்கிய **SENSITIVE Baby Wipes** மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்டது. பக்க விளைவுகள் அற்றது. சருமத்துக்கு மிகவும் உகந்தது.



**எம்மிடம் முதியோர்களுக்கான Diapers உம் உண்டு.**



(SUP/1387)(11.17)

வடபுல விநியோகஸ்தர்கள்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel No- **021 222 0077**
Hot Line - **077 442 2367, 077 510 6910** E-mail :- vanisurgi@sltnet.lk

# சேவைநலன் பாராட்டு விழா



**யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த 12 வருடங்களாக விஞ்ஞானபாட ஆசிரியராகக் கடமையாற்றி** கல்லூரியின் விஞ்ஞான பாட வளர்ச்சியில் உறுதுணையாயிருந்து சமூகத்தில் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான நிலையில் தனது **41 வருட ஆசிரிய சேவையிலிருந்து** இன்று (03.04.2018) ஓய்வுபெறும் ஆசிரியை

## திருமதி புனிதமலர் லோகநாதன்

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையினைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம்**

இரத்தினபுரி / பாலர் இயேசு கன்னியர் மடம் – 15.06.1977 – 31.12.1980
யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி – 01.01.1981 – 30.06.1982
வவு/ இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் – 01.07.1982 – 30.04.1986
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி – 01.05.1986 – 31.12.2002
யா/ இணுவில் மத்திய கல்லூரி – 01.01.2003 – 31.12.2005
யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி – 01.01.2006 – 03.04.2018

**வட்டமேசை**
Best Wishe **யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.** Best Wishe

# மரண அறிவித்தல்

**இறைவன் மடியில்**

## அஞ்சலோ கொட்வ்றி பிறான்சிஸ்



**பிறப்பு: 24.11.1985** **இறப்பு: 21.03.2018**

லண்டனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அஞ்சலோ கொட்வ்றி பிறான்சிஸ் 21.03.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பாசையூரைச் சேர்ந்த கிளஸ்ரா (வசந்தா), M. பிறான்சிஸ் தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான அஞ்சலீனா, தீயோமுடியப்பு இராஜேந்திரம் தம்பதிகளின் மற்றும் றீற்ரம்மா, யோவான் சூசைப்பிள்ளை தம்பதிகளினதும் பாசமிகு பேரனும், கேப்பிரியல் கலிஸ்ரஸ் பிரான்சிஸ், அனற் குளோரியா பிரான்சிஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றெபேக்காவின் அன்புக் கணவரும், கமிலா, யேக்கப் தோமஸ் (UK) பிபியானா அன்ரனி எட்வேட் (Australia), யூலியானா பிறின்ஸ் S.றெஜீஸ், J. S. ரைற்ரஸ் (Engineer) (Australia), S. கசியஸ் கிளே (ரவி) (France), S. டன்ஸ்சன் (Norway), S. லெஸ்லி றோய் (Australia) பி. பி. செபஸ்ரியன், அருட்பணிபி. பி. பிலிப் (OMI), பி. பி. கேப்பிரியல் பிறின்ஸ், காலஞ்சென்றவர்களான பி. பி. மத்தியூஸ் (Teacher), பி. பி. அன்ரனி எட்வேட் (Accountant) ஆகியோரின் பாசமிகு மருமகனும், T. M. அந்தோனிப்பிள்ளை (Attorney-at-Law), M.அல்போன்சஸ் (canada), T. M. R. ஜோசப் (UK), M.வெனான்சியஸ் (France), காலஞ்சென்றவரான M.டேவிட் இராஜேந்திரம் மற்றும் ஜோர்சியா (கமலா) ஜெனிங்ஸ்சின் (Germany) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும, ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.04.2018) புதன்கிழமை லண்டனில் நல்லடக்கம் செய்யப்படவிருப்பதால் அதே தினம் புதன்கிழமை காலை 5.45 மணியளவில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆன்ம சாந்தித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**திரு. முடியப்புபிரான்சிஸ்**
**(முன்னைநாள் இலங்கை உதைபந்தாட்ட அணித்தலைவர்)**
**மின்னஞ்சல்:**
muddiappu.francis@gmail.com

**தகவல்:**
**திரு. பி. பி. கேப்பிரியல் பிறின்ஸ்**
**இல. 10, 2ஆம் குறுக்கு வீதி,**
**பாசையூர், யாழ்ப்பாணம்.**
**தொடர்பு: 0212223179**

(J/9454)(10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை

திருமதி
## இந்துமதி கஜேந்திரன்

அவர்கள் கடந்த (28.03.2018) புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் "**கல்விமாணி**" பட்டத்தை பெற்றமையையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற்று நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/கச்சாய் அ.த.க. பாடசாலை.**

# புஸ்பகங்கா உணவகம்

சகலவிதமான சைவ சாப்பாடு,
சிற்றுண்டிகள், வைபவங்களுக்கான உணவு வகை யாவும் இங்கு செய்து கொடுக்கப்படும்.

**திருமதி திருச்செல்வம் நாதசர்மா (செந்தில்ஐயா)**
**உடுவில் வீதி, மானிப்பாய். T.P : 077 408 7168**

# ஆங்கில வகுப்புக்கள்

A.B.C தெரியாதவர்களுக்கும் கூட தரம் 1 இலிருந்து தரம் 10 வரையான மாணவர்கள் O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்கள் தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவுள்ளோர் அனைவருக்கும் அடிப்படையிலிருந்து **(25 வருடம் அனுபவம் வாய்ந்த)** பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்து உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு உதவிய சாதனை ஆசிரியர்

**K.கணேஷ்**

அவர்களால் வீடுகளுக்கும் வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
**(தென்மராட்சியில் உள்ளவர்கள் மட்டும்)**

(CS 00354) (4.17)

**077 693 5338**

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 . 05 . 1945



இறப்பு 26 . 03 . 2016

## அமரர் கந்தையா சிவகுருநாதன்

திதி - திருதியை

ஆண்டு இரண்டு சென்றாலும் ஆறவில்லை எம் துயரம் - நேரம் தவறாமல் உம் நினைவு எமை வாட்டுதே வெறுமையில் தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாவற்குழி மேற்கு, கைதடி.

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா தங்கராசா



தெல்லிப்பழை மூர்த்தி வளவைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா தங்கராசா (01.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னர் தங்கராசாவின் அன்புமனைவியும் ஜெயலதா (டென்மார்க்), ஜெயநேசன் (பிரான்ஸ்), ஜெயந்தி (ஜேர்மனி), ஜெயசுதா (சுவிஸ்), ஜெயரதி (ஆசிரியர், கிளி/ஞானிமடம்அ:த.க.பாடசாலை, பூநகரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் இலங்கேஸ்வரன், றஜிதா, சிவாதி, குஞ்சிதபாதம், தவராசா (அகில இலங்கை சமாதான நீதவான், ஆசிரியர், மு/ கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை மாங்குளம்) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான நடராசா, அன்னம்மா மற்றும் செல்லம்மா, மங்களம், சிவஞானம், சிவலிங்கம், லீலாவதி காலஞ்சென்ற திலகவதி மற்றும் சிவகுமார், இராசாத்தி ஆகியோரின் அன்புச்சகோதரியும் அபிராமி, வேனுஷன், கேதாரன், வேதாந், கவீனா, அர்ச்சனா, ஆராதனா, கபில், தனுஷ்காந், உசாந் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2018) புதன்கிழமை பி.ப; ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுவன் றோட் தொந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தேவாலய வீதி, மல்லாகம்.** **077 1041583**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

# துறைமுகங்களின் மத்திய நிலையமாக மயிலிட்டி இறங்குதுறை உருவாகும்

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3

வடக்கின் மீன்பிடி மற்றும் துறைமுகங்களின் மத்திய நிலையமாக மயிலிட்டி இறங்குதுறை உருவாகும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் மயிலிட்டி மக்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் மயிலிட்டி இறங்குதுறையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சார்ள்ஸ் நிர்மலானந்தன், மாவட்டச் செயலர், பிரதேச செயலர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் "வரவு செலவு திட்டத்தில் 15 கோடி ரூபா இந்த மீன்பிடி மற்றும் துறைமுகம் சம்பந்தமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி அமைச்சின் ஊடாக இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

அபிவிருத்தி முற்றுப்பெறும் பட்சத்தில் மீன்பிடி மற்றும் துறைமுகங்களின் மத்திய நிலையமாக மயிலிட்டி இறங்குதுறை உருவாகும். தற்போது அறிமுகமாகியுள்ள என்ரப்பிறைசஸ் லங்கா கடன்திட்டம் மூலம் மக்களின் தேவைகளை முழுமை செய்யமுடியும். பல வருடங்கள் நடைபெற்ற போர் நிறைவுள்ளது. போர் தாண்டிய நிலையில் அபிவிருத்திகளுக்காக அனைவரும் ஒன்றாக இயங்க வேண்டும்' என்றார். (எ-114)



# கைக்குழந்தையுடைய தாயிடம் சடலத்தை ஒப்படைக்கலாமா?

## மாற்று வழி வேண்டுமென்று கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 3

திடீரென உயிரிழந்தவர்களின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உரித்துடையவர்களிடம் ஒப்படைக்கின்றனர். இதில் குடும்பத் தலைவன் உயிரிழப்பின் மனைவியிடம் கையளிக்குமாறு பணிக்கப்படுகிறது. கைக்குழந்தையுடன் உள்ள தாய்மார்கள் இந்த விடயத்தில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதனால் இத்தகைய சந்தர்ப்பங்களில் நெருங்கிய உரித்துடைய உறவினர் ஒருவரிடம் சடலத்தை ஒப்படைக்கலாமா என்று பரிசீலனை செய்து நவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்படுகிறது.

அண்மையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அண்மித்த முதன்மைச் சாலையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவருக்கு நான்கு மாதக் கைக்குழந்தையும், மறுநாள் கேரதீவில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவருக்கு ஐந்து மாதக் கைக்குழந்தையும் இருந்துள்ளன.

இறப்பு விசாரணைக்கு அவர்கள் செல்வதைத் தவிர்க்க முடியாது.

ஆனால் இறப்பு விசாரணை நிறைவடைந்த பின்னர் சடலத்தைப் பொறுப்பேற்கும்வரை மனைவி மருத்துவமனையில் காத்திருக்க வேண்டுமா என்று கேட்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனை முடியும்வரை காத்திருக்க வேண்டிய நிலை மனைவிக்கு ஏற்படுகிறது.

இறப்பு விசாரணை நிறைவடைந்த பின்னரும் சடலத்தைக் கட்டாயம் மனைவிதான் பொறுப்பேற்க வேண்டுமா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று பலரும் கோரிக்கை முன்வைக்கின்றனர். (4,9)

# தண்ணீர்த் தொட்டிகளைக் கட்டாயம் 3 நாள்களுக்கு ஒருதடவை கழுவவும்

## அது நுளம்பு பெருகும் முக்கிய இடம் என்று பிராந்திய சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், ஏப். 2

**பாடசாலைகளில், வீடுகளில் தண்ணீர்த் தொட்டிகளில் டெங்குக் குடம்பி பரவிவருகின்றமை சிக்கலுக்குரிய விடயமாகியுள்ளது. 3 நாள்களுக்கு ஒருதடவை கட்டாயம் தண்ணீர்த் தொட்டியிலுள்ள தண்ணீரைத் திறந்து விட்டு, தொட்டியின் சுவர்ப் பகுதியை உரஞ்சிக் கழுவுதல் வேண்டும். தண்ணீரைத் திறந்துவிட்டாலும் சுவர்ப் பகுதியை உரஞ்சாதுவிடில் குடம்பிகள் சுவரில் ஒட்டியிருந்து தண்ணீர் நிரப்பும் போது மீண்டும் உயிர்த்துவிடும். நுளம்பு பெருகும். எனவே இந்த விடயத்தில் பொதுமக்கள் அதிக கவனம் செலுத்துங்கள்.**

இவ்வாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மழைகுறைந்தும் டெங்கு எதிர்பார்த்த ளவில் குறையவில்லை. கடந்த வருடம் முதல் காலாண்டில் டெங்கு பரவல் அதிகளவில் காணப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் நேற்றுமுன்தினம் நிறைவடைந்த முதற்காலாண்டுவரையான காலத்திலும் டெங்கு குறைவடைந்துள்ளபோதும் எதிர்பார்த்தளவில் குறைவடையவில்லை. கடந்த வருட ஜனவரியில் 596 பேரும், பெப்ரவரியில் 683 பேரும், மார்ச்சில் 863 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த வருட ஜனவரியில் 637 பேரும், பெப்ரவரியில் 310 பேரும், மார்ச்சில் 160 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு பரவுவது அதிகரித்த நிலையில் காணப்படுவதற்கும், கட்டுப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்றும் அவை கட்டுப்பாட்டுக்குள் வராதிருக்கவும் முக்கிய காரணம் தண்ணீர் தொட்டிகளே. தண்ணீர்தொட்டிகளைப் பலர் வாரக்கணக்கில் கழுவுவதில்லை. அவ்வாறான சம்பவங்கள் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் பலவற்றிலும் அவதானிக்கப்பட்டுள்ளபோதும் கரவெட்டி பிரிவில் அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளன. அதனால் தண்ணீர் தொட்டிகளில் நுளம்புகள் முட்டையிடுகின்றன. 3 தொடக்கம் 5 நாள்களில் அவை குடம்பியாகிவிடுகின்றன. 10ஆவது நாள்களில் அல்லது அதற்கு முன்னர் அவை நுளம்பாகிவிடுகின்றன.

இதனைத் தடுக்க 3 நாள்களுக்கு ஒருதடவை பாடசாலைகள் மற்றும் வீடுகள் உள்ளிட்ட இடங்களிலுள்ள தண்ணீர் தொட்டிகளைக் கழுவுதல் வேண்டும். அவை மட்டுமன்றி சிரட்டைகள், பிளாஸ்ரிப் பொருள்களில் தண்ணீர் தேங்குகின்றமை, குளிர்சாதனப் பெட்டிகளில் பின் பகுதியில் தண்ணீர் தேங்கி நின்று அவற்றின் ஊடாகவும் நுளம்புகள் பரவிப் பெருகுகின்றன.

எனவே இந்த விடயத்தில் பொதுமக்கள், கிராம அமைப்புகள், பாடசாலைகள் கவனம் செலுத்தவேண்டும். என்று சுகாதாரப் பகுதியினர் மேலும் தெரிவித்தனர். (எ-4)

# பகல் பராமரிப்பு நிலையங்களின் ஒழுக்கவிதிகள் மாகாண சபைக்கு

யாழ்ப்பாணம்.ஏப்.3

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்களின் ஒழுங்குமுறைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அதன் அறிக்கை அடுத்த வாரம் மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப் படவுள்ளது என்று மாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்கள் 25 உள்ளன.

இவை ஒரு ஒழுங்குவிதியின் கீழ் சரியாக செயற்பட வேண்டும்.

ஆனால் இதுவரை அவர்களுக்கான ஒழுங்கு முறைகள் தொடர்பான, பொதுவான விதிமுறைகள் இல்லை. இதனால் அவற்றின் செயற்பாடு ஒவ்வொரு நிலையங்களுக்குத் தனித்தனியே வேறுபட்டதாக அமைந்து காணப்படுகின்றது. அத்துடன் பகல் பராமரிப்பு நிலையங்கள் முன்பள்ளிகளுடன் இணைந்த செயற்பாடாகவே காணப்படுகின்றன.

ஆகவே இந்த நிலையங்களின் செயற்பாடுகளை ஒரு பொதுவான நடைமுறையின்கீழ் கொண்டு வருவதற்கு ஒழுங்குமுறைகள் அடங்கிய வர்த்தமானி வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்று மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள அறிக்கை மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக மாகாண சபையில் அனுமதிக்காகச் சமர்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



# மீன்பிடிக்குச் சென்றபோது மூழ்கிய படகு மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 3

மீன்பிடிக்கச் சென்றவர்களின் படகு எழுவைதீவுக் கடற்பரப்பில் மூழ்கியது. அதிலிருந்து மீனவர்கள் தப்பித்தபோதும் சில நாள்களின் பின்னரே படகை மீட்டுக் கரைக்குக் கொண்டுவர முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிகப்பட்டதாவது.

குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 19ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் எழுவைதீவுக் கடலில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். அதன்போது படகு திடீரென மூழ்கத் தொடங்கியது. அதிலிருந்தவர்கள் அங்கு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பிறிதொரு படகில் ஏறிப் பாதுகாப்பாகக் கரை சேர்ந்தனர்.

எனினும் மூழ்கிய நிலையிலிருந்த படகை மீட்டெடுப்பதற்கு இயந்திர வசதிகள் இல்லை என்று கூறப்பட்டது. அதனால் காரைநகர் கடற்படையினரின் டைவிங் படையினர்களிடம் விடயம் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து மீட்டெடுப்பதற்கு தேவையான இயந்திரங்கள் வேறு இடங்களிலிருந்து வரும்வரை காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவை எடுத்துவரப்பட்டு கடந்த 26 ஆம் திகதி படகு மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (4.112)

# ஆரோக்கியமான நண்பர்கள் வட்டம் தற்கொலை எண்ணத்தை தடுக்கும்

## வவுனியா வைத்தியசாலை உளநலப் பிரிவு மருத்துவர் சி.சுதாகரன் தெரிவிப்பு

**வவுனியா, ஏப். 3**
**ஆரோக்கியமான நண்பர்கள் வட்டத்தை உருவாக்குவதன்மூலம் தற்கொலைகளில் இருந்து விடுபட முடியும் என்று வவுனியா வைத்தியசாலை உளநலப்பிரிவு மருத்துவர் சி.சுதாகரன் தெரிவித்தார்.**



வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூத்த பொதுவுடைமை வாதியும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான இ.கா.சூடாமணியின் 5ஆவது வருட நினைவு கருத்துரையும் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலை என்பது தனி நபர்கள், சமூக ரீதியான உளரீதியான பிரச்சினைகளுக்கு சரியான முறையில் தீர்வைக் காண முடியாமல் எடுக்கின்ற பிழையான முடிவு என்று கொள்ளலாம். வெவ்வேறு விதமான சமூக சூழ்நிலைகள், பொருளாதார பிரச்சினைகள் தற்கொலைக்கான சில காரணங்களாக அமைந்து விடுகின்றன.

சமூகத்தினரின் தொடர்பின்றி தனித்திருத்தல், சமுதாயம், உறவினர்களை பிரிந்து வெளிநாடுகளில் வாழ்தல் நல்ல நண்பர்கள் வட்டத்தை ஏற்படுத்தாமல் இருப்பது போன்றவையும் தற்கொலைக்கு காரணங்களாகும்.

இன்று சில நிதி நிறுவனங்கள் வேண்டுமென்றே பொருளாதார நெருக்கடிகளை மக்களுக்கு ஏற்படுத்துகின்றன. முன்னைய காலங்களில் கடன்களை பெறுவதற்கு நாம் வங்கிக்கு சென்று சிரமமப்பட வேண்டியிருக்கும்.

ஆனால் இப்பொழுது எமது கிராமங்களுக்கே அவர்கள் வருகிறார்கள்.

அவ்வாறாகஎம்மைசிலபிரச்சினைகளில் வேண்டுமென்றே சிக்க வைக்கின்ற சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இதனாலும் இன்று பல தற்கொலைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. போருக்கு பின்னரான காலப்பகுதியிலேயே இது அதிகரித்துக் காணப்படுகிறது. தனிப்பட்ட ஆளுமை சார்ந்த பிரச்சினைகள் உணர்வுகளை கையாளும் அல்லது முடிவெடுக்கும் திறன் குறைவு போன்றனவும் தற்கொலைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த இடத்தில் பெற்றோர்களின் பங்கே அதிகமாக இருக்கின்றது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் சிறுவயதிலிருந்தே அவர்களின் உணர்வுகளை தேவைகளை ஆரோக்கியமான விதத்தில் நிறைவேற்றுபவர்களாக இருந்தால் இதன் பாதிப்புகளில் தவறான முடிவெடுப்பவர்களை விடுவிக்க முடியும். தற்போது வைத்திய சாலைகளும் தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றன்- என்றார்.

நிகழ்வில் சூடாமணியின் குடும்ப உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (எ-110)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 3
வடக்கு மாகாணத்திலுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உலக வங்கி நிதி உதவியுடன் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு மற்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அனுசரணையுடன் பழங்கள், மரக்கறிப் பயிர்கள் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, வளர்ப்பு மீன்உற்பத்தி, வாசனைத் திரவிய பயிர் வளர்ப்பு மற்றும் இத்துறைகள் சார்ந்த கைத்தொழில் துறை விருத்திக்கு இணைக்கொடை நிதி வழங்குதல் மற்றும் அரசதலைவர்செயலகத்தின்ஊடாகநடைமுறைப் படுத்தப்படும் விவசாய வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம் மூலம் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் செயற்றிட்டம்ஊடாகத்தனியார் நிறுவனங்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் என்பவற்றுக்குக் கடன் உதவிவழங்குதல்ஆகிய இருசெயற்றிட்டங்களுக்கான பதிவு செய்யப்பட்ட பயனாளிகளைத்தெளிவு படுத்தும் செயலமர்வே நடைபெறவுள்ளது.

செயலமர்வில் பங்குபெற விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் 021 221 7357 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளைமேற்கொள்ள முடியும். (எ-112,113)

## தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியே!

### உறுப்பினர் ம.தியாகராசா தெரிவிப்பு

வவுனியா. ஏப். 3
நான்கு கட்சிகளிடமும் கலந்தாலோசிக்காமல் ஆனந்தசங்கரி தன்னிச்சையாக எடுத்துள்ள முடிவானது தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் எதிர்கால செயற்பாடுகளைக் கேள்விக்குறியாக்கியுள்ளது என்று அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியைச்சேர்ந்த, வடக்குமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்தார்.

த்மிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு வவுனியாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய நிலையில் தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை முக்கிய பேசுபொருளாக காணப்படுகிறது. அந்தத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டால் ஆட்சி கலைவதுடன் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றும் நடைபெற சாத்தியம் உள்ளது. இன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து சில சபைகளில் ஆட்சியமைக்கின்றது. உண்மையில் இது மக்களுக்குச் செய்யும் பாரதூரமான துரோகமாகும்.

வவுனியாவில் கூட பல சபைகளில் தேசிய கட்சிகளுடன் இணைந்தே ஆட்சியமைக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. தமிழ் மக்கள் என்ன நோக்கத்துக்காக வாக்களிக்கிறார்களோ அந்த எதிர்பார்ப்புகளை எல்லாம் புறம்தள்ளிவிட்டு தன்னிச்சையான செயற்பாடுகளையே இந்த அரசியல் தலைமைகள் செய்துவருகின்றன.

ஆனந்தசங்கரி யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 கட்சி உறுப்பினர்கள் நீக்கப்படப்போகிறார்கள் என்று சொல்லியிருக்கின்றார். இது எந்த விதத்தில் சரி? இது உண்மையில் மனிதருக்குரிய பண்பாகுமா? நான்கு கட்சிகள் சேர்ந்தே இந்த தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு உருவானது.

ஆனால் ஏனையோரிடம் கேட்காமல் அவர் தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார். உண்மையில் ஜனநாயகம் என்பது எந்தக் கட்சி யிலும் இல்லை என்பதே உண்மை.

இன்று இந்தக் கட்சியூடாக எவற்றைச் செய்தீர்கள் என்று மக்கள் கேட்கிறார்கள். இவ்வாறு செயற்பட்டால் எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு எவ்வாறு தனது செயற்பாடுகளை கொண்டு செல்லப்போகின்றது என்பது கேள்விகுறியாகவே காணப்படுகிறது - என்றார். (110)

### யாழ்ப்பாணப் பல்கலையில்

## சுற்றுலாக் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறைசார்ந்தகற்கைநெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவட்டாரம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுற்றுலாத் துறையின் மூலம் நாட்டின்பொருளாதாரத்தை முன்னேற்றுவதோடு பல்வேறு வேலை வாய்ப்புக்களையும் இளைஞர்களுக்குவழங்கமுடியும். இதற்கான கற்றல் நடவடிக்கைகளை பல்வேறு நிறுவனங்கள் வழங்கி வந்தாலும் அதற்கான அங்கீகாரத்துடன் கூடிய கற்கை நெறி ஒன்று அவசியம். இலங்கை யில் உள்ள ஹோட்டல் கற்கை நெறியகம் தனது கிளையை வடக்கு மாகாணத்தில் நிறுவவில்லை. ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்துசெயற்படுவதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான அனுமதி மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அறிக்கை ஒன்று சமர்ப் பிக் கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## யாழ்ப்பாண இறைவரித் திணைக்களம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்.ஏப்.3
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் இடம் மாற்றப்பட்டுள்ளது என்று திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் மாடியில் இயங்கிவந்த திணைக்களம் கடந்த மாதம் 23ஆம் திகதியில் இருந்து 711,கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (எ-7)

## புதுவருட தினத்தை முன்னிட்டு சிறப்பு தொடருந்து சேவைகள்

எதிர்வரும் சித்திரைப் புதுவருட தினத்தை முன்னிட்டு இரண்டு சிறப்பு தொடருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண தொடருந்து நிலைய சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எதிர்வரும் 14ஆம் திகதி சித்திரை புதுவருடப்பிறப்பு தினத்தில் இலங்கை தொடருந்து சேவைகள் திணைக்களத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சிறப்பு தொடருந்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்குமான இரண்டு சிறப்பு சேவைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஒரு தொடருந்து சேவையும், புதுவருடத்துக்கு மறுநாள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கியும் தொடருந்து பயணிக்கவுள்ளது. இது வழமையான சேவைக் கட்டணங்களுக்கு அமை வாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# ரணிலுக்கு ஆதரவாக 120 வாக்குகள் நிச்சயம்

## நளின் எம்.பி நம்பிக்கை



கொழும்பு, ஏப்.3

தலைமைஅமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக 120 வாக்குகள் வரை நிச்சயமாகக் கிடைக்கும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"நம்பிக்கையில்லாத் தீர்மானத் தைத் தோற்கடிப்பதற்கு, தாமரை மொட்டிலிருந்து 2 அல்லது மூன்று வாக்குகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. எப்படியும் தீர்மானத்துக்கு எதிராக நாம் 120 வாக்குகள்வரை எடுப்போம்.

இந்தத் தீர்மானத்தை ஏன் கொண்டுவந்தீர்கள் என மகிந்த தரப்பின் சிலர், அவர்களுக்குள்ளேயே அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். இந்தத் தீர்மானம் வென்றாலும், தோற்றாலும் தமக்கு வெற்றியே எனப் பொது எதிரணியின் உறுப்பினரான உதய கம்மன்பில கூறுகிறார்.

தங்களின் தோல்வியை இப்போதே அறிந்துகொண்டுதான் அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிடுகின்றனர். தீர்மானம் தோற்றவுடன் இவ்வாறான கருத்துக்களையே வெளியிடப் போகின்றனர் - என்றார்.

(ற-ரி5)

# வரலாறுகளைக் கூத்தாக்கினால் மனங்களில் இலகுவாகப் பதியும்

## மட்டு கலாசார உத்தியோகத்தர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஏப்.3

பிரதேசத்தில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களை, வரலாறுகளை, கதைகளைக் கூத்துகளாக எழுதி அவற்றை அரங்கேற்ற வேண்டும். வரலாறுகளைக் கூத்தாக எழுதி ஆடுவதன் மூலம், வரலாறுகளை மக்கள் மனங்களில் இலகுவாக பதிய வைக்க முடியும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட மூத்த கலாசார உத்தியோகத்தர் த.மலர்செல்வன் தெரிவித்தார்.

படையாண்டவெளி மாருதம் கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், படையாண்டவெளி சிறி நரசிங்க வைரவர் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாழவீமன் கூத்து அரங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"இதிகாச, புராணங்களைக் கூத்தாக ஆடிவருகின்றோம். இவற்றின் தேவையும் எமக்கிருக்கின்றது. இதன்மூலமாக பல விழுமியக்கருத்துக்களையும் அறிய முடிந்தன. தற்காலச் சூழலில் தமிழர்களின் வரலாறுகள் தொடர்பில் இளந்தலைமுறைக்குத் தெரியாத நிலையிருக்கின்றது. அதற்காக எமது வரலாறுகளை, கதைகளை கூத்தாக்க வேண்டும்.

எமது வரலாறுகளை கூத்தாக எழுதி ஆடுவதன் மூலம், வரலாறுகளை மக்கள் மனங்களில் இலகுவாகப்பதிய வைக்க முடியும். இதற்கான செயற்பாடுகளை அண்ணாவிமார்களும், கூத்துப்பிரதிகளை எழுதுபவர்களும் முன்னெடுக்க வேண்டும்.

ஆலயத்தினது வரலாறுகளோ, கிராமத்தினது வரலாறுகளோ, பிரதேசத்தில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களோ இளந்தலைமுறைக்குத் தெரியாது. இவற்றை இளந்தலைமுறைக்குக் கடத்தும் ஊடகமாகக் கூத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

(ற-ரி5)

# வெற்றிடங்களை நிரப்புமாறு ஆளுநரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஏப் 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களையும் மற்றும் ஆளணி வெற்றிடங்களையும் நிரப்ப உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் கடிதங்களை நேற்று அனுப்பியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொன்னுத்துரை உதயரூபன் தெரிவித்தார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது;

மட்டக்களப்பு மாவட்டத்தில் புல் பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களும் மேலதிக ஆளணியினருக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், கல்விப் பின்னடைவைத் தவிர்ப்பதற்காகவும் இந்த அதிபர்கள் உள்ளிட்ட ஆளணி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது 1998/23 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாகவும் தாபன விதிக்கோவை அத்தியாயம் இரண்டிற்கு அமைவாகவும் 1589/30 அதிசிறப்பு வர்த்தமானியின் ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாகவும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாகவும் வெளிப்படைத்தன்மையான நியமிப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும் என்று கேட்டுக்கொள்கின்றோம்." என்றுள்ளது.

(ற,ரி4,46)

# நாவலப்பிட்டியில் தீ விபத்து: இரு குடியிருப்புகள் சேதம்



கொழும்பு, ஏப். 3

நாவலப்பிட்டி நகரசபைக்குச் சொந்தமான குடியிருப்புத் தொகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு குடியிருப்புகள் சேதமாகின.

தீ பரவலையடுத்து விரைந்து செயற்பட்ட அயலவர்கள் தீயைக் க்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும் ஒரு குடியிருப்பு முற்றாகச் சேதமாகியுள்ளதுடன் உடைமைகள் முழுவதும் தீயில் நாசமாகியுள்ளன. மற்றுமொரு குடியிருப்பு பகுதியும் சேதமாகியுள்ளது என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிபத்தில் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. மின் ஒழுக்கே தீ பரவலுக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)

# தேசிய கறுவா வாரம் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஏப்.3

தேசிய கறுவா வாரம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப கைத்தொழில் அமைச்சும் தேசிய கறுவா ஆய்வு மற்றும் பயிற்சி மத்திய நிலையமும் ஒன்றிணைந்து இதனை முன்னெடுத்துள்ளன.

கறுவா உற்பத்தி செய்யப்படும் களுத்துறை, கம்பஹா, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கறுவா உற்பத்தியை அதிகரிப்பதற்காகவே இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி5)

# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

கண்டி, ஏப். 3

கண்டி, குண்டசாலை மகாவலி ஆற்றில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மகாவலி ஆற்றில் நேற்று முன்தினம் நீராடச் சென்ற நான்கு வாலிபர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கண்டி, பகிரவகந்த பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பல்லேகெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)

# நான்கு அடி நீளமான சிறுத்தை சடலமாக மீட்பு

ஹற்றன், ஏப் .3

ஹற்றன் டிக்கோயா ஹட்லித் தோட்டத்தில் கைவிடப்பட்டு காடாகக் காணப்பட்ட தேயிலை மலையில் இருந்து நான்கு அடி நீளமான சிறுத்தை ஒன்றின் சடலம் நேற்றுக் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டது. அந்தப்பகுதியால் தொழிலுக்கு சென்ற தொழிலாளர்கள் அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. சிறுத்தையின் சடலம் உருக்குலைந்த நிலையிலேயே மீட்கப்பட்டது.

சிறுத்தையின் உடல் நல்லதண்ணியில் உள்ள வனஜீவராசி திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



# மீள்குடியேற்ற முஸ்லிம்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டும்

## கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.3

உறுகாமத்தை தமது பூர்வீக வாழ்விடமாகவும் வாழ்வாதாரமுமாகக் கொண்ட முஸ்லிம் மக்களுக்கு மீள் குடியமர்வுக்கான வீடுகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய ஏறாவூர் நகரசபை உறுப்பினருமான எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டிய கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சுமார் 70 குடும்பங்கள் தற்போது உறுகாமத்தில் மீள்குடியமர்ந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமும் அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் வேண்டுகோள்களை முன்வைத்துள்ள போதும் அந்த மக்களுக்கு உட்கட்டமைப்பு அடிப்படை வசதிகளோ போதிய வீட்டு வசதிகளோ வாழ்வாதார உதவிகளோ இழப்பீடுகளோ வழங்கப்படவில்லை.

இதனை அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் தலைமைகள் இன ஐக்கியத்துக்காகப் பாடுபடுவோர் மனித உரிமை அமைப்புக்கள் என்பன சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்றார்.

(ற-ரி5)

# வனவள அதிகாரி மீது தாக்குதல்

பொலனறுவை, ஏப்.3

பொலனறுவை சியம்பலாகஸ்வாடியவில் சுற்றி வளைப்பில் ஈடுபட்ட வனவள அதிகாரி ஒருவர் நேற்று தாக்குதலுக்குள்ளானார். எனத் தெரிவிக்கப்பட்டது. அனுமதியின்றி மணல் வியாபாரத் தில் ஈடுபட்டோரைக் கைது செய்வதற்கு சுற்றிவளைப் பில் ஈடுபட்ட வனவள அதிகாரி ஒருவரே மணல் வியாபாரி களால் தாக்கப்பட்டார். தாக்குதலுக்குள்ளான அதிகாரி மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பாக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)

## நாளை

# 04.04.2018

புதன்கிழமை

**பங்குனி 21**

திதி: சதுர்த்தி மு.இ. 07.09வரை
நட்சத்திரம்: விசாகம் மு.ப. 08.53 வரை
சுபநேரம்: 04.40–06.10 வரை
ராகுகாலம்: 12.10–01.40 வரை

## வரலாற்றில் இன்றைய தினம் 03.04.2018

1922 - சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது செயலாளர் நாயகமானார் ஜோசப் ஸ்டாலின்.

1981- கையிலெடுத்துச் செல்லத்தக்க முதலாவது கணினி ஒஸ்போர்ன் சான் பிரான்சிஸ்கோ கணினிக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது.

1995 - அதிகாரப் பரவலாக்கத்துக்கான திட்டம் தயாரென அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

2004 - ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில். தொடருந்து மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட இஸ்லாமிய தீவிரவாதிகள் அவர்களது வதிவிடத்தில் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் தற்கொலை செய்து கொண்டனர்.



2017 – ரஷ்யாவின் சென். பீற்றர்ஸ்பேர்க் நகரின் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 14 பேர் சாவடைய மேலும் பலர் காயமுற்றனர்.



L B FINANCE

# பச இசுறு

நம்பிக்கையான வைப்புக்கு நல்ல சான்றிதழ்



## "எப்படி எப்படி இது கிடைக்கும் LB க்கு போங்க கிடைக்கும்......"

| இல | காலம் (மாதங்கள்) | நி.வை தொகை ரூபா | வட்டி வீதம % | பரிசுகள | வ.வ.வீ |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | 50,000 | 10 | சிங்கர் டிரை மின் அழுத்தி | 9.77 |
| 2 | 18 | 100,000 | 10 | லகேஜ் பேக்<br>இலக்றிக் ஜக்கேத்தல் 1.7 | 9.77 |
| 3 | 18 | 250,000 | 10 | சிங்கர் பெடஸ்டோல் மின் விசிறி | 9.77 |
| 4 | 18 | 500,000 | 10 | சிங்கர் தண்ணீர் பிரசர் கன்<br>பிரஸ்டிஜ கேஸ் பேனா | 9.77 |
| 5 | 18 | 1,000,000 | 10 | சிங்கர் சலவை இயந்திரம் /சிசில் ஒற்றை குளிர்சாதன பெட்டி<br>சிங்கர் 32 டுநுனு தொலைகாட்சி பெட்டி<br>தங்க நாணயம் (பவுன் 1கூ2) | 9.77 |
| 6 | 18 | 2,000,000 | 10 | தங்க நாணயம் (பவுன) | 9.77 |
| 7 | 24 | 1,000,000 | 10.25 | தங்க நாணயம் (பவுன் 1/2) | 9.77 |
| 8 | 36 | 1,000,000 | 10 | தங்க நாணயம் (பவுன) | 9.14 |

இன்றே அழையுங்கள்: 0112 200 200

Fitch rating A-(lka)

சந்தை நிலவரம் பொறுத்து உயர் வட்டி வீதங்கள் மாற்றமடையலாம். நிலையான வைப்புக்கான இந்த வட்டி 2018 மார்ச் 26 முதல் அமுலில் உள்ளன. 1971.05.30 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்ட மூலத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் அங்கீகாரத்தை பெற்ற நிதி நிறுவனமாகும். இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி முறைக்கமைய குறித்த வைப்புக்களுக்கான பொறுப்பை காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் வைப்பாளர் ஒருவருக்கு ஆகக்கூடியது 600,000 ரூபாய் வரை நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

* 2018 மார்ச் 26 முதல் மே 31 வரை மட்டுமே செல்லுபடியாகும். * கையிருப்பு உள்ளதை அன்பளிப்புகள் பேணப்பட வேண்டும்.
* ஒவ்வொரு வைப்பும் உடன் படிக்கை காலப்பகுதி வரை பேணப்பட வேண்டும்.

L B FINANCE

எல் பீ ஃபினான்ஸ் பி எல் சீ, இல.20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி 0112 200 200 || www.lbfinance.com

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வடக்குப் பெண்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும் கூட்டுஅரசு

இராணுவத்தாலும், அரச அதிகாரிகளாலும் வடக்கு மாகாணத்தில்பெண்கள்மீதுபாலியல்வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றனஎன்று முன்னாள்அரசதலைவரும், தேசியஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்துக்குமானபணியகத்தின்இன்னாள்தவிசாளருமானசந்திரிகாவிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்மாவட்டச்செயலகத்தில்நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில், உளவியல் செயற்பாட்டாளர்களால்இந்தக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவுமாவட்டத்திலேயேபெண்களுக்குஎதிரானபாலியல்துன்புறுத்தல்களும், வன்முறைகளும் அதிகமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் நொந்து கொண்டுள்ளனர் அவர்கள். பாதுகாப்புத் தரப்பால் மட்டுமல்ல, பாதுகாப்புத் தரப்பின் அனுசரணையுடனும் இந்தத் துர்நடத்தைகள் தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்து 9 ஆண்டுகள் ஓடிமறைந்துவிட்டன. ஆனபோதிலும் வடக்கில், அதிலும் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவப் பிரசன்னம் மிக அதிகமாக உள்ளது. ஆக, அதிகரித்த இராணுவப் பிரசன்னமே அந்த மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான அத்துமீறல்கள் அதிகளவில்இடம்பெறுவதற்குமுக்கியகாரணம்என்றும் சொல்லிக்கொள்ளலாம். அதுவேயதார்த்தமும். இதன்படி பார்க்கையில், இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படுமானால்பெண்களுக்குஎதிரானஅத்துமீறல்கள்தானாகக் குறையும் என்பது மலையில் ஏற்றிவைத்த தீபத்தின் நிலையே.

கீரிமலை–நகுலேஸ்வரத்தில்அமைக்கப்பட்டஅம்மாச்சி உணவகத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையில், 'வடக்கு மாகாணப் பெண்கள்கடன் சுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்' என்று தெரிவித்துள்ளார்சந்திரிகா. ஆக, வடக்கு மாகாணப் பெண்களது இருமுதன்மைப்பிரச்சினைகள்சந்திரிகாவின்சுற்றுப்பயணத்தில் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டுள்ளன; வெளிப்பட்டுள்ளன. ஒன்று, அவர்கள் எதிர்கொள்ளும் பாலியல் அத்துமீறல்கள், மற்றொன்று பொருளாதாரப் பின்னடைவும் வறுமையும்.

சந்திரிகாவிடம் தற்போது முன்னர் போன்று இமாலய அதிகாரங்கள் இல்லை. ஆயினும் அவர் அரச தலைவர் மைத்திரி – தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டுஅரசின் முக்கிய பிரதிநிதி. அதன் அடிப்படையில், சந்திரிகாவின் ஊடாக கூட்டு அரசிடம் இந்தக் கோரிக்கைகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. பதவியேற்றது முதல் இன்றளவும் தமிழர் தாயகத்தின் எந்தக் கோரிக்கையையும் கூட்டு அரசு முழுமைப்படுத்தவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகளின்விடுதலை, வடக்கு– கிழக்கு இணைப்பு, காணிகள்விடுவிப்பு, புதிய அரசமைப்புஉருவாக்கம்என்றவாறாக நீண்டு செல்லும் இந்தப் பட்டியலில் ஒவ்வொன்றிலும் ஏமாற்றத்தையே கண்டு தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது தமிழர் தாயகம்.

ஒட்டுமொத்தத் தமிழ்ச்சமூகத்துக்கும் இதுவரை எதுவும் செய்திடாத, கூட்டு அரசு, குறைந்த பட்சம் பெண்களின் கலக்கத்தையாவது கவனத்திற்கொள்ள வேண்டும். அவர்கள்எதிர்கொள்ளும்பாலியல்துன்புறுத்தல்களைத்தடுக்க முன்வர வேண்டும். போரால் தமது குடும்பத் தலைவர்களைஇழந்துவிட்டு, தொலைத்துவிட்டுத்தவிக்கும்பெண் தலைமைத்துவக் குடும்பங்களின்வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் கட்டமைக்க, கட்டியெழுப்ப இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும். நல்ல திட்டங்களைக் கொண்டுவருவதுடன், அவற்றுக்குச் செயல்வடிவம்கொடுத்தும்அழகுபார்க்க வேண்டும். அதைவிடுத்து ஒருவர்மாறி மற்றொருவர், அவரின்பின்னால் வேறொருவராக வடக்குக்குப் பயணம் மேற்கொள்வதாலும், மேடைப் பேச்சுக்களுடன் கடமையை முடித்துப் புறப்படுவதாலும், பயனொன்றும் இல்லை. தேவை திட்டங்கள் அல்ல. அவற்றுக்கான செயல் வடிவங்களே.

---

கு.மதுசுதன்



அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் விடுதலைக்காக இன்று ஈழமே அழுகிறது. அனைத்துத் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும், வடக்கு முதலமைச்சரும், சமூக அக்கறை கொண்டோரும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் என எல்லோரும் அவருக்கான விடுதலையை வலியுறுத்தி பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

ஆனந்தசுதாகரனின் மனைவியின் மறைவின்போது, அவருக்கு நீதித்துறையால் வழங்கப்பட்ட வெறும் அந்த 3 மணித்தியாலங்கள் மட்டுமே அவரது அன்பு மனைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளவும், தான் சிறைப்பிடிக்கப்படும்போது மனைவியின் வயிற்றிலிருந்த இளைய குழந்தையையும் மூத்த மகனையும் தரிசிக்கவும், அயலவர்களுடன் துக்கம் பகிரவும், அவருக்கு அவகாசமாக வழங்கப்பட்டிருந்தது.

அந்த இறுதிக்கிரியைகளில் அவர் பங்கெடுத்துவிட்டு சிறைச்சாலை வாகனத்தில் ஏறியபோது அவருடன் அவரது மகளும் சிறைச்சாலை வண்டியில் ஏறிய காட்சியே இன்று பல மனித மனங்களின் உணர்வுகளைத் தட்டி விட்டிருக்கின்றது.

ஒருவேளை அந்தப் பச்சிளம் பாலகி அவ்வாறு சிறைச்சாலை வண்டியில் ஏறாது விட்டிருந்தாலோ ,அல்லது அவள் ஏறும்போது அந்தக் காட்சி ஒளிப்படக் கருவிக்குள் அகப்பட்டிருக்காது விட்டாலோ அது இந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறாத ஒரு சாதாரண செய்தியாக எம்மைக் கடந்திருக்குமோ என்ற சந்தேகமும் எழத்தான் செய்கிறது.

ஆனந்தசுதாகரன் என்ற பெயருக்கு எதிர்மறையாக அவரது வாழ்வியல், துன்பியல் வரலாறாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆனந்தசுதாகரனது மனைவி இறந்ததும், அவர் பிணையில் சிலமணிநேரம் வெளியில் வந்ததும், பிள்ளைகள் கண்டு கதறி அழுததும், பிள்ளை சிறைச்சாலை வண்டிக்குள் ஏறியதும் உண்மையில் எதேச்சையாக வாழ்வியலில் நடந்த சம்பவங்களே. அந்தச் சம்பவங்கள் இன்று அவரது விடிவுக்கான நீதிதேவதையின் கண்ணில் கட்டியிருக்கும் துண்டைச் சற்றுக் கீழிறக்கிப் பார்க்க வைத்துள்ளது.

இதேபோன்று ஆயிரம் ஆனந்தசுதாகரன்கள் தத்தமது மனைவி, மக்களை, உறவினரை, இன்பத்தை, சுதந்திரத்தை இழந்து அரசியல் கைதியெனும் ஒற்றை நாமத்துக்குள் உள்ளடக்கப்பட்டு தாங்கொணாத் துன்பங்களை உடலாலும் உள்ளத்தாலும் அனுபவித்து வருகிறார்கள்.

இந்த ஆனந்தசுதாகரனைப்போல எத்தனையோ தமிழ்த்தாய்மார் ஈன்றெடுத்த தமிழ்ப் பிள்ளைகள் சிறைகளிலே வாடுகிறார்கள். அவர்களின் மனைவிமார், பெற்றோர், பிள்ளைகள் வெளியே வாடுகிறார்கள். இன்று எமது கண்முன்னே தெரிவது ஒரே ஒரு ஆனந்தசுதாகரன் மட்டும்தான். அனைத்து ஆனந்தசுதாகரன்களது வாழ்விலும் இனியாவது ஒளியேற்ற தமிழர்களாகிய நாம் என்ன செய்யப்போகிறோம்?

தமிழ் மக்களது பிரதிநிதிகளாகிய எமது தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

தனியே சிறு ஆர்ப்பாட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் அல்லது மனுக்களுடன் உறங்கப்போகிறோமா?

அல்லது ஆனந்தசுதாகரன் போன்ற அரசியல் கைதிகளின் வாழ்வில் உறக்கமேயில்லாத நிலையை உணர்த்தி அவர்கள் வாழ்வை விடியச்செய்யப்போகிறோமா?

**முடியும்; முயற்சித்தால் எம்மால் நிச்சயம் முடியும்**

எமது மக்கள் பிரதிநிதிகளால் இது முடியும். மக்களால் முடியும். ஒரு போதுமே நகர்த்தவே முடியாது என்ற மகிந்த ஆட்சியை, நெம்புகோலாய் நின்று நகர்த்தி, நல்லாட்சி என்று வேடமிட்ட இந்த மைத்திரியை முடிசூட்டி ஆட்சிப்பீடமேற்றி அழகுபார்த்தவர்கள் தமிழர்களாகிய நாம். எமது பலம் அதுதான். என்னதான் சிங்களதேசம் பௌத்தம், சிங்களம் முன்னுரிமை என்றாலும் தனித்து அவர்களால் ஆட்சி அமைத்துவிடவும் முடியாது; அமைந்துவிடப் போவதுமில்லை. தனிக்காட்டு ராஜாவை தலைகீழாய் மாற்றிவைத்த மக்கள் பலம் இப்போது எங்கே? அதை ஊக்குவித்த மக்கள் பிரதிநிதிகள் எங்கே?

அனைவரும் சேர்ந்து நெம்பினால் அரசியல்கைதிகளின் விடிவுக்கான அந்தத் தடைக்கல் மெல்ல நகரும். அனைத்து அரசியல்கைதிகளின் வாழ்க்கையிலும் விடிவு ஏற்படும். சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள் ,மக்கள் அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், சட்டத்தரணிகள் சங்கங்கள் என அனைத்துத் துறையினரும் மனம் வைத்து ஒரு புள்ளியில் குவிந்து செயற்பட்டால், அவர்களின் விடிவென்பது நிச்சயம் மலர்ந்தே ஆகும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதியன்று செந்தூரன் என்ற யாழ். கொக்குவில் இந்துவின் உயர்தர மாணவன் கோண்டாவில் புகையிரதக் கடவையில் புகையிரதத்துக்கு குறுக்கே பாய்ந்து தற்கொலை புரிந்ததேன்? அரசியல் கைதிகளின் விடிவை மைத்திரிக்கு வலியுறுத்தி கடிதம் எழுதி வைத்து விட்டுத் தனது உயிரை மாய்த்துக் கொண்டான் அவன். இன்னும் அவர்களுக்கான விடிவு எட்டப்படவில்லையே!!

கடந்த மூன்று தசாப்தகாலமாக நாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழலால் எம்மவர்களில் பல இளைஞர்கள் அரசியல் கைதிகளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. எனினும் போர் முடிவடைந்து ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்ட

“இந்த ஆனந்தசுதாகரனைப்போல எத்தனையோ தமிழ்த் தாய்மார் ஈன்றெடுத்த தமிழ்ப் பிள்ளைகள் சிறைகளிலே வாடுகிறார்கள். அவர்களின் மனைவிமார், பெற்றோர், பிள்ளைகள் வெளியே வாடுகிறார்கள். இன்று எமது கண்முன்னே தெரிவது ஒரே ஒரு ஆனந்த சுதாகரன் மட்டும்தான். அனைத்து ஆனந்த சுதாகரன்களது வாழ்விலும் இனியாவது ஒளியேற்ற தமிழர்களாகிய நாம் என்ன செய்யப்போகிறோம்? தமிழ் மக்களது பிரதிநிதிகளாகிய எமது தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? தனியே சிறு ஆர்ப்பாட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் அல்லது மனுக்களுடன் உறங்கப் போகிறோமா?”

# ஆனந்தம் இல்லாத ஆனந்த சுதாகரன்கள்

இப்போதும், பல போராளிகள் புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட பின்னரும், பல முக்கிய தளபதிகள் சுதந்திரமாக இருக்கும் போதும், காலச் சூழ்நிலைகளால் அரசியல்கைதிகளாக்கப்பட்டவர்களின் விடயத்தில் மட்டும் ஏன் நீதி தேவதையின் கண்கள் இறுகக் கட்டப்பட்டுள்ளன.





### அரசியல் கைதிகளான தமது பிள்ளைகளின் விடுவிப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெற்றோர், உறவுகள்

நல்லாட்சி என்ற நாமத்துடன் ஆட்சிபீட மேற முயன்றவர்களுக்கு, அரசியல் கைதிகளான தமது பிள்ளைகள் விடுவிக்கப்படலாம் என்ற ஒரே எதிர்பார்ப்பின் அடிப்படையில்இந்த அரசியல் கைதிகளின் பெற்றோர்கள்.அண்ணன்மார், தம்பிமார்,மனைவிமார்,உற்றார் ,உறவினர்கள் என அத்தனைபேரும் வாக்களித்ததை மைத்திரி மறந்துவிட்டாரா?

எனக்காக வாக்களித்த தமிழ் மக்களை மறக்க, நான் நன்றிகெட்டவன் அல்ல, என்று யாழ்ப்பாணத்தில் வைத்துப் பெரும் எடுப்பில் தாம் கூறிய கூற்றுக்கு அமைய அவர் செயற்படவில்லையே?

மக்கள் உங்களுக்கு ஏன் வாக்களித்தார்கள்?

*தங்கள் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்?

*தங்கள் பிள்ளைகள் விடுவிக்கப்பட வேண்டும்.

*காணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களுக்கு நேர்ந்தகதி என்ன என்பதுகுறித்துத் தெளிவாக்கப்பட வேண்டும்.

*தமிழருக்கான நீதி வேண்டும்

என்ற தமிழ்மக்களது அடிப்படைத் தத்துவங்களுக்காகவும், அடிப்படை உரிமைகளுக்காகவுமே வாக்களித்தார்கள். அன்று நீங்கள் நீதிதேவனாக, சுதந்திரப் புறாவாக உங்களை அடையாளம் காட்டி , எங்கள் மக்களின் வாக்கெனும் அரிசிப் பருக்கைகளை புசித்துவிட்டு இன்று விடிவேயில்லாத அவர்களுக்கான நீதியை எதற்காகத் தாமதிக்கிறீர்கள்.?

இன்று ஆனந்தசுதாகரனின் மகள் அரச தலைவருக்கும், அவரது மகளுக்கும் தனது தந்தையின் விடிவுக்காய் கடிதம் எழுதுகிறாள். சிங்களச் சிறுமிகளுக்கும் தமிழ்ச் சிறுமிகளுக்கும் மனதும் இதயமும் ஒன்றுதான் என மைத்திரி புரிந்துகொள்வாரா? இல்லையா? என்பது குறித்து பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி வரலாற்றில் இடம் பிடியுங்கள்

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழித்த உங்களால், இந்நாட்டில் சுபீட்சத்தை ஏன் ஏற்படுத்த முடியவில்லை? உங்களைக் கொலை செய்ய முயன்றவரைப் பொதுமன்னிப்பளித்து விடுவிக்கும் போது ஏன் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க முடியாதுள்ளது?

சிகிரியா பளிங்குச்சுவரை சேதப்படுத்தி ஆயுள் தண்டனை பெற இருந்த பெண்ணுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய நீங்கள், இந்த தமிழ் அரசியல் கைதிகளது மனங்களை ஏன் மேன்மேலும் சேதப்படுத்துகிறீர்கள்?

நீங்கள் செல்லும் வழியில் கையசைத்த சிறுமிக்காய் வாகனத்தை நிறுத்தி, அவள் வீடு சென்ற உங்களுக்கு, இந்த ஆனந்தசுதாகரனின் மகளின் கதறல் காதில் விழவில்லையா ? அவளது வீடு செல்லும் பாதை தெரியவில்லையா? இல்லை அவள் தமிழச்சி என்று நினைக்கிறீர்களா?

இங்கு நீங்கள் வாழையிலையில் சாப்பிடுவதை பெருமையாகப் பேச நாங்கள் விளையவில்லை ஐயா!

நீங்கள் ஆனந்தசுதாகரனைப் போன்றோரின் வாழ்வில் ஒளியேற்றி பெருமைகொள்ளவே விரும்புகிறோம்.

நீங்கள் அரச தலைவராவதற்கு முன்னரும், அரச தலைவரானதன் பின்னரும் நான் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பேன், ஒருமுறைதான் அரச தலைவராக இருப்பேன் என்றெல்லாம் பேசினீர்களே?

ஐயா,

ஒருமுறை நாட்டின் அரச தலைவராக இருக்கும்போதே நீங்கள் நீதியை நிலை நாட்டுங்கள். அனைத்து மக்களையும் நேசியுங்கள்; எழுபது வருடங்களுக்கு மேலாக இழுபடும் இனப்பிரச்சினையை உமது ஒருமுறை ஆட்சியில் தீர்த்து வையும்; தீர்வை வழங்கும்; நீதியை வழங்கும்; அப்போது தான் உமது ஒருமுறை ஆட்சி ஓராயிரம் ஆண்டுகள் வரலாற்றில் நிலைத்து நின்று பேசும்.

### தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால் அரச தலைவர் உலகப் புகழ் பெறுவார்

இன்று விடுதலைப்புலிகளை ஒழித்தமைக்காக மகிந்தவை இலங்கை சிங்கள, முஸ்லிம் மக்கள் கொண்டாடுவதை நீங்கள் அறிவீர்கள். அதுபோல தமிழர்களுக்கு விடிவை, தீர்வை , உங்கள் ஆட்சியில் முறைப்படி வழங்கினால், உலகமே உம்மைப் பாராட்டும். இலங்கை வரலாற்றில் உமது பெயர் பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து நின்று பேசும். தமிழ் மக்கள் உமக்களித்த வாக்குகளை இறைவனுக்களித்த தட்சணையாக அல்லவா எண்ணுவர்? நீர் அரச தலைவராக நாட்டின் தலைவராக நின்று முடிவெடும். நீர் பின்பற்றுவது பௌத்தமாக இருக்கட்டும்; ஆனால் அதன் உண்மைப்போதனைகளை நீர் பின்பற்றி நடைமுறைப்படுத்தும்; நீர் புத்தனின் வாரிசு என நிரூபித்துக் காட்டும்.

> “நல்லாட்சி என்ற நாமத்துடன் ஆட்சிபீட மேற முயன்ற வர்களுக்கு, அரசியல் கைதிகளான தமது பிள்ளைகள் விடுவிக்கப்படலாம் என்ற ஒரே எதிர்பார்ப்பின் அடிப்படையில்இந்த அரசியல் கைதிகளின் பெற்றோர்கள்,அண்ணன்மார், தம்பிமார்,மனைவிமார்,உற்றார் ,உறவினர்கள் என அத்தனைபேரும் மைத்திரிக்காக வாக்களித்ததை மைத்திரி மறந்துவிட்டாரா?”

நீர் எடுக்கும் சிறந்த முடிவுகளுக்கு பௌத்த மகாசங்கங்கள் தடையாக அமைந்தால், தயவுசெய்து மகாநாயக்கர்களைஅரச தலைவராக்கிவிட்டுநீர் விலகிக்கொள்ளும்.

ஏனெனில் ஒரு நாட்டின் தலைவரானவர் தமது நாட்டின் குடிமக்களுக்கு என்ன வேண்டுமோ, தமது நாட்டின் சுபீட்சத்துக்கு என்ன செய்யவேண்டுமோ, அவை குறித்து ஆழ அறிந்து முடிவை, உறுதியான தீர்மானமாக மேற்கொள்ள வேண்டும்.

ஒரு நேரத்தில் ஒன்றுதான் முக்கியம் பெற வேண்டும். ஒன்று; நாடா இல்லையேல் சுடுகாடா? மற்றையது; அரச தலைவர் ஆட்சி முறையா? மகாநயக்கர்களின் ஆட்சியா? ஆக, இலங்கை வரலாறு உமது பெயரை நின்று நிலைக்க வைக்க உமக்கொரு வரலாற்றுச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது ஐயா! அதைச் சிறப்பானதாகப் பயன்படுத்துங்கள். அதற்கு முன்னுதாரணமாக அரசியல் கைதிகள் அத்தனை பேரையும் உமது பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவித்து, நீங்கள் இந்த நாட்டு மக்களது அதிபதியே தவிர மகாநாயக்கர்களின் அதிபதியல்ல என எடுத்து இடித்துரையுங்கள். சூளுரைகள் வரட்டும்; நீங்கள் தனித்து நில்லுங்கள்.

## ஆசிரியருக்கான கடிதம்

### மணல் பெறுவதிலும்கூட பிரச்சினையை எதிர்கொள்கிறோம்!

ஏப்ரல் முதலாம் திகதிய உதயனின் இணைப்பான சூரியகாந்தியில் மணல் பெறுவதில் பொதுமக்கள் படும் அவலங்கள் குறித்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பு மக்களின் மணல் தேவைபற்றி அக்கறை கொள்ளாத தன்மையையும், மணல்வளம் காக்கப்படவேண்டிய அவசியம் குறித்தும், போட்டிபோட்டுக்கொண்டு ஓட்டுவதால் விபத்து ஏற்பட்டு உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதையும் தத்ரூபமாக கட்டுரை மூலம்மிகவும் தெளிவாக குறிப்பிட்டமைக்கு நன்றி.

முல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை சில வீடுகட்டும் பயனாளிகள் தமக்குத் தேவைப்படும் மணலை ஏற்ற முடியாத நிலையில் உள்ளனர். காரணம், பொலிசார் பிடித்து விடுவார்கள். வேறு ஒருவரைக்கொண்டு ஏற்றுவித்தால் அதிகவிலை கொடுக்க வேண்டும்.

மணலுக்கான அனுமதிப்பத்திரமும் இலகுவில் கிடைப்பதில்லை. அனுமதி கிடைத்தாலும் தேவைக்கேற்ப ஏற்ற முடிவதில்லை. ஒரு வீடுகட்ட அல்லது கிணறு கட்ட ஒன்று அல்லது இரண்டு லோட் மணல் போதுமானதா? இதனைஅதிகாரிகள் சிந்திப்பது இல்லை.

எமதுமாவட்டத்தில்மணல்வளம்உண்டு. ஆனால் எமது வாழ்விடம் அமைக்க தேவையானவற்றைபெற முடியாத நிலை தான் நிலவி வருகிறது. இனிமேலாவது இது விடயத்தில் மக்களுக்கு நன்மை ஏற்படுமா, பொறுத்திருந்து பார்ப்போம்.

இரா.தனம், ஒட்டுசுட்டான்

### இனியாவது இவர்கள் திருந்துவார்களா?

கடந்த தடவை போன்று இம்முறையும் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

கடந்த தடவையும் இந்தப் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர்.

ஆயினும் சிலர், பரீட்சை இறுக்கமான வகையில் முறைப்படி நடத்தப்படாமையாலேயே அந்தப்பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டதாகப் பொய்யுரைத்து அந்த மாணவர்களுக்கும், பாடசாலைச் சமூகத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

இதனால் கல்வித் திணைக்களத்தினர் இம்முறை பரீட்சை இடம்பெற்ற வேளையில், இறுக்கமான கண்காணிப்பை மேற்கொண்டனர். ஆனாலும் மாணவர்கள் தமது பாடசாலை மீது சிலர் ஏற்படுத்திய களங்கத்தைப் போக்கும் முகமாக இம்முறையும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்துள்ளனர்.

ஒரு பாடசாலை மீதும், மாணவர்கள் மீதும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில்வதந்திகளை பரப்புவதும், உண்மை நிலைமையைத் திரித்துக் கூறுவதும், பாவமான செயலாகும். இவ்வித செயற்பாடுகளில் ஈடுபடும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் இனியாவது தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

பா.தனலஷ்மி, அனலைதீவு



# காசாவில் மீண்டும் ஏற்பட்டது பதற்றம்

## ஹமாஸ் - இஸ்ரேல் முறுகல்

டெல்அவிவ், ஏப். 3

காசா பகுதியில் ஹமாஸ் ஆயுதக் குழுவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் மீண்டும் முறுகல் ஏற்பட்டதை அடுத்து, பலஸ்தீனர்களும் யூதர்களும் செறிந்து வாழுகின்ற பகுதிகளான காசா, மேற்குக் கரை, ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களில் பதற்றம் நிலவுகிறது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் குறிப்பிட்டது.

பலஸ்தீனர்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிவரும் ஹமாஸ் அமைப்பால் காசா பகுதியில் கடந்த வாரம் நடத்தப்பட்ட போராட்டத்தின்போது, இஸ்ரேல் படையினர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதை அடுத்தே இந்தப் பதற்றம் தோற்றம் பெற்றது என்று சொல்லப்படுகிறது.

இஸ்ரேலின் தலையீட்டையும், தாக்குதலையும் கண்டித்து சுமார் 10ஆயிரம் பலஸ்தீனர்கள் காசாவில் நேற்றுமுன்தினம் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போதும் இஸ்ரேல் படைகளால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. சுமார் 16 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதையடுத்தே பலஸ்தீனர்களும் யூதர்களும் (இஸ்ரேலியர்கள்) செறிந்து வாழும் பகுதிகளான காசா, மேற்குக் கரை, ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களில் பதற்றம் நிலவுகிறது. அதிலும் குறிப்பாக காசாவில் கலவரம் வெடித்துள்ளது. அங்கு நிலைமை கட்டுக்குள் அடங்காமல் சென்றுள்ளது என்று ரொயிட்டர்ஸ் மேலும் குறிப்பிட்டது. (ம)



இஸ்ரேலின் அத்துமீறலைக் கண்டித்து காசாவில் தற்போது நடைபெற்றுவரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறப்புத் தேவையுடைய நபரொருவரின் ஒளிப்படமே இது.

## தலை இல்லாத கோழி



தாய்லாந்தின் ராட்சபுரி மாகாணத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்து, உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தலை வெட்டப்பட்ட கோழி ஒன்று, ஒரு வாரத்துக்கும் மேலாக உயிருடன் இருக்கிறது. உடலை அசைக்கிறது. நடக்கிறது.

"இந்தக் கோழியைப் பார்ப்பதற்கும், ஒளிப்படம் எடுப்பதற்கும், தம்படம் (செல்பி) எடுப்பதற்கும் ஏராளமானவர்கள் ஆர்வம் காட்டிவருகிறார்கள். புத்ததுறவிகள் கோயிலுக்கு அருகே கோழியைப் பார்த்ததாகச் சொன்னார்கள். தலையே இல்லை என்றாலும் சாவை ஏற்றுக்கொள்ள மறுத்து, வாழ நினைக்கும் இந்தக் கோழிக்கு உதவவேண்டும் என்று முடிவு செய்தேன்.

அதனால் கோழியை பத்திரமாகக் கவனித்துக் கொள்கிறேன். ஊசி மூலம் திரவ உணவை, தொண்டை வழியே செலுத்துகிறேன். கோழி தன் விருப்பம்போல் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் பாதுகாக்கத் தயாராக இருக்கிறேன்" என்கிறார் கால்நடை மருத்துவர் சுபகதீ அருண் தோங்.

இதுபோன்ற ஒரு சம்பவம் நடப்பது இது முதல் முறையல்ல. அமெரிக்காவில் இவ்வாறான தொரு சம்பவம் ஏற்கனவே பதிவானது. 1945ஆம் ஆண்டுமைக் என்ற தலை இல்லாத கோழி, 18 மாதங்கள் வரை உயிருடன் இருந்திருக்கிறது. (ம)

## ஈரானில் இரட்டை அதிர்வு

தெக்ரோன், ஏப். 3

ஈரானில் நேற்று இரட்டை நில நடுக்கம் ஏற்பட்டது.

ஈரானில் சமீப காலமாகவே தொடர்ச்சியான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. தலைநகரான தெக்ரோனில் இருந்து சுமார் 90 கிலோமீற்றர் தொலைவில் நேற்று இரட்டை நிலநடுக்கம் ஏற்பட்டது. 54 பேர் காயமடைந்தனர் என்று முதல் கட்டத் தகவல் வந்துள்ளது. உயிரிழப்புத் தொடர்பில் எந்த விதத் தகவலும் பதிவாகவில்லை. (ம)

## தென்பசிபிக் கடலில் வீழ்ந்தது சீனாவின் விண்வெளி நிலையம்



பீஜிங், ஏப். 3

விண்வெளியில் கட்டுப்பாடற்று சுற்றிய சீன விண்வெளி நிலையத்தின் பாகங்கள் தென்பசிபிக் கடலில் நேற்று விழுந்தன.

சீனா கடந்த 2011ஆம் ஆண்டு ஏவிய 'டியான்காங்1' என்ற விண்வெளி நிலையம் செயலற்றுப்போய்விட்டதாக சீனா கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி அறிவித்தது. அதன்பின்னர் விண்வெளியில் கட்டுப்பாடற்று சுற்றி வந்துகொண்டிருந்த இந்த விண்வெளி நிலையம் படிப்படியாக பூமியை நோக்கி வரத்தொடங்கியது. விண்வெளி நிலையத்தின் சில பாகங்கள் நேற்று பூமியில் வந்து விழும் என்று விஞ்ஞானிகள் கணித்திருந்தனர். இதன்படி அவை தென்சீனக் கடல்பகுதியில் நேற்று விழுந்தன. காற்றின் உராய்வால் பெரும்பாலான பகுதிகள் எரிந்துவிட்ட காரணத்தால் பூமிக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது என்று சீனா அறிவித்தது. (ம)



கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா (ஈஸ்டர்) உலகெங்கும் நேற்று முன்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. வத்திக்கானில் பாப்பரசரின் தலைமையில் வழிபாடுகள் நிறை வேற்றப்பட்டன. (ம)

# ஜெருசலேமில் ஈஸ்டர் கோலாகலம்



ஜெருசலேம், ஏப். 3

ஈஸ்டர் திருநாளை ஜெருசலேம் நகரம் விழாக்கோலம் பூண்டு நேற்றுமுன்தினம் வரவேற்றது. இயேசுக் கிறிஸ்துவின் கல்லறை இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள பழமையான தேவாலயத்தில் கொண்டாட்டங்கள் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டன.

இயேசுக் கிறிஸ்துவின் கல்லறை என்று அடையாளம் காணப்பட்ட இடத்தில் நான்காம் நூற்றாண்டில் இந்தத் தேவாலயம் கட்டப்பட்டது. இந்தத் தேவாலயத்தில் ஒவ்வொரு வருடமும் ஈஸ்டர் கொண்டாட்டங்கள் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படும். இந்த வருடமும் கொண்டாட்டங்கள் சிறப்பாகவே முன்னெடுக்கப்பட்டன. பலஸ்தீன ஆயுதக் குழுக்களிடத்தில் இருந்து வந்த அச்சுறுத்தல் காரணமாக தேவாலயத்துக்கு உயர் பாதுகாப்பை இஸ்ரேல் அரசு வழங்கியது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 01 . 10 . 1940

விண்ணில் 12 . 04 . 2009

## அமரர் சின்னையா புலேந்திரன்

திதி: அபரபக்க திருதியை

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அப்பாவே !
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பா !

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம். (CS 15351) (14.17)
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



விண்ணில் 07 . 08 . 1941

மண்ணில் 03 . 04 . 2017

## திருமதி அகஸ்ரின் அன்னம்மா

(அன்னமுத்து)

சாற்றுதற்கில்லை வார்த்தை நீயெம்மை
ஏழ்மையிலும் செம்மையாய் வளர்த்த மேன்மை
போற்றுதற்கில்லை நின்பாதம் இம்மண்ணில்
தாழ்பணிந்து வணங்கி நன்றிகூற
ஏற்பதற்கில்லை இன்று நீர் எம்மருகில்
இல்லவே இல்லை எனும் சொல்லை
ஆற்றுதற்கில்லை எமைப் பிரிந்து நீ
எங்கோ பறந்தாய் எனும் கவலை.

**உங்கள் ஆன்மா இறைவனடியில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கும்....**

இல.54, ஈச்சமோட்டை, கடற்கரைவீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். (CS15159)(11.17)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## நாகமுத்து வேலுப்பிள்ளை

*(முன்னாள் கிளை முகாமையாளர் - அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.ச.)*



பிறப்பு 11.08.1927 இறப்பு 02.04.2018

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளருமான நாகமுத்து வேலுப்பிள்ளை நேற்று (02.04.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுசீலாதேவி, சறோஜினிதேவி (கனடா), காலஞ்சென்ற ரஞ்சினிதேவி, யோகவதனி (சுவிஸ்), ஞானவதனி (லண்டன்), நாகேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), தினேஸ் (அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகலிங்கம், ரவீந்திரன் (கனடா), பகீரதன் (சுவிஸ்), சுபாஜினி (கனடா), லக்சனா, லதாயினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவிலங்கை, அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(J 9453/15/17)

# யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான Hotel க்கு பின்வரும் பணிநிலைகளுக்கு வேலையாள்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (Waiters)
- சுத்திகரிப்பாளர் (Cleaners)
- வரவேற்பாளர் (Receptionist)

(ஆங்கிலம், சிங்களம் தெரிந்திருத்தல் அவசியம்)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 04.04.2018 புதன்கிழமை 855, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள எமது நிறுவனத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.

(யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

**தொடர்புகளுக்கு - 077 008 3000**

(CS 15363/15/17)

# கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி. ம. வில்வராஜசிங்கம்** அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி**
## செல்வராணி சூசைமுத்து
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.**

(CS 15353) (04.17)

# வவுனியா வடக்கு வலயத்தில் அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வவுனியா வடக்கு வலயத்தில் உள்ளகீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலையில் அதிபர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சேவையாற்றும் இ. அ. சேவைதரம் III, இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை வவுனியா வடக்கு வலயகல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் பெற்று எதிர்வரும் 2018.04.12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரில் அல்லது "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு, புளியங்குளம்." எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**நியந்தனைகள்**

1. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடகாலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

வெற்றிடவிவரம்.

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடத்திற்கான பதவி |
|---|---|---|---|
| 01 | வ/மாமடு ஶ்ரீவாணிவித்தியாலயம் | III | அதிபர் |

**வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விஅலுவலகம்,
வவுனியாவடக்கு**

(IN/6362)(11)

# மரண அறிவித்தல்

## கதிரைவேலு அப்புத்துரை (துரையர்)



கீரிமலை, போயிட்டியைப் பிறப்பிடமாகவும் கிளானை, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரைவேலு அப்புத்துரை (துரையர்) நேற்று (02.04.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரைவேலு - பத்தினி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் மாதியான் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் தெய்வேந்திரம் இராஜேந்திரம் காலஞ்சென்ற அம்பிகாதேவி மற்றும் மல்லிகாதேவி, நிர்மலாதேவி, தர்மேந்திரம் கேதீஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரோகினிதேவி, விஜயலட்சுமி, சிவராசா, மஞ்சுளாதேவி ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் வித்தியா, யசிந்தன், பிரதாயினி, அனோஜன், சஜீவன், ஜீவியா, கிரிசாந்த், பரனிகா, கஜேந்திரன், அபிராஜ், லக்சிகா, லதுர்சிகா, துலக்சன், அபிசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், பொன்னு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.0 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை, செம்மண் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிளானை,
கொல்லங்கலட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 303 9578**

# வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்.நகரை அண்டிய பகுதியில் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு (30 000/= மாத வாடகையும் 300 000/= முற்பணமும்)

**தொடர்பு - 077 314 4128**

(CS 15354/15/17)

# காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கெருடாவில் வீரபத்திரர் கோயில் வீதியில் உள்ள $15\frac{1}{2}$ பரப்புக் காணி, 70 தென்னைமரம், 10 பனைமரம், வேப்பமரம், சமண்டலை, மாமரங்கள் உட்பட விற்பனைக்குண்டு.

**076 834 9814**

# வீடு, காணி விற்பனைக்கு

சுதுமலைதெற்கு, மாவத்தைலேனில்நிலப்பரப்பு 03 குளி, 8.57 வீட்டுடன் கூடிய காணியும் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் சந்தனை வயிரவர் கோயிலடியில் நிலப்பரப்பு 33 குளி 11.12 மேட்டுக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 834 2635**

(CS 9452/15/17)

உதயன்

விளம்பர தொடர்பு களுக்கு

advt@uthayan.com,

021 493 1111

E.S Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=






021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் மாணவிகளான




செல்வி நிரோஜினி நளேந்திரன்
( யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)
8A,B

செல்வி பூமிகா யோகேந்திரன்
( யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)
5A,2B,C

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமையையிட்டு மனம் மகிழ்ந்து வாழ்த்துவதுடன் மேலும் பல கல்வியில் சாதனைகளை நிகழ்த்தி நீடூழி காலம் சிறப்பாக வாழ வடமராட்சி எள்ளங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தென்மராட்சி வனுவில் நாகபூஷனி அம்பாள் துணை வேண்டியும் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
குட்டிமாமா, அத்தை, மைத்துனர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்

வாழ்த்துவோர்:-
சித்தி, சித்தப்பா, தம்பிமார்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

வனுவில் வீதி, நுணாவில் மத்தி சாவகச்சேரி (AJA/1443)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வரணி மத்திய கல்லூரி மாணவியான

உதயகுமார் அஸ்வினி

7A,2B



2017ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எமது அன்புச் செல்வத்தை மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் -
அப்பா, அம்மா, தம்பிமார்கள், அப்பம்மா, அப்பப்பா, அத்தை மற்றும் மச்சிமார்கள்.
தாவளை, இயற்றாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

க.பொ.த.[சா/த] 2017 பரீட்சைப் பெறுபேறுகள்



ஸ்.பிரியங்கா - 4A, 3B,C
அ.டனுஜன் 3A, 3B, 2C,S
ஜோ.பிரேசன் 2A, 4B,2C

யே.தபிஷா - 8A,B

பாடசாலை சமூகம், யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

## அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

மாபெரும் மெகா சேல்

10%-50% வரை விலைக்கழிவு



15.04.2018 வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

- ✓திருமணப் பட்டு சாறிகள்
- ✓கொட்டன் சாறிகள்
- ✓சில்க் சாறிகள், அலுவலக பாவனை சாறிகள் (Office Ware Saree)
- ✓சல்வார்கள், ✓சல்வார் துணிகள்
- ✓டொப் வகைகள் ✓சேட் வகைகள்
- ✓சிறுவர், சிறுமிகளுக்கான ஆடை தினுசுகள்

அனைத்தும் ஒரே கூரையின் கீழ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



10,000/- ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இந்தியன் செலக்ஷனின் சின்னம் பொறிக்கப்பட்ட அழகிய குடை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.



# ‘கோகோ’ படத்தின் கதை கசிந்தது

இமைக்கா நொடி,அறம், கொலையுதிர் காலம் மற்றும் வேலைக்காரன் ஆகிய படங்களைத் தொடர்ந்து நயன்தாரா நடித்துவரும் படம் 'கோலமாவு கோகிலா' . இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் நெல்சன் இயக்குகிறார். 'கோகோ' என்று சுருக்கமாக தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். படத்தின் கதை சமூக வலைத் தளங்களில் கசிந்துள்ளது.

கோலமாவு விற்று வாழ்க்கை நடத்து ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் கோகிலா. குடும்பத்தின் வறுமையை போக்க கடுமையாக உழைக்கிறார். எவரும் துணையில்லாத ஒரு ஏழைக்குடும்பத்தில் ஒரு பெண் அழகாக இருந்தால் என்னென்ன பிரச்சினைகள் வருமோ அதெல்லாம் வருகிறது. அதையெல்லாம் சமாளிக்கிறார். இந்தப் போராட்டத்துக்கு இடையில் ஒரு கொலை குற்றச்சாட்டிலும் சிக்கிக் கொள்கிறார். இதனால் வில்லன்களும் அவரைத் துரத்துகிறார்கள். கோகிலாவிடம் இருப்பது அழகு என்ற ஆயுதமும் புத்திசாலித்தனமும். இந்த இரண்டையும் வைத்துக் கொண்டு எதிரிகளை சமாளித்து தன் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுகிறார் என்பதுதான் கோகோ படத்தின் கதை.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய மூலதனம் அதிகம் தேவைப்படும். உடல்நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**மிதுனம்:** தாமதமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**கடகம்:** வெளி வட்டார தொடர்பால் பிரச்னை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**சிங்கம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கத் தாமதமாகலாம். குடும்பத்தினருடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடும். இலாபம் சுமார்.

**கன்னி:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**துலாம்:** சிலரது அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். அலைக்கழிப்பு உருவாக்கிய வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சேமிப்பு கூடும். நண்பரால் நன்மை உண்டாகும்.

**மகரம்:** பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க முழு முயற்சியுடன் பணியாற்றுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கும்பம்:** திட்டமிட்ட பணிகள் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும்.

**மீனம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் முயற்சி தேவைப்படும். லாபம் மிதமாக இருக்கும். எதிரி தொல்லை மறையும்.

## குறூப்பா சுற்றுலா போக திட்டம் போட்டா கடைசியில இப்படித்தான்....




**சப்பாணி @manipmp**

நல்ல இசைக்கும் நல்ல மனைவிக்கும் தலையாட்டாதவன் மனிதனே அல்ல

குடித்தவர் பேச்சில் வார்த்தைகளே கிடையாது, வெறும் அர்த்தங்கள் மட்டுமே.

எல்லாம் கடந்து போகும் என்றார்கள்.. பாதை மட்டும் அப்படியே இருந்தது

Pdf வில் படிப்பவனுக்கு தெரியுமா புத்தக வாசனை?

**விசித்திர கிறுக்கன் @uqIStEuOotOyx2**

தேனீக்களுக்கு தெரிவதே இல்லை தம் உழைப்பை திருடும் திருடன் மனிதன் என்று துரோகத்தின் பயன் தேன்




## தத்துவ ஞானிகள் சொன்ன புகழ்பெற்ற தத்துவங்கள்

**சோக்ரடீஸ்**
எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்கு தெரியும், ஏனெனில் நான் ஒரு அறிவாளி...

**அரிஸ்ரோட்டில்**
இந்த உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்த உலகை இயக்குபவன் இறைவனே! மனிதன் தனிமனிதச் சிந்தனை கொள்ளாமல், சமூகச்சிந்தனையோடு வாழ வேண்டும்.

**டார்வின்**
மனிதன் ஒரு மணி நேரத்தை வீணாக்கிறான் என்றால், அவன் வாழ்கையின் மதிப்பை உணரவில்லை என்று அர்த்தம்.

**விவேகானந்தர்**
நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது. சேவை மட்டுமே செய்ய முடியும்.

**புத்தர்**
பிரார்த்தனைகளை விட மிக உயர்ந்தது பொறுமை தான்

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 3 | | 7 | 9 | | |
| | | | | 9 | | 4 | | 6 |
| | | 3 | | | 6 | | | |
| | | | | | 5 | | 1 | 8 |
| | | 8 | | | | 5 | | |
| 4 | 3 | | 7 | | | | | |
| | | | 9 | | | 8 | | |
| 2 | | 7 | | 5 | | | | |
| | | 6 | 1 | | 2 | | | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 3 | 2 | 1 | 6 | 7 | 8 |
| 1 | 8 | 6 | 5 | 9 | 7 | 4 | 2 | 3 |
| 7 | 3 | 2 | 8 | 6 | 4 | 9 | 5 | 1 |
| 4 | 1 | 3 | 9 | 7 | 2 | 8 | 6 | 5 |
| 2 | 9 | 7 | 6 | 8 | 5 | 3 | 1 | 4 |
| 5 | 6 | 8 | 4 | 1 | 3 | 2 | 9 | 7 |
| 8 | 2 | 5 | 7 | 4 | 9 | 1 | 3 | 6 |
| 6 | 7 | 1 | 2 | 3 | 8 | 5 | 4 | 9 |
| 3 | 4 | 9 | 1 | 5 | 6 | 7 | 8 | 2 |


நேற்றைய விடை





# முயலின் தியாகம்


ஒரு காட்டில் முயல், மான், நரி மூன்றும் நல்ல நண்பர்களாக இருந்தன. ஒரு நாள் அவை மூன்றும் கடவுளைத் தேடிச் சென்றடைந்தன. கடவுளை வணங்கியும் நின்றன.
கடவுள் அவைகளிடம் "நீங்கள் எதற்காக என்னிடம் வந்தீர்கள்" எனக் கேட்டார். "கடவுளே! வாழும் முறையை எங்களுக்குச் சொல்லியருளுங்கள்"என்று அவை வேண்டின.
கடவுள் அதற்கு "நீங்கள் மூவரும் தவம் செய்யுங்கள்" என்று சொல்லி விட்டு மறைந்தார். மூன்றும் காட்டுக்குத் திரும்பின. வேறு வேறு இடங்களில் அமர்ந்து தவம் செய்யத் தொடங்கின.
அவை மூன்றையும் சோதித்தறிய கடவுள் விரும்பினார். முதலில் கடவுள் நரியின் முன்னால் தோன்றினார். கடவுளைக் கண்ட நரி உற்சாகமானது. "கடவுளே!முதன் முறையாக எனது காட்டுக்குள் வந்துள்ளீர்கள். உங்களுக்கு சாப்பிட நான் ஏதாவது கொண்டு வருகிறேன்"என்று சொல்லி விட்டு அது எங்கோ ஓடியது. வழியில் அது ஒரு கோழியைப் பார்த்தது. அதனைப் பிடித்துக்கொண்டு கடவுளிடம் வந்தது. "கடவுளே! இதைச் சாப்பிட்டு நீங்கள் பசியாற வேண்டும்"என்று வேண்டியது.
கடவுள் புன்னகையுடன் "நரியே! உன் பக்திக்கு மெச்சினேன். எனக்கு கோழியெதுவும் வேண்டாம்"என்று சொல்லி விட்டு மறைந்தார். பின்னர் கடவுள் மானின் முன்னால் தோன்றினார். மான் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. கடவுளை வணங்கி மகிழ்ந்தது. கூடவே "கடவுளே! என் தவம் கண்டு என் முன்னால் தோன்றியதற்கு நன்றி. சற்றே பொறுங்கள் தாங்கள் பசியாற நான் உணவு கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு ஓடியது.
சிறிது நேரத்தில் ஏராளமான நெற் கதிர்களுடன் அது ஓடி வந்தது. "கடவுளே! எளியோன் தரும் இந்த உணவைத் தயவு செய்து உண்ணவும்"என்றது. கடவுள் அதனிடம் "மானே! உன் அன்பைக் கண்டு மகிழ்ந்தேன். ஆனால் எனக்கு உணவு தேவையில்லை"என்று கூறி மறைந்தார். அடுத்து முயலின் முன்னால் கடவுள் தோன்றினார். முயல் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது. "கடவுளே! என் தவத்தின் பயனை நான் அடைந்து விட்டேன்"என்று சொல்லி மீண்டும் மீண்டும் கடவுளின் திருப்பாதங்களை வணங்கி மகிழ்ந்தது. "கடவுளே! சற்றுப்பொறுங்கள். உங்களுக்கு நான் உணவு தர விரும்புகிறேன்"என்றது. பின்னர் அங்குமிங்கும் ஓடித் திரிந்து விறகுகளையும் சருகுகளையும் பொறுக்கி எடுத்து ஓரிடத்தில் குவித்து தீ மூட்டியது. "கடவுளே! என்னையே தங்களுக்கு விருந்தாகத் தருகிறேன். புசித்து மகிழுங்கள்"என்று சொல்லி விட்டு குபீரென தீக்குள் பாய்ந்தது.
கடவுள் இதனை எதிர்பார்க்கவில்லை. உடனடியாக அந்தத் தீக்குள் கையைவிட்டு முயலை வெளியில் எடுத்தார். "முயலே உன் தியாகம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. உன்னை நான் பெருமைப்படுத்துகிறேன்"என்று சொன்னார். பின்னர் முயலைப் பிடித்திருந்த அவருடைய கை உயர்ந்து கொண்டே போனது. அப்படியே முயலை வானில் தெரியும் முழு நிலவில் வைத்தார். "முயலே இனி உனக்கு இறப்பே இல்லை. இந்த நிலவில் என்றும் நீ சீரஞ்சீவியாய் வாழ்வாய்" என்று வாழ்த்தினார். நாம் சற்று உற்றுப் பார்த்தால் நிலவில் முதல் உட்காந்திருப்பது போல ஒரு நிழல் தெரிகிறதல்லவா? அடுத்த பௌர்ணமி நிலவில் நிலாவை உற்றுப் பார்ப்போமா? முயலைக் காண்போமா?





புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்

## நீர் தொடர்பான பொது அறிவுத் தகவல்கள்



- ஒருவர் உணவின்றி ஒரு மாதம் உயிர்வாழலாம். ஆனால் நீரின்றி ஒரு வாரத்துக்கு மேல் வாழ முடியாது.
- மனிதனின் தோலில் சுமார் 70சதவீதம் நீர் அடங்கியிருக்கிறது.
- நான்கு கார் டயர்கள் செய்ய 94 ஆயிரம் லீற்றர் நீர் பயன்படுத்தப்படுகிறது.
- தக்காளியில் 90சதவீதம் நீர் உள்ளது.
- ஒரு நபருக்கு ஒரு நாளைக்குக் குடிக்கவும், சமையலுக்கும் என ஐந்து லீற்றர் நீர் தேவைப்படுகிறது. மற்ற சுகாதாரக் காரியங்களும் மேலும் இருபத்தைந்து லீற்றர் நீர் தேவைப்படுகிறது.
- ஒரு பால் மாடு ஒரு லீற்றர் பால் கொடுக்க ஒரு நாளைக்கு நான்கு லீற்றர் நீர் குடிக்க வேண்டும்.
- உலகுக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் பத்திரிகைக் காகிதத்தை உற்பத்தி செய்ய ஆயிரத்து 400கோடி லீற்றர் நீர் தேவை.
- பெரும்பாலான வளர்முக நாடுகளில் பெண்களும் குழந்தைகளும் நாள்தோறும் குடிநீர் கொண்டு வர சராசரியாக 10-15கிலோமீற்றர் தூரம் நடந்து செல்கின்றனர்.

## பழமொழிகள்

1. பசி உள்ளவன் ருசி அறியான்.
2. பானையில் உள்ளதே அகப்பையில் வரும்.
3. கூழானாலும் குளித்துக்குடி
4. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?
5. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி
6. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
7. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
8. மருந்தேயாயினும் விருந்தோடுண்
9. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
10. அழுத பிள்ளை பால் குடிக்கும்
11. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
12. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
13. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
14. கூனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும்
15. பழகப்பழகப் பாலும் புளிக்கும்.

## சுவாமி விபுலானந்தர்



இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்பவர் விபுலானந்த அடிகளார். இவர் 1892ஆம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தொன்பதாம் திகதி மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் பிறந்தார். தந்தை பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மை. அடிகளாரின் இளமைப் பெயர் மயில்வாகனன் என்பதாகும்.
இவருக்கு சிறு வயதிலே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் கற்பிக்கப்பட்டன. இவற்றில் தேர்ச்சி பெற்ற இவர், தான் கல்விகற்ற புனித மைக்கேல் கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமைபுரிந்தார். பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியராகி தனது 25ஆவது வயதில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராய் பணி புரிகையில் லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியானார். 1920ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அதிபராகி அளவற்ற சேவை புரிந்தார். அடிகளார் தமிழுக்கு தொண்டாற்றியதோடு 1924ஆம் ஆண்டில் துறவியாகி சுவாமி விபுலானந்தர் என்ற தீட்சா நாமம் பெற்றார்.
இவர் தமிழ், சமயம் என்பவற்றை வளர்க்க பாடசாலைகள் அமைத்து வகுப்புக்கள் நடத்தினர். ஏழை மாணவர்களுக்காக மாணவ இல்லம் அமைத்து இலவச உணவு வழங்கினார். இவர் ஆசிரியர், அதிபர், பேராசிரியர், பத்திரிகாசியர், நூலாசிரியர் என பல பதவிகளை வகித்தார். மட்டக்களப்பில் சாரதா வித்தியாலயம், திருகோணமலையில் இந்துக்கல்லூரி என்பவற்றை இவரே கட்டுவித்தார். இவர் தமிழ் நாடு சென்று அங்கு பல இடங்களிலும் அமைந்துள்ள சங்கங்களின் விழாக்களில் பல தலைமை உரைகளை ஆற்றினார். இவர் எழுதிய யாழ்.நூல் என்னும் இசைத் தமிழ் ஆராய்ச்சி நூல் மதங்க ஆளாமணி என்ற நாடக நூல் குறிப்பி டத்தக்கவை. கங்கையில் விடுத்த ஒலை என்னும் கவிதை வாழ்வின் நிலையாமையை வெகு அற்புதமாக உணர்த்தி நிற்கிறது.

## தகவல் களஞ்சியம்

உலகின் மிகப்பெரிய மழைக்காடு அமேசன் காடு ஆகும். இந்தக்காடு தென் அமெரிக்காவில் அமேசன் நதி பாய்ந்து செல்லும் பிரேசில் பெரு, கொலம்பியா, வெனிசுலா ஈக்குவடோர், பொலிவியா, கயானா, சுரநேம், பிரஞ்சுக் கயானா ஆகிய 9 நாடுகளில் ஐந்தரை மில்லியன் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை மூடி வளர்ந்திருக்கிறது. இது ஐக்கிய இராச்சியத்தின் பரப்பளவை விட 25 மடங்கு பெரிதாகும். அமேசன் காடு ஆண்டு தோறும் பில்லியன் தொன் கணக்கில் காபன் ஈரொக்சைட்டு வாயுவை உறிஞ்சி ஒட்சிசன் வாயுவை வெளியேற்றிக் கொண்டிருப்பதால் 'பூமியின் நுரையீரல்" என வர்ணிக்கப்படுகிறது.





# திடீரெனத் தீப்பிடித்து எரிந்த முச்சக்கரவண்டி

தலவாக்கலை, ஏப்.3

நாவலப்பிட்டி - தலவாக்கலை முதன்மை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று கெட்டபுலோ சந்தியில் திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது என்று நாவலப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டுநரும், பயணியும் முச்சக்கர வண்டியை விட்டு உடனடியாக வெளியேறியதால் காயங்கள் இன்றித் தப்பிக் கொண்டுள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதும் அது பயனளிக்காது முச்சக்கர வண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீப்பிடித்தமைக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)



Galaxy Star வெற்றி வாரம் 247 திகதி 01.04.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள் 12 04 07 24 46
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 4,461,688/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம் K.K.S வீதியில் நிறமணம் மற்றும் விருந்தினர் வருகை, சுபகாரியங்கள், தங்கி நிற்பவர்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய AC, NON AC, நாள், கிழமை, மாத அடிப்படையில் வீடு வாடகைக்குண்டு. T. P - 077 285 0753

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3015 திகதி: 02.04.2018 திங்கட்கிழமை நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து / போனஸ் இலக்கம் / அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
04 47 48 55 C 19 37,186,380/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைக்கவும்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 215
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.04.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,189,120/-
வெற்றி இலக்கங்கள் 28 54 56 65 K
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1455 சீட்டிழுப்பு திகதி 02.04.2018
வெற்றி இலக்கங்கள் 07 10 12 14 K
வியாழக்கிழமை ஜக்பொட் ரூ. 19, 170, 148/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகநாதன்

**(இளைப்பாறிய ஆசிரியர், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை)**



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகநாதன் நேற்று (02.04.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் இராசம்மா தம்பதியரின் அன்புமருமகனும் தங்கலட்சுமியின் அன்புக்கணவரும் பேரம்பலம் (கனடா), ஆலாலசுந்தரம் (கனடா), இரத்தினசிங்கம், தங்கரத்தினம் (கனடா), பத்மநாதன் (ஜேர்மனி), யோகராணி, வசந்தகுமாரி, வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவபாக்கியவதி (கனடா), பவானி (கனடா), சிவசோதி, சண்முகநாதர் (கனடா), கலாவதி (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான சற்குணராசா, இரங்கநாதன் மற்றும் நளாயினி (கனடா), காலஞ்சென்ற தங்கராசா மற்றும் அன்னலட்சுமி பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 100 ஆனந்தன் வடலி வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 'அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி

### பொற்கொடிப்பிள்ளை முத்தையா

*(பொற்கொடி ஆச்சி)*

வழக்கம்பரை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொற்கொடிப்பிள்ளை முத்தையா நேற்று (02.04.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (மலேசியா), சீனிவாசகம் (வழக்கம்பரை), சிந்தாமணிப்பிள்ளை (வட்டுக்கோட்டை), விக்னராசா (வெள்ளாங்குளம்), தாமோதரம்பிள்ளை (வெள்ளாங்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகாமிப்பிள்ளையின் (கனடா) அன்புத் தாயாரும் ரவீந்திரன் சுகந்தி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேசனா (கனடா)வின் அருமைப் பூட்டியும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சண்முகராசா, சற்குணராசா, சிவராசா, தவராசா, சுந்தரலிங்கம் (மலேசியா), காலஞ்சென்ற நாகேந்திரன் (லண்டன்) மற்றும் இராசேந்திரன் (டென்மார்க்), செல்வரதி, புஸ்பரதி (ஜேர்மன்), நடராசா (கனடா), தவேந்திரன் (இந்தியா), திலகரத்தினம், அமிர்தகௌரி, உதயகுமார் ஆகியோரின்அன்புமாமியும்செல்வராசா, ஆனந்தராசா(கனடா), சிறீஸ்கந்தராசா, லீலாவதி சிவராசா, லிங்கராசா, மனோகரராசா (கனடா), பத்துமாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் சாந்தி (கல்வி அமைச்சு, வடமாகாணம்), கருணேஸ் (இலங்கைப் பொலிஸ் திணைக்களம், இளவாலை), சர்வேந்திரன் உமா (கனடா), தெய்வேந்திரன் பரிமளா (கச்சேரி, யாழ்ப்பாணம்), சுரேகா கரிகரன் (கனடா), நிரோஜா, சிவகரன் (கனடா), றமேஸ் சுதந்தி (கனடா), தினேஸ் மயூரி (கனடா), கிஷாணி பிரதீப் (கனடா), சுமித்தா (கனடா), மகிஷா, மதுரா, சைலசிறி, மதுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹரிஸ், ஹரினி, அட்சரா, அபிரா, லக்சனா, சஞ்சனா, நிஷான் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல்11.00மணிக்குஅவரதுஇல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகள்**



# பங்குச்சந்தை எனும் பயனுறுதி

## முதலீட்டின் செயல் வடிவம்

செ.தமிழ்நம்பி

பங்குச்சந்தை முதலீடுகளை முயற்சியாண்மையின் பிரதி விம்பமாகவும், மறுவடிவமாகவும் நோக்க முடியும். அந்த வகையிலே பங்குச்சந்தை முதலீடு என்பது, வியாபார முயற்சியின் தன்மை, தொடர்புடைய உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகள், சந்தைச்சூழல், வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவம் சார்ந்து முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பாக மேற்குறிப்பிட்ட செயல் வெளிகள் குறித்து முழுமையான பகுப்பாய்வை மேற்கொள்வதோடு தொடர்புபடுகிறது.

**முயற்சியாண்மையும் தொழில் முனைவும்**

அதே போன்று முயற்சியாளன் தன்னிடமுள்ள வியாபாரத் திட்டத்துக்கு செயல்வடிவத்தைக் கொடுக்கின்றபோது, அந்தத்திட்டத்துடன் இணைந்த வியாபாரச் செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

பங்குமுதலீட்டுக்கும், முயற்சியாண்மைக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடாக சில விடயங்களை நோக்க முடியும். பங்குமுதலீட்டைப் பொறுத்தவரையில், எமக்காக யாரோ ஒரு சில முன்னோடிகள் வியாபார முயற்சிக்குத் தேவையான அடிப்படைகளை நிறைவு செய்துள்ள தன்மைகளை உணரமுடிகிறது. நிறுவனத்தின் வியாபாரத்தை முழுமையாக புரிந்துகொள்வதுடன், நான் கொண்டுள்ள ஒத்த சிந்தனையுடன் நிறுவனம் வழிநடத்திச் செல்லப்படுவதை அவதானிப்பின் சந்தேகமின்றி அந்தக் கம்பனியின் பங்குகளை கொள்வனவுசெய்து செயலுறுதியோடு வியாபார முயற்சியில் எம்மை இயக்குநராக மாற்றிக் கொள்ள முடியும்.

**திட்டமிடல்**

தவிர, நாம்பங்குச்சந்தை முதலீட்டை முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக நோக்குகின்ற ஒரேயோரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே, பங்குச்சந்தை முதலீட்டை முயற்சியாண்மையுடன் ஒப்பிட்டு நோக்க முடியும். மாறாக, பரிமாற்றல் கருவியாக (Trading Instruments) நோக்குமிடத்து அதன் பெறுமதி அல்லது விலைகள் காலத்துடன் இணைந்ததாக மாறிக்கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியாது. அடுத்த விலை அசைவை எதிர்பார்த்து மீள் விற்பனையை நோக்காகக் கொண்டு பங்குகளைக் கொள்வனவு செய்தல் ஓர் முதலீடு (Investing) முயற்சியல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அது பங்கு வியாபாரமாக (Trading) அமைந்து விடுவதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**பெறுபேற்றின் அடைவு**

இங்கு 'ஆதிக்க வர்க்கம்', (Majority shareholder) வியாபாரத்தின் அடிப்படைப் பெறுபேற்று அடைவுகளைக் கருத்தில் கொள்ளாது தாம் கொண்டுள்ள திறமையைப் பயன்படுத்தி ஊக வியாபாரத்தினை (betting or gambling) மேற்கொள்கின்றனர். இது முதலீடு அல்லாமல், பரிமாற்றல் வியாபாரமாக மட்டுமே அமைந்துவிடுகிறது.

முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக பங்குமுதலீடு அமையப்பெறும் தன்மையை நோக்கின், அங்கு கீழ்வரும் முதன்மைச் சிறப்பியல்புகளைக் கண்டுகொள்ள முடியும்.

- **தொழில்முனைவு தொடர்பான புரிந்துணர்வு**


பங்குகளில் முதலீடு செய்ய முன்வருகின்றபோது, நிறுவனத்தின் வியாபாரமுயற்சி தொடர்பில் தெளிவான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதனையே பங்குச்சந்தை அறிவுறுத்தி நிற்கிறது. குறிப்பாக நிறுவனம் எவ்வாறான பொருள் அல்லது சேவையை உற்பத்தி செய்கிறது? அவை எங்கே, எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன? எவ்வகையான மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன? மற்றும் எவ்வாறானவர்கள் அதன் வழங்குநராக உள்ளனர்?, போட்டியாளர்களின் போட்டித்தன்மை எவ்வாறானது? என்பவற்றோடு நிதிக்கிடைப்பனவு மற்றும் நிதிக் கையாளுகை தொடர்பில் அறிந்திருத்தல் வேண்டும். இதே போன்ற ஓர் பகுப்பாய்வை முயற்சியாளன் வியாபார முயற்சியாண்மை தொடர்பில் வளங்களை இணைக்கின்ற போது மிகவும் அவதானமாக ஆய்வு செய்ய வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது. மாறாக அடிப்படை வியாபாரத் தந்திரோபாயங்களைக் கருத்தில் கொள்ளாது பங்குச்சந்தையில் முதலிடுதல் என்பது, வாணப்பூச்சைத் திட்டமிடல் இன்றிக் கைபோன போக்கில் பூசுவதற்கு ஒப்பான செயல் நடவடிக்கையாக அமைந்துவிடும்.

- **முதலீட்டுத் திரும்பலும் அடிப்படை வியாபாரத்தின் அடைவும்**

பங்குமுதலீடு மற்றும் முயற்சியாண்மை என இரண்டுமே அடிப்படையில் இடர்நேர்வுடன் (Risk) இரண்டறக் கலந்தவை. வியாபாரத்தின் வெற்றி மற்றும் தோல்வியுடன் நேரடியாகத் தொடர்புபடுகிறது. அதனை வேறுபடுத்த முடியாது. மாறாக இழிவுபடுத்த முடியும். தெரிவு செய்யும் நிறுவனத்தின் வியாபாரப் பெறுபேறானது சிறப்பாக அமையுமிடத்து, நிறுவனம் தனது வியாபாரத்தை விருத்தி செய்வதுடன் உழைக்கப்பட்ட இலாபத்தைப் பங்குலாபமாக (Dividend) அதன் உரிமையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும். இது வருமான அதிகரிப்புக்கான அடிப்படையாக அமைகிறது. முயற்சியாண்மையும் இதற்கு விதிவிலக்கானது அல்ல.

- **அர்ப்பணிப்பும் கடின முயற்சியும்**

இவ் இரண்டு முயற்சிகளும் கடின உழைப்புடன் தொடர்புடையவை. முயற்சியாண்மையைப் பொறுத்தவரையில், வியாபாரத்தைத் தொடர்ச்சியாகச் சரியான பாதை



யில் இட்டுச்செல்ல வேண்டிய பக்குவம் அவசியமாகிறது. இதற்கு முயற்சியாளன் தொடர்ச்சியாக உற்பத்தி மட்டம், விற்பனைப் பெறுபேறு, நிதிநிலைமைகள், தொழிலாளர்களின் வினைத்திறன் மற்றும் செலவுச்சிக்கனம் போன்ற நிறுவனத்தின் ஆரோக்கியமான செயல்நிலைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறே பங்கு முதலீட்டிலும் இவ்வாறான குறிகாட்டிகளை நிறுவனங்களின் காலாண்டு மற்றும் ஆண்டு அறிக்கைகளின் ஊடாகவும், செய்தித்தாள் மற்றும் விசேட ஆய்வுக் குறிப்புகளின் உதவியோடும் அறிந்துகொள்ள முடிகிறது. எமது முதலீட்டுத் தேக்கத்தில் (Portfolio) அவ்வாறான நிறுவனங்களை இனங்கண்டு நிரல்படுத்த அதிகளவாக நேரம் மற்றும் முயற்சி அவசியம் என்பதை பங்குமுதலீடு உணர்த்தி நிற்கிறது. பொதுவாக பல நிறுவனங்களை பின்தொடர்வதைத் தவிர்த்து, சிந்தனைபூர்வமாக வசதிக்கு ஏற்றாற் போல் குறித்த ஒரு சில நிறுவனங்களைத் தெரிவுசெய்தல் நன்று.

- **வியாபாரத்தின் தெரிவு**

எமது தெரிவு பிழையாக அமையுமிடத்து ஈடுபடுத்திய மூலதனத்தை மட்டுமல்ல, சிறந்த முதலீட்டு வாய்ப்பையும் இழக்க நேரிடும். இது பங்குமுதலீட்டுக்கு மட்டுமல்ல முயற்சியாண்மைக்கும் சாலப்பொருந்தும். முயற்சியாளன் தனது எண்ண வெளிப்பாட்டை (idea) சரியான நேரத்தில் உரியவாறு நடைமுறைப்படுத்தத் தவறினால் இழப்பு என்பது தவிர்க்க முடியாத அங்கமாக அமைந்துவிடும்.

- **முகாமையாளர் தெரிவு மற்றும் தகைமை**

முயற்சியாண்மையின் தொடர்ச்சியான வெற்றி என்பது, முயற்சியாளனில் மட்டுமன்றி அவனால் பணிக்கப்படும் தொழில் நிபுணத்துவக் குழுவிலும் (Management) தங்கியுள்ளது. அதாவது, காலத்துக்கு ஏற்புதிய திட்டங்களை அல்லது யோசனைகளை இணைத்து வியாபார விரிவாக்கத்துக்கு அடித்தளமாக முயற்சியின் முகாமையும், அதன்தராதரமும் அமைகின்றன. அவ்வாறான பங்கு முதலீட்டை ஆரம்பிக்கும் போது நாம் தெரிவு செய்யும் நிறுவனத்தின் முகாமையாளர்கள் மற்றும் நல்லாட்சித் தத்துவம் (good corporate governance) தொடர்பாக நிறுவனம் கொண்டுள்ள கொள்கைகளை மிக நுணுக்கமாக அவதானித்துக் கொள்ள வேண்டும். ஆக, உங்கள் முதலீடுகளை அச்சமின்றி இவ்வாறான நிறுவனங்களில் தொடர்ச்சியாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

- **வெற்றியே முயற்சியின் உச்ச அடைவு**

இந்த இரண்டு முயற்சிகளும் பலருக்குச் செல்வத்தை மட்டுமன்றி, மதிப்பிட முடியாத புகழையும் ஈட்டிக் கொடுத்த பல சந்தர்ப்பங்களை பங்கு முதலீட்டில் கண்டுகொண்டுள்ளோம். இதற்கு அவர்களின் வெற்றியே வித்தாக அமைந்திருந்தது. இருந்தபோதும் பல்லாயிரக் கணக்கான முயற்சியாண்மையும், பங்குமுதலீடுகளும் தோல்விகளைக் கண்டுள்ள உண்மையையும் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே முயற்சியாண்மை மற்றும் பங்கு முதலீடு ஆகிய இரண்டு நிலைகளையும் ஓர் இலகுவான முயற்சியாக நாம் கொள்ளக்கூடாது.


கண்ணீர் அஞ்சலி

கந்தையா சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் பொருளாளராக நீண்டகாலம் கடமைபுரிந்த முன்னாள் பொருளாளர் க. சண்முகநாதனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் த.தர்மலிங்கம் குடும்பம்
(முன்னாள் தலைவர் - அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபை)

(CS 15371/15217)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20.01.1964

இறப்பு
14.04.2017

நாகலிங்கம்
குமாரலிங்கம்

ஆண்டு ஒரு வருடம் ஆனதும் அப்பா ஆறவில்லை எம் துயரம்
மீளாமல் வாடுகின்றோம் உங்கள் நினைவில் அனுதினமும்
பரிவுடன் எமை அணைத்து பக்குவமாய் பண்பையும் பாசத்தையும் ஊட்டி விட்ட எமது அன்பு
அப்பாவே அன்பு காட்டி அறிவு ஊட்டி மகிழ்ச்சியுடன் நாம் வாழ இனிய வழி காட்டிய
எமது அன்புத்தெய்வமே எம் பிரியமான அப்பாவே பாசம் என்றால் என்னவென்று எமக்கு புரிய
வைத்து எமைவிட்டு விண்ணுலகம் சென்றதேனோ? எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உங்கள்
நினைவு எம் மனதில் மாறாது அப்பா

(மைத்துனர்) லிங்கம் கபே. சாவகச்சேரி.

# நெட்டி முறிப்பது சரியா?



சிலர் எப்போதும் கைவிரல்களில்நெட்டிமுறித்துக்கொண்டே இருப்பார்கள். ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறையாவது இதைச் செய்யாமல் அவர்களால் இருக்க முடியாது. இப்படி நெட்டி முறிப்பதால் உடலில் என்ன நடக்கிறது. அடிக்கடி நெட்டி முறிப்பது சரியா. இந்தப் பழக்கத்தில் இருந்து விடுபடுவது எப்படி?

**நெட்டி முறித்தல்**

எமது விரல் எலும்புகளின் இணைப்புகளுக்கு இடையே 'சைனோவியல்' (Synovial fluid) எனப்படும் திரவம் உள்ளது. நாம் நெட்டி முறிக்கும் போது, இந்தத் திரவம் வேகமாக ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு நகர்கிறது. அப்போது, நெட்டி முறிக்கும் இடத்தில் வெற்றிடம் தோன்றி, 'நைட்ரஸ் ஆக்ஸைடு' உருவாகிறது. இதனால்தான் 'சொடக்' எனச் சத்தம் வருகிறது.

**நெட்டி முறித்தால் என்ன ஆகும்?**

சைனோவியல்தான் எமது விரல் இணைப்புகளில் உள்ள எலும்புகள் ஒன்றோடு ஒன்று உரசாமல் ஒத்திசைவாகச் செயல்பட உதவுகிறது. அடிக்கடி நெட்டி முறிக்கும்போது இந்தத் திரவம் குறைகிறது. மேலும், கை விரல்களில் டென்டன், லிகமென்ட், கேப்ஸ்யூல் என மூன்று அமைப்புகள் உள்ளன. அடிக்கடி ஒருவர் நெட்டி முறிக்கும்போது இவை மூன்றும் வலுவிழந்து விரல்கள் பலவீனமடையலாம்.

**எப்படித் தடுக்கலாம்?**

எப்போதாவது நெட்டி முறிப்பதில் தவறு இல்லை. ஆனால், அதையே தொடர் பழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டாம்.

நெட்டி முறிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டால், கைகளுக்கான ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகளைச் செய்யலாம். தொடர்ந்து டைப் செய்வது போன்று ஒரே மாதிரியான வேலையைக் கைகளுக்குக் கொடுக்க வேண்டாம். அவ்வப்போது இரண்டு நிமிடம் ஓய்வு எடுக்கலாம்.

பொதுவாக, கல்சியம் நிறைந்த உணவுகளான பால், முட்டை, கேழ்வரகு, கீரைகள், எள் போன்றவற்றை அதிகமாக எடுத்துக் கொள்வது எமது எலும்புகளை வலுவாக்கும்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 1000 | 800 | 900 |
| நண்டு | 550 | 500 | 500 | 200 |
| கணவாய் | 600 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 650 | 700 | – |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 450 | 200 | 400 |
| முரல் | 400 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 300 | 120 | – |
| சூடை | 100 | 180 | 120 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 250 | 200 |
| கொய் | 120 | 100 | 50 | 100 |
| பாலை | 150 | 300 | 400 | – |
| வாளை | 100 | 350 | 300 | – |




## இது புதுசு

பெண்களுக்கான நவீன சாறி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை மூவாயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 50 | 70 | 60 | 50 | 60 |
| முள்ளங்கி | 80 | 50 | 30 | 60 | 40 |
| மரவள்ளி | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 50 | 120 | 90 | 80 | 80 |
| பாகல் | 120 | 200 | 100 | 120 | 120 |
| க.கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 80 | 140 | 80 | 80 | 80 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 120 | 160 | 120 |
| பூசணி | 50 | 50 | 60 | 40 | 40 |
| தக்காளி | 30 | 50 | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 | 40 | 60 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 35 | 30 |
| ப.மிளகாய் | 60 | 120 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 70 | 70 | 50 | 60 |
| கோவா | 50 | 70 | 60 | 40 | 40 |
| வெண்டி | 100 | 100 | 120 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 150 | 120 | 140 | 80 |
| லீக்ஸ் | 180 | .200 | 140 | 160 | 140 |
| தேங்காய் | 80 | 80 | 90 | .100 | 70 |
| உ.கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 50 | 80 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 100 | 180 | 120 | 80 | 100 |
| கரட் | 100 | 140 | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | - | 500 | 300 | 600 |

## இஞ்சி மிளகுக் குழம்பு



**தேவையான பொருள்கள்**

மிளகு - 1 கரண்டி
இஞ்சி - அரைக் கரண்டி
செந்தல் மிளகாய் - 2
கறிவேப்பிலை -2 கொத்து
உளுத்தம் பருப்பு - தலா கரண்டி
துவரம் பருப்பு - தலா கரண்டி
உள்ளி - 4 பல்
மல்லி - 1 கரண்டி
புளி - ஒரு எலுமிச்சை அளவு
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**

புளியைக் கரைத்து கொள்ளவும்.

மிளகு, இஞ்சி, மிளகாய் வற்றல், கறிவேப்பிலை, உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு, மல்லி ஆகியவற்றைச் சிறிதளவு எண்ணெயில் தனித்தனியாக வாசனை வரும் வரை வறுத்து ஆற வைக்கவும்.

நன்றாக ஆறியதும் அவற்றுடன் உள்ளி சேர்த்து மிக்சியில் போட்டு அரைத்து கொள்ளவும்.

சட்டியில் அடுப்பில் வைத்து நல்லெண்ணெய் ஊற்றி கொதிக்க ஆரம்பித்தவுடன் அதில் கரைத்த புளிக் கரைசலை ஊற்றி கொதிக்க விடவும்.

புளிக்கரைசல் நன்றாக கொதிக்க ஆரம்பித்தவுடன் அதில் தேவையான அளவு உப்பு சேருங்கள்.

அடுத்து அதில் அரைத்து வைத்துள்ள மசாலாவை சேர்த்துக் கொதிக்கவிடுங்கள்.

குழம்பில் எண்ணெய் தனியாகப் பிரிந்து வரும்போது இறக்கி சிறிதளவு வெல்லம் சேர்த்து இறக்கவும்.

சுவையான இஞ்சி மிளகுக் குழம்பு தயார்.

# உடல் ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி அவசியம்

தொய்வின்றிச் செய்யும் அன்றாட பணிகளுக்கு மத்தியில் ஒரு சில உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியத்தையும், புத்துணர்வையும் பெற செய்ய முடியும்.

சிலர் அலவலகத்திலும், இல்லத்திலும் எப்போதும் பணிகளுடன் இருப்பர். இதனால் அவர்கள் உடற்பயிற்சி செய்ய தமக்கு நேரம் இல்லை என்பர். ஆனால் தொய்வின்றி செய்யும் அன்றாட பணிகளுக்கு மத்தியில் ஒரு சில உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியத்தையும், புத்துணர்வையும் பெற முடியும்.

காலை முதல் இரவு வரை அனைத்து பணிகளை மேற்கொள்வது எவ்வளவு அவசியமோ அதுபோல் உற்பயிற்சி செய்வதும் மிக அவசியம். உடற்பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் உடலும், மனமும் என்றும் இளமையுடன் செயல்படும். சரும பொலிவு, சுறுசுறுப்பு, உத்வேகம், பொறுப்புணர்வு போன்றவை ஏற்படுவதுடன் உடல் வலி, அசதி, தேவையற்ற கொழுப்புகள் சேருவது போன்ற பிரச்சினை களிலிருந்து விடுபட முடியும்.

தினந்தோறும் மாடிப்படிகளில் ஏறுதல் மூலம் எமது கலோரி குறிப்பிட்ட அளவு எரிக்கப்படுகிறது. அதுபோல் மாடிப்படிஏறுதல் மூலம் முழங்காலும் நல்ல வலிமை பெறும். மாடிபடி ஏறுதலை சற்று வேகமாக மேற்கொண்டால் அது மிக சிறந்த உடற்பயிற்சி. மூட்டுவலி உள்ளவர்கள் இம்முயற்சியை மேற்கொள்ள வேண்டாம்.

சம்மணமிட்டு நேராக அமர்ந்து கொள்ளவும். இடது கையை வலது முட்டி பகுதியில் வைத்து கொண்டு வலது கையை எடுத்து பின்புற தரையில் வைக்கவும். பின் அதுபோல் வலது கையை இடது முட்டி பகுதியில் வைத்து இடது கையைப் பின்புறதரையில் படும் படி வைக்கவும். இதன் மூலம் முதுகெலும்பு சுழல வைக்கப்படுகிறது. இந்நேரத்தில் மூச்சு நன்றாக இழுத்து விட்டு பிறகு சாதாரண நேர் நிலைக்கு வரவும். இதன் மூலம் இடுப்பு ஓரப்பகுதிகளில் சதை போடாது. எப்போது மெல்லிய இடுப்பாகவும், முதுகெலும்புகள் வலுவாகவும் இருக்கும்.



# 60 ஓட்டங்களில் சுருண்டு மே.இ. தீவுகள் படுதோல்வி



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் வெறும் 60 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியடைந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி-20 ஆட்டம் பாகிஸ்தானின் கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 5 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஹசன் திலட் 41 ஓட்டங்களையும், சமன் 39 ஓட்டங்களையும், அகமட் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பவுல், எம்ரிட், பவல் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.


பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வெறும் 60 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. சாமுவேலஸ் பெற்ற 18 ஓட்டங்களே அதிகபட்சம். எம்ரிட் 11, பவுல் 10 ஆகியோரே பதின்மத்தை எட்டிய ஏனையவர்களாக உள்ளனர்.

பந்துவீச்சில் நவாஸ், அமீர், மலிக் வுலரும் தலா 2 இலக்குகளையும், சன் அலி, சடப் கான், திலட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு பாக். ரசிகர்கள் வரவேற்பு


பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பாகிஸ்தான் ரசிகர்கள் வரவேற்புத் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் பாகிஸ்தானின் கராச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இலங்கை அணியினர் பயணித்த பேருந்து மீது கடந்த 2009ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த அசம்பாவிதத்துக்குப் பின்னர் ஏனைய அணிகள் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்வதில்லை. இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தற்போது பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. அந்த அணிக்கு வரவேற்புத் தெரிவிக்கும் விதமான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை பாகிஸ்தான் ரசிகர்கள் ஏந்தியிருந்தனர். நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட் டத்தில் கலந்துகொண்ட ரசிகரொருவரின் ஒளிப்படமே இது. (ம)




## கிறைஸ்ட்சேர்ச் டெஸ்ட் திரில் நிலை

# 340 ஓட்டங்களா? 10 இலக்குகளா?



நியூசிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச் நகரில் நடைபெற்றுவரும் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இறுதி நாளான இன்று, நியூசிலாந்தின் வெற்றிக்கு 340 ஓட்டங்களும், இங்கிலாந்தின் வெற்றிக்கு 10 இலக்குகளும் தேவைப்படுகின்றன.

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 307 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பரிஸ்ரௌவ் 101 ஓட்டங்களையும், வூட் 52 ஓட்டங்களையும், ரூட் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்தி 6 இலக்குகளையும், போல்ட் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 278 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வற்லிங் 85 ஓட்டங்களையும், கிராண்ட்கோம் 72 ஓட்டங்களையும், சவுத்தி 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புரோட் 6 இலக்குகளையும் அன்டர்சன் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரூட் 30 ஓட்டங்களுடனும், மலன் 19 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இணைப்பாட்டம் நிலைபெற்றது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். ரூட் 54 ஓட்டங்களுடனும், மலன் 53 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இங்கிலாந்தின் பின்வரிசையின் பெரிய அளவில் திருப்பங்கள் ஏற்படவில்லை. அந்த அணி 9 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் கிராண்ட்ஹோம் 4 இலக்குகளையும், வாக்நெர், போல்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும், சவுத்தி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

382 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நியூசிலாந்து அணி, நாள் முடிவில் இலக்குகள் எதையும் இழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. லாதம் 25 ஓட்டங்களுடனும், ராவல் 17 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். (ம)



# சிமித்தை கலீசன் பிரதியீடு

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார் தென்னாபிரிக்க அணியின் இலக்குக் காப்பாளர் கலீசன்: பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சிமித்துக்கு ஒரு வருடம் தடை விதிக்கப்பட்டது. அவர் நடப்பு வருட ஐ.பி. எல். தொடரில் ராஜஸ்தான் அணியில் இடம்பிடித்திருந்தார். தடையை அடுத்து அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. ரகானே தலைவராக் கப்பட்டார். சிமித்துக்குப் பதிலாக எவரை ஒப்பந்தம் செய்வது என்பது தொடர்பில் பரிசீலித்துவந்த ராஜஸ்தான் அணி, தென்னாபிரிக்க அணியின் இலக்குக் காப்பாளர் கலீசனை அந்த இடத்துக்கு நியமித்தது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியானது. (ம)

# மியாமி தொடர்: இஸ்னர் மகுடம்

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் மியாமி ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் இஸ்னர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில், இஸ்னரை எதிர்த்து அலெக்சான்டர் மோதினார். முதலாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் அலெக்சாண்டர். ஆனால், சரிவில் இருந்து மீண்ட இஸ்னர் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:4, 7:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)



# விளையாடுவார் கிறிஸ் லின்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் கிறிஸ் லின் விளையாடுவார் என்று, அறிவித்தது கொல்கத்தா நிர்வாகம்.

கிறிஸ் லின் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காயமடைந்திருந்தார். இதனால் அவர் ஐ.பி.எல். தொடரில் விளையாட வாய்ப் புக்கள் குறைவு என்று சில ஊடகங்கள் அண்மைக் காலமாக செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் அவ்வப்போது பயிற்சியில் ஈடுபட்டுவந்தார் லின். இந்த நிலையில், லின் முழுமையாகக் குணமடைந்துள்ளார் என்றும் அவர் தொடரில் முழுமையாக விளையாடுவார் என்றும் கொல்கத்தா நிர்வாகம் நேற்று அறிவித்தது. (ம)



# நியூபவர் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 3
பிம்புத் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் நெல்லியடி கிளையினால் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில், சாவகச்சேரி நியூபவர் அணி சம்பியனானது. . தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் இந்தத் தொடர் நடைபெற்றது.
28கழகங்கள்பங்குபற்றியிருந்தன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில், சாவகச்சேரி நியூபவர் அணியும், சாவகச்சேரி சிவன் அணியும் மோதின.
12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணி, விபூஸனின் நிதான ஆட்டத்தின் உதவியுடன் 7 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணியின் சார்பாக விபூஸன், பவித்திரன், சாயி முறையே 30, 15, 10 ஓட்டங்களைப் பெற்றனர்.
73 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிவன் அணியினர் எதிரணியின் பந்து வீச்சுக்களைச் சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளிகளில் இலக்குகளை இழந்தனர். 11.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்த அந்த அணி 13 உதிரி ஓட்டங்கள் உட்பட 38 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.
34 ஓட்டங்களினால் வெற்றி பெற்ற நியூபவர் அணியின் சார்பில் லத்தீபன் 4, ஜெகதீஸ் 3, அருட்பிரியன், சாயி, பிரதீ ஆகியோர் தலா 1 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக லத்தீபனும் தொடரின் நாயகனாக விபூசனும் தெரிவு செய்யப்பட்டனர். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 3

**கொலின்ஸின்கால்பந்தாட்டம்**
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டியுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் வி.க. கால்பந்தாட்டம்**
வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடியல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அ்ண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சென். மேரிஸின்கால்பந்தாட்டம்**
கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அருணோதயா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெள்ளிநிலா அணியுடன் மோதவுள்ளது.
காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிங்பொங் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி காலை 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கணேசானந்தா அணியுடன் மோதவுள்ளது. (ம-23)

## றைனோஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 3
அரியாலை சிறி கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் றைனோஸ் அணி சம்பியனானது.
அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் றைனோஸ் அணியை எதிர்த்து சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய றைனோஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 88 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுப்பர் கிங்ஸ் அணி 79 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து 9 ஓட்டங்களால் வென்றது றைனோஸ். (ம-23)

## பாரதி அணி முன்னேற்றம்



யாழ்ப்பாணம், ஏப். 3
குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பொலிகை பாரதி அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பொலிகை பாரதி அணி வீரர் டிலக்சன் ஒரு கோலைப் பதிவு செய்ய அடுத்த நிமிடத்தில் நவசக்தி அணியின் வீரர் பிரகாஷ் மற்றொரு கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றதை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் பாரதி அணி வெற்றிபெற்றது. (ம-422)



## வல்வையை வீழ்த்தியது யங் லயன்ஸ் வி. கழகம்

யாழ்ப்பாணம், ஏப். 3
குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், யங் லயன்ஸ் அணி முன்னேற்றம் கண்டது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், யங் லயன்ஸ் அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது.
ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் யங் லயன்ஸ் அணியின் கிருசாந் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். இரண்டு அணிகளும் தொடர்ந்து போராடிய போதிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் யங் லயன்ஸ் வெற்றிபெற்றது. (ம-422)

## கடற்கரை கபடித் தொடரில் சண்டிலிப்பாய் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான கடற்கரை கபடியில் பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி சம்பியனானது.
வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 36:34 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422)



# அடுத்த இரண்டு ஒலிம்பிக் தொடர்களில் வடகொரியா பங்கேற்கும் கிம் ஜோங் உன்னைச் சந்தித்த பின்னர் தோமஸ் பெச் தெரிவிப்பு

பியாங்யாங், ஏப். 3 ஜப்பான் மற்றும் சீனாவில் அடுத்த இரண்டு ஒலிம்பிக் தொடர்களும் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொடர்களில் வடகொரியா பங்கேற்கும் என்று தெரிவித்தார் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் தோமஸ் பெச்.

வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன் - தோமஸ் பெச் இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் தோமஸ் பெச்.

தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் எவரும் எதிர்பாராத விதமாக வடகொரியா பங்கெடுத்தது. இதையடுத்தே இரு தலைவர்களுக்கும் இடையிலான இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

'வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன்னுடனான விவாதம் ஆரோக்கியமான வகையில் அமைந்தது. அடுத்து ஜப்பான் மற்றும் சீனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடர்களில் வடகொரியா பங்கேற்கும். வடகொரியாவின் இந்த அறிவிப்பை அமைதியின் அடையாளமாகப் பார்க்கிறேன்' என்று பெச் பாராட்டினார். (ம)



## டோனியிடம் கற்கிறேன் சொல்கிறார் ஜெகதீசன்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக ஒப்பந்தமாகியுள்ள தமிழக வீரர் ஜெகதீசன், டோனியிடம் இருந்து அதிகம் கற்கிறேன் என்று தெரிவித்தார்.

சென்னை அணியின் பயிற்சி முகாமைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மைக் ஹஸியை (சென்னையின் துடுப்பாட்டப் பயிற்சியாளர்) சந்தித்துப் பேசுவது எப்போதுமே சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். 'மிஸ்டர் கிரிக்கெட்' என்று செல்லமாக அழைக்கப்படும் ஹஸி மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் தனது திறமையை நிரூபித்து காட்டியவர். அவர் நிறைய துடுப்பாட்ட நுணுக்கங்களைக் கற்றுத்தருகிறார். குறிப்பாக பந்துவீச்சாளரை மிரளவைக்கும் வகையில் எப்படிதாக்குதலை கையாள்வது என்பதை சொல்லித் தருகிறார் என்று ஜெகதீசன் மேலும் தெரிவித்தார்.


**வேலைவாய்ப்பு**

யாழ். வடமராட்சி, பருத்தித்துறையில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு ரைப் செற்றிங், வைண்டிங் வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு - 077 832 9477, 021 226 0055

**A/L 2020**

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

கணக்கீடு : MR.BALAKAJEN

B.Com(Jaf), H.N.Dip-in ACC(ATI)

ஆரம்பம்: 03.04.2018 செவ்வாய்

இடம் : சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (Sat & Sun 4 -5 pm)

பலாலி வீதி, கந்தர்மடம். (Tue & Fri 5 -6 pm)

Mobile: 076 565 5956

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு அண்மையில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 832 9477

30 வருட கல்விச் சேவையில்...

யாழ். நகரின் No. 1 கல்வி நிறுவனம்

புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS (பகல்நேர வகுப்பு)

பிரிவு - I ஆரம்பம் - 04.04.2018, புதன்கிழமை காலை 8.00 மணி

கடந்த (2017) O/L பெறுபேறுகளில் 95% சதவீத மாணவர்கள் சித்தி.

புதிய அனுமதிகள் இன்று முதல்

T.P. :- 077 459 8440

**போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புகள்**

இன்று செவ்வாய் (3/4/2018) தொடக்கம்

முன்பள்ளி ஆசிரியர்

பி.ப. 1.30 ➡ 5.00

திட்டமிடல் சேவை

பி.ப. 5.00 ➡ 7.00

முகாமைத்துவ உதவியாளர்

செவ்வாய் + வியாழன்

3.30 ➡ 6.00

076 688 3394

DMI

வெலிங்ரன் சந்தி, SDB வங்கி எதிரில் டானியல் 3ஆம் மாடி.





## பஞ்சாப் அணிக்காக டெல்லிக்கு எதிராக

# நடப்புவருட ஐ.பி.எல்லில் களமிறங்குகிறார் சேவாக்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்காக களமிறங்கி விளையாடவுள்ளார், இந்திய அணியின் முன்னாள் அதிரடி வீரரான சேவாக்.

பஞ்சாப் அணிக்காக விளையாடுவதற்கு ஒப்பந்தமாகியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பின்ஞ். ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகும் அன்றைய தினம் அதாவது எதிர்வரும் 7ஆம் திகதி பின்ஞ் திருமண பந்தத்தில் இணைகிறார். ஆஸ்திரேலியாவில் இந்தத் திருமணம் நடைபெறுகிறது. மறுநாளே பஞ்சாப் அணி டெல்லியை தனது முதலாவது ஆட்டத்தில் எதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் பின்ஞ் விளையாட வாய்ப்பில்லை. இதனால் அவருக்குப் பதிலாக பஞ்சாப் அணியின் பயிற்சியாளர் சேவாக் களமிறங்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் அணி தனது சமூக வலைத்தளங்களில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. பஞ்சாப் அணியின் நட்சத்தி வீரரான யுவராஜ் சிங்கும் தனது தனது சமூக வலைத் தளங்களில் இந்தத் தகவலைப் பகிர்ந்துள்ளார். (ம)



# கொல்கத்தா அணி சிறந்து செயற்படும்

## டினேஸ் கார்த்திக் நம்பிக்கை



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், கொல்கத்தா அணி சிறப்பாகச் செயற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் தலைவர் டினேஸ் கார்த்திக்.

கொல்கத்தா அணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே டினேஸ் கார்த்திக் இவ்வாறு தெரிவித்தார்.

"கம்பீரின் தலைமையில் கொல்கத்தா அணி அபாரமாகச் செயற்பட்டது. அவரது தலைமையில் சாதித்ததைப்போன்றே எனது தலைமையின் கீழும் கொல்கத்தா நிர்வாகம் எதிர்பார்க்கும். இதனால் என்மீது தனிப்பட்ட அழுத்தம் இருக்கத்தான் செய்யும். ஆனால் சாதிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அணி சிறந்த வீரர்களைக் கொண்டுள்ளது. சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவோம்" என்று டினேஸ் கார்த்திக் மேலும் தெரிவித்தார். (ம)



நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரில் விளையாடும் ஒவ்வொரு அணிகளும் தத்தமது பயிற்சி முகாமை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. ராஜஸ்தான் அணியின் பயிற்சி முகாமில் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட ஒளிப்படமே இது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.